

31 JAN 1944

வசந்தம்

விலை
8
அணா

தாரண - மார்கழி

1944 - டிசம்

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25

வசந்தா மில்ஸ் லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் எஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஆம் கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:
20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முறுக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:
வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்,
தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.
600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.



31 JAN 1945

இதை அகற்றுக!

காலிகோ

CHARKHA BRAND

தையல் நூலை

உபயோகியுங்கள்

உறுதியாகவும், உயர்ந்த முறையிலும் சிக்கு முடிச்சில்லாமலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

N 340

தி அஹமதாபாத் மானுபாக்சரிங் அண்டு காலிகோ பிரிண்டிங் கம்பெனி லிமிடெட், அஹமதாபாத்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ESTABLISHED 1919.

தலைமை ஆபீஸ்:
பம்பாய்.

மதராஸ் கிளை ஆபீஸ்:
4&5 முதல் லைன் பீச்

தலைமை ஸ்தானம்.

சகலவித இன்ஷ்யூரன்ஸ்களும் செய்யும் இந்திய கம்பெனிகளுள் எந்தவிதமாய்ப் பார்த்தாலும் தலைமை ஸ்தானம் “நியூ இந்தியா” வுக்கே உரித்தானதென்பதில் ஐயமில்லை.

டாடா குடும்பத்தினரின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்டு வியாபாரத்துறையில் பிரசித்தி பெற்ற டைரக்டர்களால் மேற்பார்க்கப்பட்டு, ஒப்பும் இணையுமற்ற நிபுணர்களால் கம்பெனியின் காரியங்கள் நடத்தப் பெற்று, செல்வாக்குள்ள ஏஜென்ஸி தொடர்புகளும் பெற்று, ‘நியூ இந்தியா’ கடந்த காலத்தில் புகழத்தக்க நிலையை அடைந்திருக்கிறது. எதிர் காலத்தில் இன்னும் உயரிய நிலையைத் துரிதமாய் அடையுமென்றால் அது மிகையாகாது.

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் நாடுகளிலுள்ள முக்கிய பத்து கம்பெனிகளின் கையொப்பமிட்ட மூலதனம் (Subs Capital) சராசரி மதிப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது எமது கையொப்பமிட்ட மூலதனம் (Subs Capital) இரண்டு பங்குக்கு மேலாக உள்ளது (over two to one.) இந்தியாவிலேயே அதிகப்படி கையொப்பமிட்ட மூலதனம் எங்களுடையது தான். உலகத்திலுள்ள மிகப் பெரிய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றாகவும் விளங்குகிறது.

கம்பெனி கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் நடத்துகிறது:-

- அக்கினி பிரமாதத்தால் ஏற்படும் நஷ்ட ஈடு, கப்பல் ஏற்றுமதி சரக்குகளுக்கு ஏற்படும் சேதத்திற்கு ஈடு, மோட்டார் கார், லாரி இவைகள் ஒன்று மேல் ஒன்று மோதியோ அல்லது மோதியதின் காரணமாக மனிதர்களுக்கும் பொது உடமைகளுக்கும் ஏற்படும் நஷ்டஈடு, தொழி ஜாமீன் பத்திரம்(Fidelity Bonds) மில் சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஆபத்தால் ஏற்படும் நஷ்ட ஈடு (Workmen's compensation) முதலியன.

எல்லா ஜில்லாக்களிலும் ஏஜெண்டுகள் தேவை.

கே. கணபதி. பிராஞ்சு மானேஜர்.



பஞ்சநதி பாயும் பஞ்சாபில்—
தேநீர் அருந்தும் நேரம்

கோடைக் காலம் பகலில் உஷ்ணம் அதிகம். தாங்கமுடிகிறதில்லை. உஷ்ணத்தை உணராமலிருக்க, மாலை நேரங்களில் பஞ்சாபிகள், வீட்டுக்கு வெளியே—அநேகமாய் அம்பலத் தோப்புக்களில் பொழுது போக்குவது வழக்கம். சூரியாஸ்தமனம் ஆனபின்பு, குளிர் தாக்கி விடாதபடி அவர்களை பாதுகாப்பது தேநீர்.

பால், சீனியுடன் கலந்துவைத்த தேநீர் சிங்காரமானலோட்டாக்களில் இருந்து விநியோகிக்கப்படுகிறது. திடகாத்திரமுள்ள தேகமும், தாராளமான மனதும் உள்ளவர்கள் நிறைந்த நாடல்லவா? இங்கே கோப்பைகளில் தேநீர் அருந்துவது திருப்தி கொடுப்பது இல்லை. பித்தளைச் செம்புகளிலோ அல்லது பெரிய கண்ணாடி டம்ளர்களிலோ தேநீர் அருந்துவதுதான் இங்கு உள்ள நாகரீகம்.

பஞ்சாப் ஆடவர்கள் பெண்டிர்களுடைய உடை வனப்பும், தோப்புக்களின் இனிய காட்சியும் கண்டவர் கண்முன் என்றும் தாண்டவம் ஆடிக்கொண்டே இருக்கும்.

இந்தியாவின் மற்றப் பிரதேசங்களைப் போலவே, இங்கும் புத்தம் புதிய ப்ரூக் பாண்ட் தேயிலைக்கு நல்ல கிராக்கி இருக்கிறது.

ப்ரூக் பாண்ட்

" இரு இலையும் ஒரு மொட்டும் . . . "

நான்கு வருஷங்களுக்கு முந்திய நித்திய காட்சி.

இந்தக் காட்சிக்கு எண்ணெயும் அதைச் சேர்ந்தவைகளும் அநேக வழிகளில் உபயோகமாய் இருந்தன. மோட்டாரில் உள்ள பெட்ரோல் மற்ற எண்ணெய்கள், டயர்கள் தயாரிக்கப்படுவதற்கு தேவையான வரைக்கும் சக்தியுடைய எண்ணெய், கார்பன், ரஸ்தாக்களுக்கு பிட்டுமன் எண்ணெய் இவைகளெல்லாம்.

சிக்கனம் என்பது யுத்தகாலத்தின் அவசியம். நேசநாடு நாட்டின் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் மெஷின்களுக்கு அதிகப்படியான அளவில் எண்ணெய் போகவேண்டியது அவசியம். கடினமான சிக்கனத்தை கையாளுவதின் மூலம் நாம் ஒவ்வொருவரும் விரோதிகளை தோற்கடிப்பதில் மதிப்பு வாய்ந்த சேவையைப் புரிகிறோம்.

காலம் வரும்போது பர்மா ஷெல் கம்பெனியார் இந்தியா பூராவுக்கும் உயர்தரமான பெட்ரோல் எண்ணெய் வகைகளை சிரமமின்றி கிடைப்பதற்கு வேண்டிய முயற்சி செய்வார்கள்.

பர்மாஷெல் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது.

BSGK69TM

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் மதருஸ்

OVERSEAS REPRESENTATIONS

FRASER SQUARE.

COIMBATORE.

DEALERS IN ALL KINDS OF

HARDWARE, MILL STORES ETC.

A TRIAL ORDER WILL

CONVINCE YOU.

தமிழிசை விழா, சென்னை 1944-45.

திறப்பாளர்: ஸர், பி. டி. ராஜன் அவர்கள் பார்-அட்லா.

செயின்ட் மேரிஸ் ஹால், அரண்மனைக்காரத்தெரு. ஜி. டி.

23—12—44
திறப்பு விழா: **மாலை 4-½-மணி:** தமிழிசைக் கல்லூரி மாணவிகள் **டி. அமிர்தவல்லி, கமலா & பார்ட்டி** சொற்பொழிவு. மாலை 7-மணி—**திருமதி கௌசல்யா இராமகிருஷ்ண ரெட்டி**— [—பாட்டு வீணையும் பாட்டும். சென்னை வேணு நாயக்கர்—மிருதங்கம்.

24—12—44
மாலை 4-மணி: சென்னை **பி. வேதாசலம் செட்டியார்** & பார்ட்டி—வாய்ப்பாட்டு
மாலை 6-மணி: செம்பை **வைத்தியநாத பாகவதர்**—வாய்ப்பாட்டு. மைசூர். டி. சௌடய்யா—பிடில் இராமநாதபுரம் முருகபூபதி—மிருதங்கம்.

25—12—44
மாலை 4-மணி: மைலம் **பி. வஜ்ஜிரவேலு முதலியார்** & பார்ட்டி—வாய்ப்பாட்டு.
மாலை 6-மணி: இசைவாணர் எம். கே. **தியாகராஜ பாகவதர்**—பாட்டு. டி. குருராஜப்பா—பிடில் குற்றாலம் சிவவடிவேலு பிள்ளை—மிருதங்கம். பாலக்காடு வில்வாத்திரி ஐயர்—கடம். மன்னார்குடி நடேசம் [பிள்ளை—மோர்சிங்.

26—12—44
மாலை 4-மணி: திருவாரூர் **டி. வி. நமச்சிவாயம்** & பார்ட்டி—வாய்ப்பாட்டு.
மாலை 6-மணி: எம். எம். **தண்டபாணி தேசிகர்**—வாய்ப்பாட்டு. இராஜமாணிக்கம் பிள்ளை—பிடில், எம். சுப்பிரமணியம் பிள்ளை—மிருதங்கம்.

27—12—44
மாலை 4-மணி: திருமதி **பி. ஆர். திலகம்**-வாய்ப்பாட்டு. பாபநாசம் பாலசரஸ்வதி-பிடில், என். பி. ஹம்ஸ [தமயந்தி-மிருதங்கம்
மாலை 6-மணி: திருமதி **பாலசரஸ்வதி**—பரத நாட்டியம்.

28—12—44
மாலை 4-மணி: சிதம்பரம் **ஜெயராம் பிள்ளை** & பார்ட்டி—வாய்ப்பாட்டு.
மாலை 6-மணி: திருமதி **என். சி. வஸந்த கோகிலம்**—வாய்ப்பாட்டு. திருவாளபுத்தூர் கிருஷ்ண மூர்த்திபிள்ளை—பிடில். இராமநாதபுரம் ஈஸ்வரன்—மிருதங்கம்.

29—12—44
மாலை 4-மணி: தேரழுந்தூர் **சீனிவாசாச்சாரியார்** & பார்ட்டி—வாய்ப்பாட்டு.
மாலை 6-மணி: திருப்பாம்புரம் **டி. என். சுவாமிநாத பிள்ளை**—புல்லாங்குழல். சங்கீத கலாநிதி துவாரம் வெங்கட்சாமி நாயுடு—பிடில், தஞ்சாவூர் இராமதாஸ ராவ்—மிருதங்கம்.

30—12—44
மாலை 4-மணி: மன்னார்குடி **கே. சாவித்திரி** & பார்ட்டி—கோட்டு வாத்தியம்.
மாலை 6-மணி: கான கலாதர **மதுரை மணி ஐயர்**—வாய்ப்பாட்டு இராஜமாணிக்கம் பிள்ளை—பிடில் சுப்பிரமணியம் பிள்ளை—மிருதங்கம்.

31—12—44
மாலை 4-மணி: **எம். எல். வசந்த குமாரி** & பார்ட்டி—வாய்ப்பாட்டு.
மாலை 6-மணி: **ஜி. என். பாலசுப்பிரமணியம்**—வாய்ப்பாட்டு கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளை—பிடில் பாலக்காடு மணி ஐயர்—மிருதங்கம் சென்னை வேணு நாயக்கர்—கஞ்சிரா.

1—1—45
மாலை 4-மணி: **கே. பி. கிட்டப்பா** & பார்ட்டி—வாய்ப்பட்டு.
மாலை 6-மணி: திருமதி **எம். எஸ். சுப்புலட்சுமி**—வாய்ப்பாட்டு டி. டி. சங்கர ஐயர்—பிடில் கல்பாத்தி இராமனாதன்—மிருதங்கம் சென்னை வேணு நாயக்கர்—கஞ்சிரா.

2—1—45
மாலை 4-மணி: நடன கலாமணி **ஏ. என். பெரியநாயகி**—பரத நாட்டியம்.
மாலை 6-மணி: இயல் இசைப் புலவர் **சீவளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை**—வாய்ப்பாட்டு சேலம் விஸ்வநாத சர்மா-பிடில் குற்றாலம் சிவவடிவேலு பிள்ளை-மிருதங்கம் மன்னார்குடி வைத்தியலிங்கம் பிள்ளை- [கொன்னக்கோல்

3—1—45
மாலை 4-மணி: மதுர கான ஸ்ரீமதி **என். ஏ. சுந்தரம்** & பார்ட்டி—வாய்ப்பாட்டு,
மாலை 6-மணி: திருவாங்கூர் ஆஸ்தானவித்வான் **பி. எஸ். வீருசாமி பிள்ளை, டி. என். நடராஜ சுந்திரம் பிள்ளை**—நாதஸ்வரம் நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை—தவுல்

நிகழ்ச்சிகள் மாற்றத்திற்குரியன.

கட்டணம்: சீசன் டிக்கட்டு 1-ம் வ. ரூ. 32, 2-ம் வ. ரூ. 24, 3-ம் வ. ரூ. 12.

சீசன் டிக்கட்டுகள் 20—12—44-ந் தேதி வரை

கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும்.

1. தமிழ் இசைச் சங்கம் 8-9. சிங்கண்ண நாயக்கன் தெரு, ஜீ. டி. 2. ஜி. கே. வேல் அண்டு கம்பெனி. 23, மவுண்டு ரோடு. 3. வாணி பார்மசி, 137, பிராடீஸ் ரோடு, மைலாப்பூர். 4. தமிழ்ப்பண்ணை, பனகால் பார்க். தியாகராயநகர். 5. பார்க்கர் அண்டு கம்பெனி, 127, புரசவாக்கம் ஹைரோட். 6. 269—270, திருவல்லிக்கேணி ஹைரோட்.

முதல் வகுப்பு சீசன் டிக்கட்டு வாங்குபவர்கள் சங்கக் காரியாலயத்தில் ரூ. 5 தனிக்கட்டணம் கட்டி ஒரு சீட் ரிசர்வ் செய்து கொள்ளலாம்.

ஆதரவாளர்கள் குறைந்த கட்டணத்தில் சீசன் டிக்கட்டுகள் வாங்கவேண்டுமானால், தங்கள் ரசீதைக் காட்டி சங்கக்காரியாலயத்தில் மட்டும் பெற்றுக்கொள்ளலாம்.

வசந்தம்

மலர் 3] பொருளடக்கம் [இதழ் 8

கோயிலும் குளமும்	...	"கதிரவன்"	... 1
பசிக்கு ஒரு மருந்து	...	"மலர் முகம்"	... 2
நிலா	...	ரா, அ.	... 3
ஆசீர்வாதம்	...	ஜெயலட்சுமி சீனிவாசன்	... 4
சீனுவின் மறுமலர்ச்சி	...	கோ. நீ. அண்ணாமலை	... 7
சாவித்திரி	...	ஆர். ஷண்முகசுந்தரம்	... 17
அண்ணன் செய்த உதவி	...	சி. ஆர். ராமசுவாமி	... 28
கவிதை மணம்	...	சி. எஸ். ஆர்	... 34
யுத்தகால இலக்கியம்	...	"சுகி"	... 35
கலைக்கோயில்	...	சுத்தானந்த பாரதி	... 40
பறக்கும் மனிதன்	...	'வில்லன்'	... 49
லட்சிய பூர்த்தி	...	வெ. ராமராவ்	... 56
கார் விடு தூது	...	'மாறன்'	... 58
சிலப்பதிகாரம்	...	சர். சண்முகம் செட்டியார்	... 64
திரிமூர்த்திமலை	...	தா. நாகலிங்கம்	... 69
புத்தக ஆராய்ச்சி	...	'உமாபதி'	... 75
திரைகடலோடியும்	...	கே. விஜயராகவன்	... 76
மலர் மணம்	...	... ...	... 82

விளம்பர அட்டவணை

வசந்தா மில்ஸ் – அட்டை (முன் உள்) பக்கம் ...	...
காலிக்கோ தையல் நூல் ...	... I
நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் ...	... II
புரூக் பாண்ட் ...	... III
பர்மாஷெல் ...	... IV
உம்முடியார், ஓவர்ஸீஸ் ரெப்பிரசென்டேஷன் ...	... V
தமிழிசை விழா ...	... VI
சிம்ஸன் ...	... VIII
ஏ. பி. ஆர், கவர்னர் யுத்தநிதி ...	... IX
பத்மனுப நாயுடு, மைசூர் சந்தன எண்ணெய் ...	... X
அரவிந்மில்ஸ் ...	... XI
வெள்ளையப்ப செட்டி, பிமைய செட்டி, ஆர்ய வைத்தியர், வசந்தா டையிங் ஒர்க்ஸ், கே. பி. ஆர்.	... XII
டாடா ஆயில் (ஹமாம் சோப்பு) ...	... XIII
பர்மாஷெல், கோயமுத்தூர் ...	... XIV
ராஜு செட்டி–அட்டை பின் உள் பக்கம் ...	...
ஜுபிடர் பிக்சர்ஸ் அட்டை கடைசிப் பக்கம்	...

★

தாரண

மார்கழி



ஸிம்ப்சன் க்யாஸ் ப்ளாண்ட்கள் தங்கள் சக்தியை நிரூபிக்கின்றன.

இந்த நெருக்கடியான காலத்தில் ஆயிரக்கணக்கான ஸிம்ப்ஸன் க்யாஸ் ப்ளாண்ட்கள் தினந்தோறும் ஓயாமல் ஓடிக் கொண்டிருக்கும் போக்குவரத்து சாதனங்களை மிகசிக்கனமாகவும் சுலபமாகவும் தங்கள் வேலையை செய்து முடிக்க உதவுகின்றன.

இவைகளின் உழைப்புத் தன்மையையும் எவ்வளவு கடினமான போக்குவரத்தாயிருந்தாலும், நம்பிக்கையுடன் வேலை செய்யுக் திறமையையும், அபார சக்தியையும் தினந்தோறும் வந்து கொண்டிருக்கும் செய்திகள் மேலும் மேலும் ஊர்ஜிதம் செய்கின்றன. இந்த நம்பிக்கைக்கு காரணம் ஸிம்ப்ஸனின் என்றென்றைக்கும் வழக்கமான உயர்ந்தரக தயாரிப்பேயாகும். சிம்ப்ஸன்ஸ் க்யாஸ் உற்பத்தி செய்யும் பிளாண்டுகள் தான் மிகவும் உயர்தரமானவை. இன்று இந்தியாவிலே 8000க்கு அதிகமாக வேலை செய்து வருவது.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்.
மவுண்ட்ரோடு, மதராஸ்.

1840-ல் ஸ்தாபிதம் செய்யப்பட்ட ஒரு இந்திய தொழிற்சாலை.



நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான்

—கம்பர்

அட்டைச் சித்திரம்:

கோயிலும் குளமும்

நிழலென் றென்னை யிகழாதீர்!
நிழலைப் பிரிந்த பொருளுண்டோ?

அழியா உயிரைப் பிரிந்தவுடல்
அதனோ டுயிர்போல் அமர்ந்திருப்பேன்

வழுவா நேயன் என்னைப்போல்
வையத் துண்டோ? வகைவகையாம்

அழகின் செருக்கைச் சமனாக்கும்
ஆற்றல் எனது தோற்றமதே

குளமும் கோயிலும் ஒன்றாகும்
குவலயத் துள்ளார் ஒன்றாவார்.

வாழ்வில் ஏற்றத் தாழ்வில்லை.
வாழும் வகையும் இதுவேயாம்

எந்த மதமும் சமரசமாம்
இந்த உண்மை உணர்ந்திடுவீர்!

‘கதிரவன்’

பசிக்கு ஒரு மருந்து

என் அருமை நண்ப,

உன் கடிதம் என்னைத் திடுக்கிடச் செய்து விட்டது. நமது நட்பு, கருத்து ஒற்றுமையையும் அன்பையும் அடிப்படையாகக் கொண்டது. அதில் எவ்வித மாசும் கிடையாது. இது உண்மை. அப்படியிருக்க என் நோக்கத்தை, என் லட்சியத்தை நீ சரியாக அறிந்து கொள்ளாத காரணம் என்ன?

நியாயத்திற்கு மாறாக நான் என்றும் நடக்க மாட்டேன் என்பது நீ அறியாததா? உன் மனம் நோகும் எக்காரியத்தையும் நான் தெரிந்து செய்ய மாட்டேன் என்பதை ஏன் நீ மறந்துவிட்டாய்?

மலரும் மணமும், உயிரும் உடலும், நகமும் சதையும், மரமும் கொடியும் மாதிரி யல்லவா நாமிருவரும்? ஒன்றில்லாமல் மற்றொன்று வாழ முடியுமா? **பின்** ஏன் உன் மனதில் சந்தேகப் பேய் எழுந்தது? நான் தான் நடுவழியிலிருந்து தவறி விட்டேனா, அல்லது நீ தான் வழிதப்பி விட்டாயா?

அடிஸன், ஸ்டீல் என்ற இரட்டையர்கள் ஆங்கில இலக்கிய உலகில் உண்டு. ஒரு கதா பாத்திரத்தை ஒருவன் சித்தரிப்பான். ஒருவன் விட்டதை மற்றவன் பூர்த்தி செய்வான். இருவரும் சேர்ந்து ஒரு கதாநாயகியை சிருஷ்டித்து வளர்த்து உலகுக்கு அளித்திருக்கிறார்கள். அது மாதிரியல்லவா நாமிருவரும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன்!

ஆணின் அமைப்பில் ஓரளவு பெண் தன்மையும், பெண்ணின் வடிவில் சிறிது ஆண் தன்மையும் இருந்தால்தான் இரண்டும் சேர்ந்து உலகத்தை ஒளியுறச்செய்ய முடியும் என்பது என் கருத்து.

எம்மாதிரிப் பெண் தன்மை ஆணிடம் வேண்டும்? அன்பு, பொறுமை, வாத்ஸல்யம் முதலிய கல்யாண குணங்கள் ஆணிடம் இருக்கவேண்டும். தொட்டால் சுருங்கும் பெண் குணம் ஆயிரம் காணக்கூடாது. பெண்ணுக்குள்ள அச்சம் ஆணிடம் அணுவளவும் இருக்கலாகாது. அப்படியிருக்கையில் அச்சம் எப்படி உன்னை அணுகிற்று.

நண்பர்களுக்குள் சந்தேகம் இருத்தலாகாது. நம்தோழன் நம்மைக் கைவிடமாட்டான் என்கிற உறுதி வேண்டும்.

நாம் கைகோர்த்துச் சென்றோமானல் நடக்கமுடியாத வழியில்லை. நம் எதிரில் எதுவும் ஒன்றும் செய்துவிட முடியாது. நம்பு இதை. உறுதியாக நம்பு.

திக்குத் தெரியாத காட்டில் தேடித்தேடி அலைந்தேன். பசிக்கு ஒரு மருந்தே போல் உன்னைக் கண்டேன். கரை சேர்ந்தேன். களிப்புற்றிருந்தேன். அதற்குப் பங்கம் வராமல் என்றும் நாம் செல்வோம்.

அகண்ட உலகில், இருள் கௌவிக் கொண்டு திகைப்பூட்டும் சமயத்தில் நீ நிலா ஒளி போல் தோன்றினய். உள்ளம் பூரிப்படைந்தது. அகம் மகிழ்ந்தது. இன்பக் கனவு கண்டது. மலையையும் எதிர்த்து நிற்கும் மனேதிடம் உதித்தது. அந்த திடம் தளர்ச்சியடையும் காரியம் எதுவும் நடக்காது என்று ஏதோ ஒன்று கூறுகிறது.

தம்பீ! என்றும்போல் புன்னகை புரி! அச்சம் கொள்ளாதே! சந்தேகத்தை மாய்த்து விடு நான் இருக்க கவலைப்படாதே. நீ இருக்க எனக்கு வேறென்றும் தேவையில்லை. வா செல்வோம், ஆனந்தமாக இன்ப உலகை நோக்கி.

உன் அருமை
"மலர் முகம்"

நிலா

[ரா. அ]

ராகம்: கமாஸ் தாளம்: ஆதி

பல்லவி

அழகுக்கும் கவிதைக்கும் உயிரே — ஒளி
அமுதத்தின் உருவான நிலவே! (அழ)

அநு பல்லவி

ஒழிவற்ற இன்பத்தின் உறைவிடம் நீயோ,
உள்ளத்தை மலர்விக்க மெள்ள வந்தாயோ?
(அழ)

சரணம்

காற்றிலும் கடலிலும் கள் வெறி கூட்டி,
காதலர் நெஞ்சத்தில் களியனல் மூட்டி,
பாற்கடல் பொங்கி வழிவது போலே
பார் ஒளி கொள்ள முளைத்தனை மேலே. (அழ)

சென்னை ரேடியோ நிலையத்தில் 1—12—44ல் நடந்த திருஞானம் எழுதிய "வெள்ளமும் வேகமும்" நாடகத்திலிருந்து அனுமதியுடன் வெளியிட்டது.

ஆசீர்வாதம்

[ஜெயலட்சுமி சீனிவாசன்]

“வேர்க்கடலே, வேர்க்கடலே” என்ற குரல் தெருவில் கேட்டது. கிட்டு விழுந்தடித்துக் கொண்டு வெளியே ஓடி, ‘வேர்க் கடலே’ என்று கூப்பிட்டான். கிட்டு தப்பித்தவறி எங்கேயாவது சென்றிருந்தால்கூட அவனுக்குப் பதிலாக நான் அந்த வேர்க்கடலேக் காரனேக் கூப்பிடப் பின் வாங்குவதில்லே. முனியனின் வேர்க்கடலே எங்கள் வட்டாரத்திலேயே பேர் போனது. பள்ளிக்கூடத்தின் முன், சென்று விட்டானுனல் அவனேச்சுற்றி, தேனீக்கள் மொய்ப்பதுபோல் சிறுவர்கள் சூழ்ந்து கொள்வார்கள். அவரவர்கள் கையிலிருக்கும் ஒரு தம்படி முதல் ஒரு அணு வரை அவன் கையில் வைத்து வேர்க்கடலேக் கடையை வெகு சீக்கிரம் காலி செய்து விடுவார்கள்.

தெருத் தெருவாய் அலேந்து திரிவதின் விளேவாய் சோர்வுற்று, ஒவ்வொரு நாளேக்கு அவன் எங்கள் வீட்டுத் திண்ணேயில் வந்து கொஞ்சநேரம் உட்க்கார்ந்து ஓய்வெடுத்துக்கொள்வது வழக்கம். அப்பொழுது அம்மாவைக் கேட்டு கொஞ்சம் நீர்மோர் வாங்கிக் குடித்துவிட்டுக் கொஞ்சநேரம் வம்பும் அளந்துவிட்டுச் செல்வான். எனக்கும் என் தாயாருக்கும், முனியனிடம் என்ன காரணத்தினுலோ ஒருவித அன்பு ஏற்பட்டது. ஒரு நாள் அவனுடைய குரல் தெருவில் கேட்காமல் போனுல்க்கூட எங்களுக்கு ரொம்பக் கவலேயாயிருக்கும்.

பத்துப் பதினேந்து நாட்களாக தெருவில் முனியனேப் பார்க்க முடியவில்லே. எங்களுக்கெல்லாம் அவன் விஷயமாக ரொம்பக் கவலே ஏற்பட்டது.

“இதென்னடா இது! எப்பொழுது பார்த்தாலும் வீட்டில் முனியனேப் பற்றிய பேச்சுத் தானு? அவன் என்ன நமக்கு கூடப் பிறந்த பிறப்பா, அல்லது உறவா?” என்று அப்பா கண்டிப் பார். அப்பாவுக்குஎப்படியிருந்தாலும் எங்களுக்கென்னமோ அவன் ஒரு உறவினனுகத்தான் தென் பட்டான்.

எங்கள் ஆவலேயும், கவலேயையும் அறிந்தோ அறியாமலோ எங்கள் மனக் குழப்பத்தைப் போக்குவதற்காக கடைசியில் “வேர்க்கடலே, வேர்க்கடலே” என்று கூவிக் கொண்டு முனியன் வந்தே விட்டான்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. இரண்டு மணி இருக்கும். அப்பா அவர் அறையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். அம்மா நடுக்கூடத்தில் ஒரு பாய் மீது உட்கார்ந்து ரவிக்கை தைத்துக் கொண்டிருந்தாள். நானும் அவள் அருகிலேயே உட்கார்ந்து கிட்டுவிற்கு கணக்கு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தேன். அவனுடைய பழகிய குரலேக் கேட்டதும் நாங்கள் மூவரும் திடுக்கிட்டெழுந்து சென்ருேம். எங்கள் இதயத்தில் இருந்த ஓர் விதக் கவலே அகன்று கலகலப்

பேற்பட்டது. முதலில் கிட்டு ஓடிப்போய் 'வேர்க்கடலை'என்று தன் சகஜமான முறையில் முனியனை அழைத்தான்.

முனியனுடைய தோற்றம் அன்று என்றைக்கும்போல் இருக்கவில்லை. ஒரு புதிய மாறுதல் இருந்தது. தலையில் இருந்த கூடையைத் தவிர, இடுப்பில் நான்கு வயதுடைய குழந்தையொன்றையும் தாங்கியவனுய்த் தரிசனம் அளித்தான். எங்கள் வீட்டுத் திண்ணை மீது கூடையையும் குழந்தையையும் இறக்கினுன்.

"குழந்தையை ஏண்டா நீ இப்படிச் சுமந்து கொண்டு அலைகிருய்? அதன் தாயாரிடத்தில் விட்டு விட்டு வருகிறதுதானே?" என்ருள் அம்மா.

"ஐயோ, அந்த வகுத்தெரிச்சலே ஏன் கேக்கறீங்க அம்மா. அவள் பத்து நாளா ரொம்ப சீக்காப் படுத்துட்டாங்க. அப்புறம் இவனையும், என்னையும் விட்டுட்டு கண்ணை மூடிட்டாங்க அம்மா. அதனுலேதானுங்க இத்தனை நாளாவே வர முடியலிங்க......" என்ருன் முனியன். அதற்குமேல் அவனுல் பேச முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. ஒன்றிரண்டு விஞடி வரைக்கும் அவ்விடத்தில் மௌனம் நிலவிற்று. அப்புறம் கொஞ்சம் சமாளித்துக் கொண்டு அவனுகவே பேச ஆரம்பித்தான்.

"அம்மா எல்லாரும் இன்னெரு கலியாணம் கட்டிக்கச் சொல்ருங்க. அந்தத் தங்கமான பொஞ்சாதியை அனுப்பிச்சுட்டு எனக்கு இனிமே என்ன சொகம் வேண்டிக்கிடக்குதுங்க? என் பங்குக்கு இது ஒண்ணுதான். சொகம் சந்தோசம், ஆசை எல்லாம் இவன்தானுங்க" என்று சொல்லி, அன்பு கனியபையனின் முதுகைத்தடவிக் கொடுத்தான். இவனைஎன்னண்ணு நினைக்கிறீங்க? கொள்ளை சூட்டிப்பு கண்ணு பெரிய பெரிய பாஸெல்லாம் செஞ்சு, கை நெறைய காசு சம்பாதிக்கப் போருன், இவனை அடுத்த வருஷம் பள்ளிக்கூடத்தில் சேக்கப் போறேம்மா" என்ருன் முனியன். அவன் முகத்தில் தான் எவ்வளவு ஆனந்தம்! எவ்வளவு பெருமை!......

முனியன் இப்போது தன் மகனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டான். சாயங்காலம் ஆறு அல்லது ஏழு மணிக்குத் தன் வேர்க்கடலை வியாபாரத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்புவான். பிறகு சமைக்கும் சாப்பாட்டைத் தானும் மகனுமாகச் சாப்பிட்டு விட்டு, மிச்சமிருப்பதைக் காலையில் சாப்பிட வைத்து விடுவான். காலையில் இருவரும் பழையது உண்ட பிறகு அதில் சொற்பத்தை இரண்டாம் தரத்திற்கென்று பையனுக்குக் கட்டிக் கொடுத்து அவனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி விட்டு, தானும் வியாபாரத்திற்குப் புறப்பட்டு விடுவான்.

தன் மகன் ரங்கன் படித்துப் பாஸாகி பெரிய உத்தியோகம் பார்க்க வேண்டும் என்பதில் முனியனுக்கு அளவற்ற ஆசை. பையனுடைய சுறுசுறுப்பையும், புத்திசாலித்தனத்தையும் பார்த்து என் தாயார் "உனக்கென்னடாப்பா குறைச்சல்? உன் பையன் நாளைக்கு ஒரு பெரிய உத்தியோகத்தில் அமர்ந்து கை நிறையச் சம்பாதிக்கப் போருன். அப்போது நீ எங்களை யெல்லாம் மறந்தே போய் விடுவாயோ என்னமோ?" என்பாள் சிரித்துக் கொண்டே.

" அம்மா, நீங்க மஹாலட்சுமி மாதிரி. எல்லாம் உங்க ஆசீர்வாதந் தானுங்க. உங்க ஆசீர்வாதத்தினு லேதான் என்கண்ணு ரங்கன் நல்லாப் படிச்சுப்பான்" என்று நன்றி யறிதலுடன் என் தாயா ருக்கு பெரியதொரு கும்பிடு போடு வான். அப்பொழுதே தன் மகன் பெரிய தொரு உத்தியோகத்தை வகித்து விட்டதாகவே எண்ணிக் கொள்வான்.

தெரிந்தது. உடனே நான் அவனை கூடவே வீட்டிற்கு அழைத்து வந்து, அப்பாவிடத்தில் சொல்லி மறு நாளே ரங்கனை இருநூறு ரூபாய் செக்குடன் பெங்களூர் அனாதை ஆசிரமத்து மானேஜரிடம் ஒப்படைத்து விட்டேன்.

வருஷங்கள் பல சென்றன. இப்பொழுது நான் சென்னையில் என் மாமனாரிடத்தில் ஜூனியர் வக்கீலாக இருக்கிறேன்.



ஒரு மாதமாகத் தெருவில் முனி யனின் நடமாட்டத்தையே காணோம். எங்கள் வீட்டினர் எல்லோர் மனதிலும் சகஜமான குழப்பமும் கவலையும் தென்பட் டன. கேட்டவர்களெல்லாம் அவன் விஷய மொன்றும் தெரி யாது என்று சொல்லி விட்டனர்.

ஒரு நாள் மாலை நான் குதிரை வண்டியில் வந்து கொண்டிருந்த போது ரங்கனைக் கண்டேன். விசா ரித்ததில் முனியன் காயலாவாகப் படுத்திருந்து இறந்ததாகவும், அத னால்தான் அனாதையாகி பிச்சை எடுக்கும் நிலைமைக்கு வந்ததாகவும்

ஒருநாள் சாயங்காலம் அன்றைய பத்திரிகையைப் படித்துக்கொண் டிருந்தேன். அதில் ஒரு புகைப் படம் அச்சிடப் பட்டிருந்தது. அதன் கீழே ' இத்தடவை மைசூர் சிவில் சர்வீஸ்பரீட்சையில் முதன் மையாகத் தேறின ஸ்ரீ ரங்கன் பி. எஸ். ஸி.' என்று போட்டிருந்தது. படத்தை உற்றுப் பார்த்தேன். துளிகூட சந்தேகமில்லை. வேர்க் கடலை முனியனின் மகன் ரங்கன் தான். அவன் இடது கண்ணின் கீழ் இருந்த தழும்பும் படத்தில் பளிச் சென்று தென்பட்டது. ஆமாம்! ஆசீர்வாதம் பலித்து விட்டது.

சீனவின் மறுமலர்ச்சி

கோ. நீ. அண்ணுமலை

டாக்டர் சன்-யட்-சன் என்று சொன்னல், உலகத் தலைவர்கள் கூட்டத்தில் ஒருவர் என்ற வரைக்கும் உலகம் அவரை அறியும். ஆனல் சீன தேசமோ அவர் பெயரைக் கேட்டவுடன் உள்ளம் பொங்க, உவகை தவழ தோள் கொட்டி ஆர்ப்பரிக்கிறது. காரணம் என்னவென்ருல் மறு மலர்ச்சி பெற்ற சீனத்தின் தனிப் பெருந் தலைவரே டாக்டர் சன் யட் சென்.

அவர் ஒரு சுதந்திரப்பிரியர். கோழைத் தனமோ, நெஞ்சமுழுத்தமில்லாமையோ, அல்லது அரசியல் குள்ளநரித்தனமோ இல்லாதவர். தன் மனப் போக்கில், நிதானம் பிறழாமல் — உறுதி குலையாமல் காரியத்தைச் செய்து கொண்டு போகும் — போன உலக மாபெருந் தலைவர்கள் கூட்டத்தில், டாக்டர் சன் யட் சென் தனிச் சிறப்பு வாய்ந்தவர். அதனல் தான் அக்காலத்தில் தோன்றிய குடியரசும் நிலைத்து நிற்கிறது.

அப்போதைய சீன, முழு மூடர்கள் நிரம்பிய மௌடீக உலகப் பகுதியின் தலைமை நிலமாகவே இருந்தது! அந்தத் தன்மையை மாற்ற வேண்டுமென்பதற்காக டாக்டர் சென், தனது உடல், பொருள், ஆவி மூன்றையுமே பணயம் வைத்திருந்தார். அந்தப் போராட்டத்திலே, அவர் பெற்ற துன்பங்கள் எழுத முடியாதவை. ஆயினும் சென், அவைகளிலிருந்து முக்கால் திட்டம் வெற்றி பெற்ருர். 'எஞ்சிய' கால் பகுதி? அதையே இன்று மார்ஷல் சியாங்கே ஷேக் செய்து கொண்டிருக்கிருர். மார்ஷல் சியாங், டாக்டர் சென்னுக்கு அடுத்த படியாக சீனவின் தலைமைப் பதவியை ஏற்றவர்.

பழைய சீனவில், பிள்ளை பிறப்பதிலிருந்து மரண வீடு செல்லும் வரை உள்ள ஜாதிச் சடங்குகளைக் குறிப்பிடுவோமானல், இந்தியாவில் பல ஜாதியினர் செய்து வரும் சடங்குகளெல்லாம் இதற்கெதிரில் எந்த மூலை? என்ற கேள்விகூட எழும்! அவ்வளவு தூரம் வர்ணிக்க முடியாத — சொல்ல முடியாத சடங்குகள்.! டாக்டர் சன் யட் சென் தாம் தலைமைக்கு வந்தவுடனே இந்தச் சடங்குகள் மீது தான் போர் தொடுத்தார்.

சடங்குகள் என்ருல் — போர் தொடுத்தார் என்ருல் — வெற்றி

அல்லது தோல்வி கண்டார் என்றால் மட்டும் போதுமா? அவைகளின் தன்மை எப்படிப் பட்டதென்பது தெரிய வேண்டாமா? அதற்காக அங்கு நடைபெற்று வந்த முக்கியமான ஒன்றிரண்டு சடங்குகளையும், அது ஒழிக்கப் பட்ட வரலாற்றையும் மட்டும் பார்ப்போம். அதுவே டாக்டர் சென் செய்த சீர்திருத்தத்தின் பெருமையை நமக்குக் காட்டி விடும் அல்லவா? அதிலிருந்துதான் சீனாவும் மறு மலர்ச்சி அடைந்து வருகிறது.

பிறந்த நாள் கொண்டாட்டம்

ஒரு சீனருக்குக் குழந்தை பிறக்கிறதென வைத்துக் கொள்வோம். அன்றைக்கு — அந்த மனிதர் ஒரு பணக்காரராயிருந்தால் குறைந்த பட்சம் 25,000 சீன ரூபாய்கள் அவர் செலவு செய்ய நேரிடும். ஏழையாக இருந்தாலும் கூட எப்படியும் வழக்கப் படிக்கு ஆக வேண்டிய செலவைச் செய்து தான் ஆக வேண்டும். கடன் வாங்கியோ, உள்ள உடமைகளில் எதையாவது விற்றோ அந்த ஏழை, மூடச் சமூகச் சடங்கினால் தன் முதுகைக் கூன வைத்துக்கொள்ள வேண்டியதைத் தவிற வேறு வழியே கிடையாது. அந்த அபாக்கியனான ஏழைக்கு சக்தி இருந்தாலும்,இல்லா விட்டாலும் குறைந்த அளவில் இரண்டு பன்றிகளையும், நூறு 'சம்சு' பாட்டில்களையும் வாங்கி தன் சமூகத்தாருக்கு விருந்து நடத்தி தனக்குக் குழந்தை பிறந்த வைபவத்தைக் கொண்டாடி யாக வேண்டும். இல்லையானால் சமூகம் அவனை எள்ளி நகையாடி அவன் இப்படி ஒரு விருந்தை நடத்தி அதோடு சேர்ந்த வேறு சடங்குகளையும் நிறைவேற்றி வைக்கும் வரை, ஜாதிக்கு விலக்கானவனாக ஆக்கி வைத்து விடும். குழந்தை பிறக்கு முன், ஐந்தாவது மாதத்திலிருந்தே ஒரு சீன குரு கர்ப்பிணியின் வீட்டில் இருந்து வருவார். தாயாகப் போகிறவள், தனக்குக் குழந்தை பிறக்கும் வரை அந்தக் குருவுக்கு வேண்டிய எல்லாவித உபசாரங்களையும் செய்து வருவார். அந்த குருவோ, ஆறுவது மாதத்திலிருந்து கர்ப்பிணியின் நன்மையையும், குழந்தையின் பூரண ஆயுளையும் வேண்டி ஒவ்வொரு நாளும் காலை, மாலை நேரங்களில் கடவுளைப் பிரார்த்தித்து வருவார். பத்தாவது மாதம் குழந்தை பிறந்தவுடனே அவரே முன் நின்று குழந்தையின் தந்தைக்குத் தலையை மொட்டையடித்து, சிகப்பு ஆடைகளை அணிவித்து, இடுப்பில் ஒரு மஞ்சள் துண்டையும் கட்டி பல மந்திரங்கள் சொன்ன பின், குழந்தைக்கு ஆக வேண்டிய சடங்குகளைத் தொடங்குவார்.

பிறந்தது ஆணாக இருந்தால், ஒரு மணி நேரத்துக்குப் பின் மூக்கு எடுக்கும் வைபவம் ஆரம்பமாகும். அதாவது குழந்தையின் மூக்கை சிறிது அமுக்கி விட்டு அதன் தொப்புள்க் கொடியை வாங்கி, அமோகமான சப்தம் நிறைந்த சீன வாத்தியங்கள் முழங்க "பூஸ் ச் சான்" என்னும் குழந்தைகளை வளர்க்கும் ஒரு தெய்வத்திற்குக் கொண்டுபோய்க் கொடுப்பார்கள். இந்தத் தெய்வத்திற்கென்று கோயில்கள் ஒன்றும் கிடையாது. எங்காவது ஊருக்கு வெளியில் இருக்கும் தாமரைக் குளத்தின் அருகில்தான் அந்தச் சாமியிருக்குமாம்! குழந்தையின் தொப்புள்க் கொடியை ஒரு நல்ல பட்டுத் துணியில் வைத்து மூடி அதைத் தந்தையின் மொட்டைத் தலையில் சுமக்கச் செய்து

சுற்றமும், துணையும் சூழ தாமரைக் குளத்தருகே எல்லோருமாக வருவார்கள். இவர்களுக்கெனப் பொரித்த பன்றிகளும், பற்பல விதமான பணியார வகைகளும், 'சம்சு' என்ற ஒரு வகைப் புல்லிலிருந்து வடிக்கப்பட்ட போதை நிரம்பிய சாராயம் முதலியனவும் முன் கூட்டியே இங்கு கொண்டு வந்து மேஜைகளில் வைக்கப் பட்டிருக்கும். குரு இவைகளையெல்லாம் ஒரு பார்வை பார்த்துவிட்டு குழந்தையின் தந்தைக்கு அலங்காரங்கள் செய்ய யத்தனிப்பார். தலையில் நீண்ட துணிச் சடை ஒன்றைக் கட்டி, இன்னொரு சிவப்புச் சட்டையை அணிவித்து, கால்களில் சாமந்திப் பூவைப் போன்ற ஒரு வகைப் பூவைச் சாத்தி 'பூஸ்ச்சா'ஸையும் வணங்க வைப்பார். இந்தச் சடங்குகளுக்குப் பின்னரே விருந்து நடைபெறும்.

குச்சியால் உணவு உண்பவர்கள்தான்! விருந்தில் யாதொரு விதமான ஏற்றத் தாழ்வும் கிடையாது. பணக்காரர் முதல் ஏழைகள் வரை சமபந்தியாயிருந்தே சாப்பிடுவார்கள். அதிலும் தங்களுக்கு முன்னால் மேஜையிலிருக்கும் ஆகாரங்களை அவரவர்களே கோப்பைகளில் எடுத்துப் போட்டுக்கொண்டு, ஒரே தட்டில் உள்ள பதார்த்தத்தை எல்லோருமாகக் குச்சிகளால் எடுத்து மிக வேகமாகச் சாப்பிடுவார்கள். அம்மாதிரி அவர்கள் சாப்பிடுவதைப் பார்க்கும் நமக்கு அக்காட்சி மிக வேடிக்கை யானதாயிருக்கும். குச்சிகளால் சாப்பிடுவதென்பது சீனர்களுக்கும், ஜப்பானியர்களுக்கும் மிகச்சுலபமான வேலை. பிலிப்பைனர்களுங்கூட இம்மாதிரி குச்சியால் உணவு உண்பவர்கள் தான்!

விருந்து முடிந்ததும், நண்பர்களும், உறவினர்களும் ஒருவரிடத்தொருவர் சொல்லிக் கொள்ளாமலே தத்தம் வீடுகளுக்கு போக வேண்டும் என்பது சட்டம்! அப்படிப் போகாமல் யாராவது தங்கிவிட்டால், குழந்தையின் தந்தையும் அவர் தங்கியிருக்கும் வரை தாமரைக் குளத்தருகிலேயே தங்கியிருந்து அவருக்கு வேண்டிய கைங்கரியங்களை எத்தனை நாளானாலும் தானே செய்ய வேண்டும். இவ்வளவுக்கும் இடையில் குரு செய்யும் வேலை அதன் தந்தைக்கு மந்திரம் சொல்லுவதோடு மட்டுமில்லை. அவர் குளத்தருகில் முதலில் சில மஞ்சள் நிறமான காகிதங்களைக் கொளுத்துவார். அதாவது ஹிந்துக்கள் தெய்வங்களைத் தொழும்போது சாம்பிராணிப் புகை எழுப்புகிறார்கள் அல்லவா அதைப்போல்! இதற்கென்றே சீனர், தம் கடைகளில் ஒரு வகையான மங்கல் மஞ்சள் நிறமான காகிதங்களில் தங்க ரேக்கைப் பூசி விற்பனை செய்கிறார்கள். இந்தக் காயிதங்கள் பூஜை செய்வதற்கென்றே ஒவ்வொரு சீனர் வீடுகளிலும் முன் காலங்களில் வாங்கி வைக்கப்பட்டிருக்கும். இப்பொழுதோ அக்காகிதம் பழைய சம்பிரதாயங்களை விடாத சில வைதீக சீனக் குடும்பங்களில் மட்டும் வாங்கி வைத்துப் பூஜை செய்யப்படுகின்றது.

காகிதங்களைக் கொளுத்தியதும் குரு தாமரைக் குளத்தின் முன், கிழக்கு முகமாக நின்று கொண்டு சில மந்திரங்களைச் சொல்வார். அவர் அம்மாதிரி மந்திரங்களைச் சொல்லும்போது குழந்தையின் தந்தை, தம் கையில், தடித்த ஊதுவத்திகள் சிலவற்றைக் கொளுத்தி வைத்துக் கொண்டு தலைக்கு நேராய்க் கொண்டு போய்க் காட்டி

கையை ஆட்டி ஆட்டிக் கும்பிட்டுக் கொண்டிருப்பார். குரு மந்திரம் சொல்லி முடித்ததும் பல வர்ண மெழுகு வத்திகளைத் தம் கையில் கொழுத்தி பன்றிகளைப் பொரித்து வைத்திருக்கும் தட்டுகள் முன்பாக வைப்பார். தயாராக வைத்திருக்கும் பணிகார வகைகளில் கொஞ்சம் எடுத்து காகிதங்கள் கொளுத்தப் பட்டிருக்கும் இடத்தில் கொண்டு போடுவார். அப்படிப் போட்டவுடனே பக்கத்திலுள்ள ஒவ்வொருவரும் ஏராளமான சீன வெடிகளைக் கொளுத்தி அது வெடிக்கும் அதிர்ச்சியில் குழந்தையின் பிறந்த தின விழாவை மகிழ்வுடன் கொண்டாடுவார்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள கொண்டாட்டம் ஆண் குழந்தைக்குத்தான். இந்தக் கொண்டாட்டம் இத்தோடு முடிந்ததென்று நினைக்க வேண்டாம். இதற்குப் பின் சுமார் மூன்று மாதங்கள் வரையும் சில குடும்பங்கள் இந்தக் கொண்டாட்டத்தைக் கொண்டாடுவதுண்டு. ஆனல் குழந்தை பெண்ணாக விருந்தாலோ அது வேறு மாதிரியாக நடைபெறும். அதற்குப் பேர் 'கால் கட்டுக் கொண்டாட்டம்' எனவும் 'சமூக ஒழுங்குக் கொண்டாட்டம்' எனவும் வழங்கி வருகிறது.

இந்தக் கொண்டாட்டமும் குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்துக்குப் பின்னரே ஆரம்பமாகும். ஒரு மணி நேரத்துக்குப் பின்னர் கொண்டாட்டங்களை ஆரம்பிப்பதின் நோக்கம் என்னவென்றல், ஒரு மணி நேரம் வாழும் குழந்தை ஒரு ஜீவன் வாழ வேண்டிய காலத்துக்கு வாழ்ந்து விடும்" என்ற சீனத்துப் பழமொழியை அனுசரித்துத்தான். பெண் குழந்தை பிறந்தவுடனே சில பெரிய மனுஷிகள் (கிழவிகள்) ஒன்று சேர்ந்து ஒரு ஜதை சிறியபூட்சை மரத்தட்டு ஒன்றில் வைத்து எடுத்து வந்து குருவின் முன் வைப்பார்கள். உடனே குரு சில மந்திரங்களை ஒதி பூஸ்-ச்-சானை வணங்கிவிட்டு ஒரு கிழவியினிடம் மந்திரம் ஓதிய பூட்சைத் திரும்பக் கொடுப்பார். அந்தக் கிழவி அதைப் பெற்றுக் கொண்டதும், தான் பிறந்தபோது தனக்கு அணியப்பட்டு இன்று வரை தன் காலில் இருக்கும் தனது பழைய பூட்சைக் கழற்றி புதுக் குழந்தையின் காலில் அணிந்து விட்டு, "என் அன்பார்ந்த சீன மாதரசியே, நீ உன் சமூகப் பண்பும் ஒழுங்கும் மீருமல் ஆயிரம் ஆண்டுகள்வரை நீடூழி வாழ்வாயாக!" என்று வாழ்த்துவாள். உடனே சீன வெடிகள் சடச்சட வென வெடிக்கும். இதன் பிறகு ஒரு பெரிய விருந்தும் முன் கூறியுள்ளபடி நிகழும்.

சீனுவில் மரண விழா

அடுத்த படியாகக் குறிப்பிடத்தக்கது இரண்டு விழாக்கள். ஒன்று மண விழா. மற்ருென்று மரண விழா. இவற்றில் மரண விழாவைக் குறித்து எழுதவதென்றல் அது ஒரு பெரிய நூலாக ஆகிவிடும். மேலும் சீனுவில் சன்-யட்-சென் காலத்தில் எண்ண முடியாத ஜாதிகள் இருந்தபடியால் ஜாதிக்கொரு தினுசாகக் கொண்டாடப்பட்ட அந்த விழாவைக் குறிப்பாக எழுதுவதும் முடியாத காரியம். கூடுமான வரை அந்தக் காலத்தில், என் இந்தக் காலத்தில் கூட ஏறக் குறைய ஒரே மாதிரியாக நடக்கும் சீனர்களின் மரண விழாவைப் பற்றிப் பார்க்கலாம். மேலும் மண விழாவைக் காட்டிலும் மரண விழாத்தான் சீனர்

களால் முக்கியம் என்று கருதப் படுகிறது!

"மனிதன் பிறந்து அனுபவித்து வந்த வைபவங்களையெல்லாம், அந்த மாண்டு போன மனிதனுக்காக அவனுடைய கடைசி நாளிலே கொண்டாடி விட வேண்டும்" என்பது சீனர்களுடைய பழைய காலக் கொள்கை.

சீனன் ஒருவன் இறந்து விட்டால், அவனை ஒரு மரப் பெட்டியில்தான் முதலில் வைத்து அடக்கம் செய்வது வழக்கம். இப்படி அடக்கம் செய்யப்படும் பெட்டிகளை விற்பதற்கென்றே சீன நகரங்களில் மிகப் பெரிய சவப் பெட்டி வியாபாரக் கம்பெனிகளும் இருக்கின்றன. பெட்டி சவப் பெட்டிதான் என்றாலும், ரூ. 25 லிருந்து 2500 ரூபாய்கள் வரை தரத்துக்குத் தக்க மாதிரி எத்தனையோ தினுசுகள் உண்டு. சில பெட்டிகளில் அற்புதமான சீனத்து வேலைப்பாடுகள் நிறைந்து இருக்கும்!

இந்தப் பெட்டிகளை வாங்கி சவத்தை அதற்குள் வைக்கு முன்பு இவ்வளவு காலத்துக்குத்தான் பிணத்தைப் பெட்டிக்குள் வைத்திருக்க வேண்டும் என்று முன் கூட்டி ஒரு தீர்மானத்துக்கு வந்த பின்பே அதற்குள் வைப்பது வழக்கம். இம்மாதிரி அடக்கம் செய்யப்படும்போது சவம் பல மாதங்கள் அல்லது மூன்று வருடங்கள் வரையும் கெட்டுப் போகாமலோ, நாற்றமெடுக்காமலோ இருப்பதற்காக அநேக மூலிகைகளை அந்தப் பெட்டிக்குள் வைத்து மூடுவார்கள். இம்மாதிரி மூடப்பட்ட பெட்டியை இறந்தவர் வீட்டின் முன்புறம் உள்ள ஹாலில், ஒரு பெரிய விமானம் ஜோடித்து அதன் நடுவில் வைத்து, அதைச்சுற்றிலும் வித விதமான கலர்க் காகித விளக்குகளைத் தொங்கவிட்டு, அதற்குள் மெழுகு திரிகளையும் கொளுத்தி வைத்து காலை, மாலை முதலிய நேரங்களில் அந்தப் பெட்டிக்கு மேலாகத் தொங்கும் அவரது உருவப் படத்துக்கு மேல் ஒரு பெரிய சீனத்துக் கடவுள் படத்தையோ சிலையையோ வைத்து வணங்கிய பின் விருந்து நடைபெறும்.

விருந்துகளிலெல்லாம் பன்றி இறைச்சியோ, 'ச்சம்சு' என்ற சாராய பானமோ நிச்சயமாக இருக்கும். சுருங்கச் சொன்னால் சீனுவில், பன்றி தின்னாத சீனனும் ச்சம்சு அருந்தாத மனிதனும் இருப்பது அரிது என்றே சொல்லலாம். சீனர்களின் கடவுள்களில் பன்றியம்சம் உள்ள கடவுள் ஒருவரும் உண்டு. அதாவது மகா விஷ்ணுவராக அவதாரம் எடுத்த கதையைப் போல! இந்த விஷயத்தில் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வித்யாசம் என்னவென்றால் பன்றியை இங்குள்ளோர் தின்பதில்லை. சீனர் அதைத் தின்கிறார்கள். நம்மூர்களில் இருக்கும் மாமிசக் கடைகளில் எப்படி வேறு பிராணிகளை வதைத்து விற்கிறார்களோ, அப்படியே சீனுவிலுள்ள மாமிசக் கடைகளில் பன்றி இறைச்சியையே அதிகமாக விற்பனை செய்கிறார்கள்.

அத்தேசத்தில் ஒரு சாரார் சைவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய தொகை மிகவும் அற்பம். அவர்களும்கூட மது அருந்தத்தான் செய்கிறார்கள். "ச்சண்டு" என்ற உயர்தரமான அபின் தின்பதில் சீனர்களுக்கு இணையாக உலகத்தில் வேறு யாரையுமே குறிப்பிட முடியாது.

துக்க அடையாளம்

சீனர்கள் அனைவரும் பொதுப்படையாக ஒரே ஒரு காரியத்தில் பண்டைக் காலத்தில் ஒற்றுமை உடையவர்களா யிருந்தார்கள். இந்தக் காலத்திலும் அந்த ஒற்றுமை அக்காரியத்தைப் பொறுத்த வரை குலையாமலிருக்கிறது. சீனத்தில் வயது வந்த ஆணோ, பெண்ணோ இறந்து விட்டால், இறந்தவருடைய சொந்தக்காரர்கள் யாவரும் அந்த மனிதரை மாயானத்துக்கு எடுத்துச் செல்லும்வரை தங்களுடைய வலது கரங்களில் நல்ல கருப்புத் துணி ஒன்றைத் துக்கத்துக்கு அறிகுறியாக அணிந்து கொள்வார்கள் இறந்தவருடைய நெருங்கிய உறவினர்களும், மனைவி மக்களுமோ! மறு வருடம் திரும்பும் வரை, தினசரி, கருப்பு உடைகளையே அணிந்து கொள்ளுவார்கள்.

சவ அடக்க வைபவம்

குறிப்பிட்ட நாள் வரைக்கும் சவம் பெட்டிக்குள் வைத்துப் பாது காக்கப் பட்ட பின் கடைசியில் மாயானத்துக்குக் கொண்டு போகும் ஏற்பாடு மிகவும் தடபுடலாய் ஆரம்பமாகும். மத்-தீ-ஹாய் என்னும் புரோகிதர் கருப்பு உடைகளை அணிந்து வீட்டுக்கு வருவார். குறித்த நேரத்தில் வீட்டுக்கு வந்திருப்போரனைவருக்கும் பணிகாரங்கள் வழங்குவார்கள். முடிந்தவுடன் மெழுகு திரிகளைக் கொளுத்தி வைத்து. சாம்பிராணிக் காகிதங்களை ஏராளமாய் எரிய விடுவார்கள். இந்த சந்தர்ப்பத்தில் கிரியை செய்ய வேண்டியவர்களுக்கு மெல்லிய வெங்காயம் கட்டும் சாக்குப்போன்ற ஒரு வகைச் சணலினல் நெய்யப்பட்டிருக்கும் சட்டை, உடை முதலியவைகளையும் அணிவித்து ஒரு வகையான கோமாளித்தொப்பியையும் சூடுவார்கள். இவ்வளவும் முடிந்த பின்னர்தான் சவம் ஒரு அழகிய கண்ணுடி ரதத்தில் வைத்து எடுத்துச் செல்லப்படும். பிணம் மயானம் சேருவதற்குள் நகரைச் சுற்றி ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படும். அப்போது 'ச்சீ-யின்-ப்பூ' வென்ற வாத்திய கோஷ்டியினர் ஒரு பெரிய படையைப் போல சவப் பெட்டிக்கு முன்பாக அணிவகுத்து வாத்தியங்களை முழங்கிக் கொண்டு செல்வார்கள்.

இந்த வாத்தியம் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் ரொம்ப—ரொம்ப வேடிக்கையான தாயிருக்கும். இதைக் குறித்துத் தனியாகவே ஒரு கட்டுரை எழுதி விடலாம்! வாத்தியங்களின் ஓசையோ குறைந்த பக்ஷம் இரண்டு மைல் தூரமாவது இடி முழக்கம்போல எதிரொலிக்கும். இதில் குறிப்பிடத் தக்கது என்னவென்றுல், மிகப் பெரிய டமாரம் ஒன்றும் ஏறக்குறைய ஆறடி சுற்றளவுள்ள பேரொலி எழுப்பும் தாளமுந் தான். இந்தக் கோஷ்டியின் தொகை மிகக் குறைந்த பக்ஷம் 32 பேர்கள். முழுக் கோஷ்டியினரது எண்ணிக்கை 132 பேர்களாகும்.

துக்க வீட்டிலிருந்து இந்தக் கோஷ்டியினர் முழங்கிக் கொண்டு வருவார்கள். இறந்தவருக்கு மரியாதையாக அவரது நண்பர்கள் பற்பலவிதமான துணிக் கொடிகளை அனுப்புவார்கள். அந்தக் கொடிகளில் இறந்தவருடைய பெருமை சுருக்கமாக எழுதப் பட்டிருக்கும். அத்தனை கொடிகளும் சீனவின் உயர்ந்த ரக சில்க் துணியாலானதாகவும், பலவித நிறங்களுடையதாகவும், மிக வனப்பு வாய்ந்த முறையிலும் தயார்

செய்யப்பட்டிருக்கும். இறந்தவர் பெரிய பணக்காரராக இருந்தாலோ, அவரைப்பற்றி எழுதிப் பறக்கும் கொடிகள் கணக்கிட முடியாத அளவில் இருக்கும். இந்தக் கொடிகளை அடுத்துத்தான் சவப் பெட்டி வரும். அதன் பின்னுல் அணிவகுத்து வரும் அனுதாபிகளது படையான கருப்பு உடையினரைப் பார்த்தால் அன்றைக்கு அந்த நகரமே துக்கக் குறி காட்டுவது போலத் தென்படும். ஊர்வலத்தைத் தொடர்ந்து சவப் பெட்டியைத் தொட்டுக் கொண்டு இறந்தவரது மனைவி, மக்களும் கண்ணீர் வடித்துக் கொண்டு வருவார்கள்.

இந்தச் சம்பவம் நடை பெறுவதற்று முன்பெல்லாம் நாம் அவர்களைப் பார்த்தால் அவர்களது உடைகளைப் பார்த்துத்தான் அவர்கள் துக்கத்தில் மூழ்கியிருக்கிறுர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்குமே தவிர, அவர்களது முகக் குறியிலிருந்து நாம் ஒன்றையும் உணர்ந்து கொள்ள முடியாது.

காலை பத்து மணிக்கு ஊர்வலம் புறப்படுகிறதென்ருல் இரவு பத்து மணிக்குத்தான் சவம் மயானத்தை யடையும். அதன் பிறகு இரவு முழுதுங்கூட மத்-தீ-ஹாய் என்று அழைக்கப்படும் சீனர்களின் மோட்ச குரு தாம் செய்ய வேண்டிய சாந்திக் கருமங்களைச் செய்வதிலேயே ஈடுபட்டிருப்பார். அது முடிந்ததும் ஒரு குழியில் பெட்டியோடு சவத்தை வைத்துப் புதைப்பார்கள். சவம் புதைக்கப் பட்டதும் மயானத்திலேயே கட்டி வைக்கப்பட்டிருக்கும் ஒரு கோயிலில் எல்லோருக்கும் விருந்து நடைபெறும். நாள் முழுதும் நடந்த களைப்பைச் சமாளித்துக் கொள்வதற்காக அந்த விருந்திற்குப்பின் "ச்சண்டூ" என்ற உயர்ந்த ரக அபின் ஏராளமாக பரிமாறப்படும்.

மேற் கூறப்பட்டுள்ளவைகள் மரண விழாவின் முதல் நாள் நடைமுறை. இதற்குமேல் விவரித்தால் அதுவே ஒரு தனி நூலாகிவிடுமாதலால், இதையெல்லாம் ஒழிக்க டாக்டர் சன்-யட்-சென் என்ன செய்தாரென்பதைக் கவனிப்போம்-

சீர்திருத்தம் பிறந்தது

டாக்டர் சன்-யட்-சென் தலைவராய் வந்தபோது இந்த மாதிரியான படாடோபம் நிறைந்த அட்டகாசங்களெல்லாம் அவருக்கு அருவருப்பாகவும் — வெறுப்பாகவுந் தோன்றின. எத்தனையோ நாட்கள் இதையெல்லாம் ஒழிப்பதற்கு வழி என்ன? என்ற யோசனையிலேயே ஈடுபட்டிருந்தார். முடிவில் எல்லோரையும் போல புத்தகங்கள் எழுதியும், பிரசாரத் தொண்டர்களை நியமித்தும் இந்த மூட சம்பிரதாயங்களை ஒழிக்க முன் வந்தார்.

பல புத்தகங்கள் வந்தன. அநேக பிரசாரகர்களும் தோன்றினுர்கள். நாட்டிலுள்ள பத்திரிகைகள் பலவும் அவர் கருத்துகளைப் பரப்புவதில் நல்ல துணை செய்தன. ஆயினும் கருதிய பலன் கைக்குக் கிட்டிவரவில்லை. அது மட்டுமா? பொது மக்களில் பழமை விரும்பிகள் அவரது ராஜாங்கத்தையே பழி கூறிப் பறை முழக்கிக் கொண்டிருந்தார்கள். இவைகளையெல்லாம் பொறுமையாகவே சகித்து வந்த சென் முடிவில் மன வருத்தங் கொண்டார்.

"எழுதி, எழுதி என் கைகள் ஓய்ந்து போய் விட்டன.

ஏ நோய் பிடித்த சீனுவே! உனக்குக் கதிமோட்சம் வேண்டும்!" என்று தம்மால் கடைசியாக எழுதப்பட்ட **நான் சிருஷ்டிக்கப் போகும் சீனு** என்ற புத்தகத்தில் எழுதினர். அப்புத்தகத்திலுள்ள இன்னும் சில வரிகளைப் பாருங்கள்!

"மனித சமுதாயத்தை வெறும் மூடச் சமுதாயமாக ஆக்கிக் கொண்டிருக்கும் சீனுவே! உன்னுடைய உடல் காச நோய் நிறைந்த சொத்தை உடலாகவே இருக்கிறது. உனக்கு நல்ல மருந்து இன்றைக்கே இப்போதே தேவை! சொல்கிறேன் கேள்! உன்னுடைய பிறந்த நாள் விழா, கன்னி விழா, கலியாண விழா, மரண விழா இவைகளை ஒழித்துக் கட்டுவதுதான் உனக்கு முதல் மருந்து! இதை நீ உணர்வாயா?

"கடவுளின் படைப்பு இயற்கையானது. இயற்கையை எதற்காக செயற்கையோடு இணைத்து வேண்டாத கோட்பாடுகளுக்காக மகிழ்வது?.................."

"கடவுள் கால்களை இயற்கையாகப் படைக்கவில்லையா? அதை நீ ஏன் ஒரு தோல் செருப்புக்குள் இறுக வைத்து உனது ஒப்பற்ற சமூகத்தின் பலத்தையே சிதறடிக்கிருய்?"

"ஆகாயத்தில் பறக்கும் பறவையின் கால்களை யாராவது கட்டி வைக்கிருர்களா? காட்டு மிருகங்கள்கூடத் தங்களுக்கு இஷ்டமிருந்தால்தானே இன்னொரு ஜோடியை விரும்புகின்றன. அப்படியிருக்க உனது பெண்களை நம்பாமல் நீ அவர்களது கால்களைக் கட்டி, உணர்வை மழுங்க வைப்பது எவ்வளவு மதியீனம்? கொடுமை! கொடுமை!!"

"இன்று சீரழிந்து நிற்கும் சீனுவே, எழு! உன் ஆண் சிங்கங்களின் பூனை உருவத்தைப் பார்! சீச்சீ! பார்க்கச் சகிக்காத தாடி, எண்ண முடியாத நீள அடிகளுள்ள தலைச்சடை, அதுவும் நாலைந்து தலை மயிரை உச்சியிலிருந்து சடை போட்டு இடுப்பிலும் நாலைந்து சுற்றுகள் சுற்றியிருக்கிருய்! இதனால் உன் மக்களும் நீயும் பெற்றிருக்கிற அழகு......?"

"இந்த அலங்கோலங்களைப் பார்க்கவோ, பேசவோ, ஏதாவது பொருளுண்டா? பிற நாட்டினர் சீனுவைக் கண்டு நகைக்காதிருக்க வேண்டுமானல் இன்றே சீனுவிலிருந்து — பெண்களுக்கு காலைக் கட்டி வைத்துச் செய்யப்படும் சித்திரவதையைப் போக்கடிக்க வேண்டும்! அது மட்டுமா? ஆண்கள் தங்கள் தலையில் பின்னிக் கொள்ளும் சிறிய 'கண்ட்ராவி' சடையையும் ஒழித்துவிட வேண்டும்!"

இப்படியாக வெல்லாம் மனக் கொதிப்புள்ள கருத்துகளாகவே அப்புத்தகம் திகழ்கிறது. அது மட்டுமல்ல, சீனுவின் ஒவ்வொரு முச்சந்திகளிலும், சந்து பொந்துகளிலுங்கூட இந்த முக்கியமான வார்த்தைகள் நிறைந்த சுவரொட்டி பிரசாரத் தாள்கள் — அட்டைகள் முதலியனவும் திகழ்ந்தன. பலன்? அத்தனையும் செவிடன் காதில் ஊதின சங்கநாதந்தான்!

சட்டம் புறப்பட்டு விட்டது!

எத்தனை காலத்துக்குத்தான் அவர் இம்மாதிரியே போய்க் கொண்டிருக்கமுடியும்? கடைசியில் வேறொரு முடிவுக்கு வந்தார். தமது ராஜாங்கத்தில் ஒரு சமூக சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டார்.

அப்பொழுது சீனுவில் இருந்தது குடி அரசுதான். ஆனாலும் பேரளவில்தான் அது ஒரு குடி அரசு! 'பூஷ்வா'க்களே அந்தக் குடியரசில் அங்கம் வகித்த மற்றையோராயிருந்தார்கள். ஒவ்வொருவர் தயவையும் நாடியே-அநுசரித்தே ஆரம்பத்தில் அவர் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டியிருந்தது. மேலும் கல்வித் துறையில் அன்றைய சீனு, இன்றைய இந்தியாவைக் காட்டிலும் கீழ்த்தரமான நிலையில் இருந்தது. இவைகளையெல்லாம் கருதி, ஆரம்பத்தில் எந்த எந்த இடங்களில் முடியுமோ அங்கெல்லாம் ஆரம்பப் பள்ளிக் கூடங்களைத் தான் முதலில் நிறுவினுர். அந்தப் பள்ளிக் கூடங்களில் தமது பிரசாரகர்களை வைத்து கொஞ்சம் கொஞ்சமாய், இந்தக் கால் கட்டுகளை எடுக்க வேண்டிய அவசியத்தையும், ஆபாசமாக சடை போட்டுக் கொள்ளுவதிலுள்ள அசிங்கத்தையும் எடுத்துச் சொல்லச் சொல்லி சீர்திருத்த வித்தை முதலில் முளைக்கிளம்பச் செய்தார்.

இந்த வித்து நாட்டின் பல பாகங்களில் முளைத்துக் கொண்டிருந்த போதே ஒரு சமூக சீர்திருத்தச் சட்டம் பெரியதொரு பகீரதப் பிரயத்தினத்திற்கிடையே முளைத்து விட்டது! அடடா, இதற்காக அவர் எத்தகைய சமூக எதிர்ப்புக்களையெல்லாம் சமாளிக்க வேண்டியிருந்தது தெரியுமா? அவைகள் மிகவும் பயங்கரம் நிறைந்த கதைகள்!

ஒரு தடவை சமூக சீர்திருத்த விரோதிகள் டாக்டர் சன்-யட்-சென்னை, பயங்கரமான ஆரண்யத்தின் நடுவிலுள்ள மலை உச்சி ஒன்றுக்குக் கொண்டுபோய் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டி இரண்டு புறமும் ஆள்களை நிறுத்தி 'டக்-கப்-வார்' என்று ஆங்கிலத்தில் சொல்லுவதைப் போன்ற நிலையில் வைத்து சித்திரவதை கூடச் செய்யத் தொடங்கினர். அந்தச் சமயம் ஸ்ரீமதி லீடி என்ற அவரது மூத்த மனைவியாரது குறுக்கீட்டினால் அவர் உயிர் தப்பிப் பிழைத்தார். ஆனாலும் அவரது உள்ளத்தில் தோன்றின சீர்திருத்தச் சட்டம் குடியரசினால் ஒப்புக் கொள்ளப் பட்டது கடைசியாக!

சட்டத்தின் முக்கிய கருத்து: இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த ஒரு வருடத்துக்குப்பின், சீனுவில் சடைபோட்டுக் கொள்ளும் மனிதனே, மூக்கைச் சப்பட்டையாக்கி, கால்களைச் சித்திரவதை செய்துவிடும் குடும்பமோ இருக்கக்கூடாதென்பது தான். அதோடு குழந்தை விழா மரண விழா முதலியனவும் ஒரு குறிப்பிட்ட தன்மைக்கு அடங்கினதாயிருக்க வேண்டுமென்றும் கூறிற்று.

சட்டம் புறப்பட்டு, அமுலுக்கும் வந்து வருடமும் ஒன்று கழிந்தது. பலனே? அந்தச் சட்டத்தை யாருமே லட்சியம் செய்யவில்லை. அவ்வளவுதான்!

அதையும் அவர் உணர்ந்தார். இனி 'தண்டம்' தான் சரியான வழி என்ற முடிவுக்கு வந்தார்.

அட மூட சமூகமே! இத்தனை உணர்வற்ற உன்னை என்ன செய்தால் தான் என்ன, என்று அவர் நினைத்துப் பார்த்தபோது, அவரது உள்ளம் குமுறிற்று! தமது சகாக்களுடன் ஒரு மந்திராலோசனை செய்த பின் கீழ்க்கண்டவாறு உத்திரவிட்டார்.

"இன்று முதல் எந்தச் சீனனும் சடை போட்டுக் கொள்ளக்

கூடாது! அப்படிப் போட்டுக் கொண்டால், அவன் நடுத் தெருவில் போகும் போது அவனது குடுமியைக் கத்தரித்து மூன்று மாதம் சிறைத் தண்டனையும் கொடுக்கப்பட வேண்டும்!'' இதுதான் அவர் செய்த கடைசி உத்திரவு.

திடீரென சீனத் தலை நகரில் ஒரு கலவரம் உண்டாயிற்று. "நடுத் தெருவில் சில கிராப்புத்தலைப் பையன்கள் சடையர்களையும், குடுமியர்களையும் கத்தரிக்கிறுன்கள். அது மட்டுமல்லாமல் கோர்ட்டுக்கு இழுத்துக் கொண்டு போய் மூன்று மாதம் சின்னத் தண்டனை வேறு கொடுக்கப் படுகிறது'' என்று தண்டோரா முழங்கிற்று.

எங்கு பார்த்தாலும் பாதி போச்சு போச்சு என்ற புலம்பல்! எந்த இடத்திலும், ஆலயங்களுள் பட டாக்டர் சென்னைச் சபிக்காதவர்களே இல்லை எனலாம். முடிவு என்ன வாயிற்றென்று தெரியுமா? சுமார் மூன்று மாதங்கள் கழிந்த பின்னர், பெரும்பாலான சீனர்கள் கிராப்புத் தலையர்களாகவே காட்சியளித்தனர். இன்னும் சில நாட்களிலோ, "ஹோ! பாப்பூலா!'' என்று ஆனந்தக் கூத்தாடவே தொடங்கி விட்டனர். 'ஹோ! பாப்பூலா!'' என்ருல் "ஓஹோ, அழகாயிருக்கிறதே!'' என்றுதான் அர்த்தம்.

இன்னும் சில மாதங்கள் கழிந்த போது விழாவும் நிறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து மற்ற விழாக்களும் கட்டுப் பாட்டுக்கு வந்தன. இப்படியாக விஷவேகத்தில் அதாவது பதினைந்து வருடங்களில் டாக்டர் சன்—யட்—சென் தமது சீர்திருத்தம் செய்த சீனுவைக் கண் குளிரப் பார்த்தார். ஆனுல் மற்ருெரு பதினைந்து வருடங்களுக்குப் பின் டாக்டர் சன்—யட்—சென், தமது பூதவுடலை நீத்த போதோ சீனு இன்னெரு சீர்திருத்தத்தைத் தானுகவே செய்து கொண்டது. அதாவது சீனத்தின் பெண்களெல்லாம் தங்கள் தலை நிறைய மயிர் வைத்திருப்பது பிடிக்கவில்லை என்ற காரணத்தைச் சொல்லி அமெரிக்கப் பெண்களைப் போல, தங்களது ஒப்புயர்வற்ற, அழகிய கருங்கூந்தல்களைக் கத்தரித்துக் கொண்டதோடு, கிராப் வைத்துக் கொள்ளும் வேலையிலும் தீவிரமாய் ஈடுபட்டு விட்டனர்.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் டாக்டர். சன்—யட்—சென் மேற்கூறப்பட்ட சீர்த்திருத்தங்களைச் செய்வதற்குள் பத்துத் தடவைகளுக்கு மேல் பழைய சம்பிரதாயக் காரர்களிடம் அகப்பட்டுக் கொண்டு பல பிராண அபாயங்களிலிருந்து மீள வேண்டியிருந்த தென்பதையும், அதன் பிறகே அவர் சீனத்தின் மாபெருந் தலைவராக—உணர்ச்சி தந்த வீரனுக—உயிர் கொடுத்த சஞ்சீவியாக-ஒப்பற்ற தியாகியாகத் திகழ முடிந்தது!

கட்டுரையில் குறிப்பிட்டுள்ள சீர்திருத்த விஷயங்கள் அவர் செய்த பேரூழியத்தின் ஒரு பகுதியேயாகும். மற்றும் அவர் செய்துள்ள அற்புதங்கள் அத்தேசத்தில் அனேகம் உண்டு. அத்தகைய அற்புதங்களைச் செய்ததனுல்தான் சீனுவின் காதுகளில் டாக்டர் சன்—யட்—சென் என்ற வார்த்தை விழும் போது அது துள்ளி எழுந்து 'எங்கள் தந்தை வாழ்க!' என்று பெருமையுடன் வாழ்த்துகிறது. அந்த வாழ்த்திலிருந்து பிறந்ததே சீனுவின் மறுமலர்ச்சி!

ஆசிரியர்
சரத் சந்திரசட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு.
ஆர். ஷண்முகசுந்தரம்.

அத்தியாயம் பத்தொன்பது

ஆரான் மெள்ள மெள்ள மரணப் பாதையில் போய்க் கொண்டிருந்தான். சாவு அவனைத் தனது மடியில் இழுத்துப் போட முயற்சித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவன் ஒவ்வொரு தடவையும் நழுவிக் கொண்டிருந்தான். அவனுடைய போராட்டத்தைப் பார்க்கும் போது அந்த உயிர் உடலை விட்டு ஒரு நாளும் பிரியாது போல் தோன்றியது.

இந்தக் கஷ்ட காலத்தில் சதீஷ் உதவி புரிய வந்து சேர்ந்தான். கிரணமயினுடைய பதிபக்தியைக் கண்டு ஆச்சரியமடைந்து விட்டான். 'பெண்களுக்குக் கணவன்தான் கடவுள். சகலமும் அவர்கள்தான்' என்பது போன்ற எத்தனையோ விஷயங்களைக் கேள்விப் பட்டிருக்கிறேன். இருந்தாலும் இவ்விதம் உயிரையே பணயம் வைத்து சேவை செய்பவர்களைப்பற்றி கற்பனை கூடச் செய்ததில்லை.

ஆகா! இது எவ்வளவு அற்புதமான சேவை! இரவு முழுதும் கண் விழித்துக் கொண்டே படுக்கையருகில் உட்கார்ந்திருப்பது. நாள் முழுதும் ஓய்வு ஒழிச்சலின்றி பணிவிடை புரிந்து வருவது! ஆனால் முகத்தில் துளி சிரமமாவது வெளிப்பட வேண்டுமே! இவ்வளவு பெரிய துக்கம் அவள் உள்ளத்தில் குடி கொண்டிருக்கிறது என்று அவள் முகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவே முடியாது.

சதீஷ் உண்மையிலேயே இந்தப் பெண்ணைத் தனது கூடப் பிறந்த சகோதரியைப் போலவே பாவித்தான். அவளுடைய இந்தக் கோலத்தைக் கண்டு மிகுந்த துக்கமடைந்தான். தனது கணவன் குணமடைய வேண்டும் என அவள் புரியும் பணிவிடைகளைக் கண்டு அவன் உள்ளம் உருகியது. கடைசியில் அவள் அடையப் போகும் அந்த பயங்கர விபத்தை எண்ணவே, அவள் எவ்விதம் அதைச் சகிப்பாள் என்று கவலையடைந்தான்.

சதீஷ் தான் எவ்வளவோ உலக விஷயங்கள் தெரிந்தவன் என்றும், தான் மிகுந்த புத்திசாலி என்றும்

எண்ணியிருந்தான். ஆனல் சாவித்திரி தன்னை விட்டு விபினிடம் போனதிலிருந்து அவனுக்குத் தன் மேலேயே சந்தேகம் தோன்றி விட்டது. 'நான் அவ்வளவு புத்தி சாலி அல்ல. உலக அனுபவமும் துளிகூடக் கிடையாது' என்ற முடிவிற்கு வந்தான். மனித மனதிற்குள் என்ன இருக்கிறது, என்ன இல்லை என்று அறிவது மிகக் கஷ்டம் என்பதை உணர்ந்தான். இந்தப் புதிய சகோதரியைப் பற்றி என்ன வெல்லாம் எண்ணினன்? உபேந்திரனிடம் கூடச் சொல்ல வில்லையா?

இன்று காலையில் வழக்கம் போல ஆரான் வீட்டிற்குச் சென்றன். கிரணமயி வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். இரண்டு மூன்று தினங்களாக மாமியாரின் தேக நிலை கெட்டு வந்தது. முதல்நாள் இரவு ஜுரம் சற்று அதிகமாகவே அடித்தது. ஆகையால் இன்றும் அவள் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. ஆனல் கிரணமயினுடைய முகத்தைப் பார்த்து ஒரு விஷயத்தையும் ஊகித்துக் கொள்ள முடியாது. ஆகையால் தினசரி சதீஷ் அவளைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. இன்றும் வழக்கம் போல சதீஷ் கேள்வி கேட்க ஆரம்பிக்கவே, கிரணமயி நிமிர்ந்து உட்கார்ந்து சிறிது நேரம் அவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "இனி தாமதம் செய்வதில் பிரயோசனமில்லை. உபேந்திர அண்ணவை இங்கு வரும்படி கடிதம் எழுதுங்கள்" என்ருள்.

சதீஷ் பயத்துடன், "என் மன்னி?" என்றன்.

கிரணமயி, "இந்த முகத்தைப் பார்த்துக் கொள்ள விரும்புகிறவர்கள் இப்போது வந்தால் பார்த்துக் கொள்ளலாம்" என்ருள். பிறகு ஆழ்ந்த மூச்சு விட்டு விட்டு, "இதயத் துடிப்பு நிற்கப் போகிறது. நீங்கள் ஒரு தந்தி கொடுங்கள்" என்ருள்.

சதீஷ் சிறிது நேரம் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு, "மன்னி, எனக்கும் இது தெரியும். ஆனல் நீங்கள் எங்கு பயந்து கொள்வீர்களோ என்று சொல்லாமல் இருந்தேன்" என்றன்.

"பயப்பட வேண்டிய விஷயந்தான். அவருடைய சுவாசம் தடை பட்டு வருகிறது. நேற்றிலிருந்து மூச்சு அதிகமாக வருகிறது. இனித் தாங்காது. ஆகையால்தான் தந்தி கொடுக்கச் சொன்னேன்."

சதீஷிற்கு இது தெரியாது. ஆகையால் அவன் திடுக்கிட்டான். "இது எனக்குத் தெரியாதே. நீங்கள் சொல்லக்கூட இல்லையே" என்றன்.

"இல்லை. சுவாசம் அதிகரித்திருப்பது பிறருக்குத் தெரிவது கஷ்டம். ஆனல் இன்றைக்கு ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை. இருந்தாலும் துன்பத்திற்கு மேல் துன்பம் வந்து கொண்டிருக்கிறது. நேற்றிலிருந்து அம்மாவுக்கும் ஜுரம் அடிக்கிறது. ஜுர வேகத்தில் என்ன வெல்லாமோ பிதற்றுகிருள்" என்று கூறி விட்டுச் சிறிது சிரித்தாள். ஆனல் அந்தச் சிரிப்பிலே சிறிதும் மகிழ்ச்சி கிடையாது. அதைப் பார்த்தால் அழத்தான் வரும்.

சதீஷ் கண்களிலிருந்து இரண்டொரு கண்ணீர்ச் சொட்டுகள் துளிர்த்தன. அவன் மிகுந்த துக்

கத்துடன், "உபேந்திர அண்ணா வரட்டும். அப்புறம்......"

கிரணமயி, "இன்னொரு விஷயம்" என்றாள்.

சதீஷ் மௌனமாக அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"நேற்று வக்கீலிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. இரண்டு வருஷத்திற்கு முந்தி இவர் ஒரு நண்பருக்கு மூவாயிரம் ரூபாய்க்கு ஜாமீன் போட்டிருந்தாராம். அது இப்போது அசலும் வட்டியுமாக நாலாயிரம் ரூபாய் ஆகியிருக்கிறதாம். அந்த நண்பர் வேலை போகவே பணத்தை இவர் தலையில் போட்டு விட்டு, விஷத்தைத் தின்று இறந்து விட்டாராம். இந்த வீட்டுக் கூரையைப் பிரித்து விற்றால் அந்தக் கடனுக்குச் சரிக்கட்டுமா என்று வக்கீல் கேட்டிருக்கிறார்" என்று கூறிவிட்டு பழைய படியே சிரித்தாள்.

சதீஷ் தலையைக் கீழே குனிந்து கொண்டிருந்தான். அவளை ஏறெடுத்துப் பார்க்கவோ அல்லது அவளுக்குப் பதிலளிக்கவோ துணிவு உண்டாகவில்லை.

சதீஷ், உபேந்திரனுக்குத் தந்தி கொடுத்துவிட்டுத் திரும்பி வரும்போது மணி பத்து. மெள்ள மெள்ள சமையலறைப் பக்கம் போனான். கிரணமயி மாமியாருக்காக கஞ்சி வைத்துக் கொண்டிருந்தாள். அவள் சதீஷைப் பார்த்து, "உட்காருங்கள்" என்று கூறினாள். அவள் குரலில் சிறிது மாறுதல் தெரிந்தது. சதீஷ் கவனமாகப் பார்த்தான். கண்ணீர் வழியாவிட்டாலும், இமைகளில் நீர் நிறைந்திருந்தது. அவன் அருகிலேயே உட்கார்ந்து கொண்டான். இன்று கிரணமயி ஆசனம் இட்டு ஒன்றும் உபசரிக்க முயலவில்லை. அவன் எங்கு உட்கார்ந்திருக்கிறான், என்ன செய்கிறான் என்பது கூட அவளுக்கு நினைவிருந்ததோ என்னவோ? இது வரையிலும் கிரணமயி இவ்வளவு துக்கப்பட்டதை அவன் கண்டதே இல்லை. அவன் எத்தனையோ நாளாக வரப்போக இருக்கிறான். எவ்வளவோ நெருங்கிப் பழகி வருகிறான். இருந்தாலும் இன்றைக்குப் போல அவளுடைய நடத்தையிலே அந்தரங்க பாவம் தொனித்தது கிடையாது. ஆகையால் இன்றைய நடத்தையிலிருந்து மன்னியின் மனம் ஏதோ ஒரு பெரிய துக்கத்தால் வேதனைப் படுகிறது என்பதைத் தெரிந்து கொண்டான்.

வெகு நேரம் வரையிலும் இருவரும் மௌனமாகவே இருந்தார்கள். இருந்தாற்போலிருந்து கிரணமயி ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்தாள். இந்நேர வரையிலும் அந்தச் சிரிப்பிலே தான் மூழ்கியிருந்திருக்க வேண்டும். "சரி, நீங்களே சொல்லுங்கள். இவர் எமனுலகம் போன பிறகு, வீடும் கடனில் மூழ்கிய பிறகு, நான் பிச்சை எடுத்து வயிறு வளர்ப்பது நல்லதா அல்லது வேலை செய்து பிழைப்பது நல்லதா?" என்றாள்.

சதீஷ் இந்தக் கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டான். ஆகையால் அவன், "இதை உபேந்திர அண்ணாவிடமே கேட்டுப் பார்க்கலாம். இதற்கு அவரே பதில் கூறுவார்" என்றான்.

"அவரைக் கேட்காமலேயே எனக்குத் தெரியும். இரக்கப் பட்டு ஏதோ சாப்பாட்டுக்குக் கொடுப்பார். ஆனால், பிறருக்குச்

சுமையாக இருப்பதும் பிச்சை எடுப்பதும் ஒன்று தானே?'' என்றாள்.

சதீஷ் ஏதோ கூற விரும்பினான். ஆனால் அவனால் ஒன்றும் பேச முடியவில்லை. பேசாமல் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கிரணமயி அவன் மனதை அறிந்து கொண்டு சிரித்தாள். "வார்த்தை தடுமாறுகிறது. ஆனால் சொல்வதென்னமோ உண்மை தான்'' என்று கூறிவிட்டுச் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு, "உங்கள் அண்ணாவை நான் அறிந்து கொள்ளவில்லை என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். நான் அவரை அறிந்து கொண்டேன். அனுதைகளை ஆதரிக்க அவருக்குத் தெரியும். அளிப்பது மாத்திரம் அல்ல, பெற்றுக்கொள்ளவும் வேண்டுமே! பெற்றுக் கொள்ளாமல் யாரும் அளித்ததை நான் பார்த்ததில்லை. வாழ்நாள் முழுதும் ஒருவர் மேற்பார்வையில் கழிப்பது என்பது சுலபமானதல்ல. இது எனக்கு நன்கு தெரியும்'' என்றாள்.

இதற்கும் சதீஷ் ஒன்றும் பேசவில்லை. அவன் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அவள் இவனுடைய பதிலை எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. "இந்த உலகத்திற்கு நான் வந்து ரொம்ப நாள் ஆகிவிடவில்லை. எனது கடமையை நிறைவேற்றுவதற்கு இன்னும் போதிய நாள் இருக்கிறது. வாழ்க்கையில் இன்னும் எத்தனையோ கேவலமான நிலைகள் மீதியிருக்கின்றன. அந்நிலையில் நான் எந்த முகத்தை வைத்துக்கொண்டு அவரிடம் போய் உதவி நாடுவேன்? அந்தச் சமயத்தில் நான் மறுபடியும் எனது பழைய வாழ்க்கையைத் தொடர வேண்டி நேரிடும்'' என்றாள்.

இவ்வளவு நேரம் சதீஷ் மிகுந்த துக்கத்துடன் அவள் கூறுவதைக் கேட்டு வந்தான். ஆனால் அவள் கடைசியாகக் கூறியதைக் கேட்டுத் திடுக்கிட்டான். "மன்னி, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? குற்றம் ஏற்படுவது சகஜம். அதோடு அம்மாதிரி குற்றத்தை நீங்கள் ஏன் செய்யப் போகிறீர்கள்?'' என்றான்.

கிரணமயி, சதீஷின் ஆச்சரியத்தைக் கண்டு சிரித்தாள். அவள் தனது கோமளமான குரலில், "ஏன், நானும் சாதாரண ஒரு மனிதப் பிறவிதானே?'' என்றாள்.

சிரிப்பைக் கண்டு சதீஷ் தனது தவறுதலை உணர்ந்து கொண்டான். அவன் தலை குனிந்தபடியே, "என்னை மன்னித்து விடுங்கள் மன்னி; என் புத்தியைப் போலவே நானும் கெட்டவன்தான்'' என்றான்.

கிரணமயி ஒன்று பேசாமல் பதிலுக்குச் சிரித்தாள்.

பிறகு சதீஷ், "உபேந்திர அண்ணா என்ன? அவர்தான் சகலமுமா? நான் இல்லையா? நான் உங்களை அவருடைய அடைக்கலப் பொருளாக விடமாட்டேன்'' என்றான்.

கிரணமயி சிரித்துக் கொண்டு, "நீங்கள் என்ன, உங்கள் அண்ணா என்ன? எல்லாம் ஒன்றுதானே? உங்களிடம் பிச்சை எடுக்க வேண்டும்'' என்றான்.

"இல்லை, பிச்சை எடுப்பதல்ல. நான் உங்கள் சிறிய சகோதரன். ஆனால் உபேந்திர அண்ணா உங்கள்

கணவருடைய நண்பர். அவசியம் நேரிடும்போது என் சகோதரியைக் காப்பாற்றும் பொறுப்பை நான் மேற்கொள்கிறேன்''

"ஆனால், நான் உங்களுக்கு மாறாக நடந்தால்?"

"நான் அப்படியே விட்டு விடுவேன்."

"ஏதாவது குற்றம் புரிந்தால்?"

"அண்ணன், தங்கைக்குள் சண்டை உண்டாகிறது."

"இந்த ஜென்மத்திலே, எப்பவாவது ஒரு நாளைக்கு நான் ஏதாவது ஒரு தப்பு செய்து விட்டால், என்னுடைய இந்தச் சிறிய தம்பியால் என்னை மன்னித்து விட முடியுமா?''

சதீஷ் நேராக நிமிர்ந்து சிறிது நேரம் வரையிலும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அதற்கப்புறம் மிகுந்த வருத்தத்துடன், "மன்னி, நீ குற்றம் என்று சொல்வது எனக்கு அர்த்தமாகவில்லை. தம்பிக்கு ஏதாவது விளங்காவிட்டால் அதை விளக்கி வைக்க வேண்டும்; சொல்ல முடியுமானால் சொல்லு. இல்லாவிட்டால் சொல்லவேண்டாம். எப்பவாவது ஒரு நாளைக்கு நீ செய்யத்தகாத காரியம் ஒன்றைச் செய்து விட்டாலும் நான் உனது இளைய சகோதரன் என்பதை மறக்க மாட்டேன்'' என்றான். இந்தச் சமயத்தில் அவனுக்குச் சாவித்திரியின் ஞாபகம் வந்தது. "மன்னி, உனது சிறிய தம்பியின் கர்வத்தை மன்னித்துவிடு. நான் மன்னிக்கக் கூடியதை கடவுள்கூட மன்னிக்க நடுங்குவார்'' என்றான். கிரணமயியின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிவதைப் பார்த்தான். "அக்கா, என்னைப் பாருங்கள், இன்று நான் பழைய சதீஷ் அல்ல. உங்களை ஒரு நாள் வேடிக்கையாக மன்னி என்று அழைத்ததுண்டு'' என்றான். பேசப் பேச அவன் முகம் சிவந்து விட்டது. பிறகு, "இல்லை, இல்லை! நான் அந்த சதீஷ் அல்ல. அந்தச் சதீஷாகவே யிருந்தால் உங்களை அறிந்து கொள்ள முடியாது. அவன் பூஜிக்கத் தெரியாதவன். ஆகையால் அவன் 'கல்' என்று கூறி கேலி செய்தான். அவனது பாபத்திலேயே அவன் மூழ்கி விட்டான். இனி அவன் மேலே வர முடியாது'' என்று கூறிவிட்டு தனது மார்பை இறுகப் பிடித்துக் கொண்டான்.

கிரணமயி சிறிது நேரம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்கப்புறம் அவள் மிருதுவான குரலில் மெள்ள மெள்ள, "எப்படி என்னைத் தெரிந்து கொண்டாய் தம்பீ?'' என்று கேட்டாள்.

சதீஷ் தலை குனிந்தபடியே, "அது பெரியவர்களுக்கு முன்னால் பேசக்கூடிய விஷயமல்ல'' என்றான்.

"சொல்லக் கூடியதல்லவா? அப்படி அது என்ன விஷயம்?"

திடீரென ஏற்பட்ட சந்தேகத்தால் அவள் முகம் கறுத்து விட்டது.

"என்ன சொல்லு?" என்றாள்.

"ஏன் மன்னி?"

"தலையை உயர்த்து, முகத்தைப் பார்க்கிறேன்''

சதீஷ் சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு நேராக நிமிர்ந்தான். கிரணமயி அவனையே

பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, "மனதில் ஏதோ துக்கத்தை வைத்துக் கொண்டு நீ இங்கு வரப் போக இருக்கிருய். இதை நான் பல நாளாகப் பார்க்கிறேன். ஆனல் கேட்பதற்கு எனக்கு உரிமை இல்லாததால் கேட்கவில்லை. ஆனல் இன்ருே? இன்று நீ எனது இளைய சகோதரனுகி விட்டாய். விஷயம் என்ன சொல்லு" என்ருள்.

சதீஷ் தலையைக் குனிந்து கொண்டு, "அது ரொம்ப வெட்கக் கேடான விஷயம்" என்ருன்.

"இருந்து விட்டுப் போகட்டும். நீ உனது சகோதரியுடன் இந்தத் துக்கத்தைப் பங்கிட்டுக் கொள்ளத்தான் வேண்டும். நான் உன்னைத் தனியாகவே அந்தத் துக்கத்தோடு விடமாட்டேன்"

அதற்கப்புறம் கிரணமயி ஆரம்பத்திலிருந்து ஒவ்வொன்ருக இந்தத் துக்கத்தின் காரணத்தை அறிந்து கொண்டாள். கடைசியாக "இம்மாதிரி காரியத்தை ஏன் செய்தாய்?" என்ருள்.

சதீஷ் பேசாமலிருந்தான்.

"அவள் யார்?"

"ஒரு அபாக்யவதி"

"இப்போது அவள் எங்கே இருக்கிருள்?"

"தெரியாது"

"தேடவில்லையா?"

சதீஷ் மிருதுவான குரலில், "தேடுவதில் என்ன லாபம்? அவள் நன்ருகத்தானிருக்கிருள் என்று கேள்விப் பட்டேன்."

"நன்ருக இருக்கிருளா? சீச்சி! இம்மாதிரி மோசவலையில் ஏன் போய் சிக்கிக் கொண்டாய்?"

சதீஷ் இம்முறை முகத்தை உயர்த்தி, "நான் ஏமாறவில்லை, மன்னி. ஏமாந்தது அவள்தான். நான் காதலித்தேன். அவளால் காதலிக்க முடியவில்லை." என்ருன்

"அப்புறம்?"

"முதலில் அவளால் அவள் மனதையே அறிந்து கொள்ள முடியவில்லை. அறிய முடிந்த போது போய் விட்டாள்"

"சொல்லிக் கொள்ளாமல் ஓடி விட்டாளா?"

சதீஷ் தலையை அசைத்துக் கொண்டு "இல்லை, அப்படியல்ல. போகு முன், 'ஒரு கீழ் சாதியை நேசித்து பகவான் முன்னிலையில் குற்றவாளியாகாதே' என்று எச்சரித்து விட்டுப் போனுள்" என்ருன்.

கிரணமயி திடுக்கிட்டு "என்ன சொல்லிப் போனுள்?" என்ருள்.

சதீஷ், சாவித்திரி கூறியதை ஒப்புவித்தான்.

கிரணமயி சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு "இனி எப்படியாவது சந்தித்தால் எனக்கு அவளைக் காட்ட வேண்டும்" என்ருள்

சதீஷ் விபினை மனதில் வைத்துக் கொண்டு "இனி சந்திக்க முடியாது மன்னி" என்ருன்.

கிரணமயினுடைய உதடுகளிலே ஒரு வறண்ட சிரிப்பு ஊசலாடியது. "ஊ ஹூம்! மறுபடியும் சந்திப்பு ஏற்படும்" என்ருள்.

"எப்போது ஏற்படும்? ஏன் ஏற்படும்? ஏற்படாவிட்டாலே நல்லது."

கிரணமயி தலையை அசைத்துக் கொண்டு, "எப்பொழுது சந்திப்பு ஏற்படும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனல், அவள் தனது கஷ்ட காலத்தில் அவசியம் உன்னைச் சந்திப்பாள். அதன் பலன் நன்மையாகத் தான் முடியும்; கெடுதலாக முடியாது. அவள் எங்கிருந்தாலும் சரி, உனது நன்மையைக் கோருபவளாகத் தானிருப்பாள். இதை என்றைக்கும் நீ மறந்து விடாதே'' என்ருள்.

அன்று சாயங்காலம் மரணவஸ்தையிலிருக்கும் தனது கணவனது படுக்கையை விட்டு எழுந்து சற்று வெளியில் வந்து நின்று கொண்டிருந்தாள். கதவருகில் சுவரில் சாய்ந்தபடி சதீஷ் உட்கார்ந்து கொண்டிருந்தான். ஒரு வேளை தூக்கக் கலக்கமா யிருக்கலாம். கிரணமயி ஆச்சரியத்துடன், "ஏன் இப்படி உட்கார்ந்துகொண்டிருக்கிருய்? வீட்டிற்கு ஏன் போகவில்லை?'' என்ருள்.

சதீஷின் சிந்தனை கலைந்தது. அவன் எழுந்து நின்று கொண்டு, "இல்லை மன்னி!'' என்ருன்.

"இவ்வளவு நேரம் எங்கு போயிருந்தாய்?''

"தெருவில் சுற்றிக் கொண்டிருந்தேன். இன்று வீட்டிற்குப் போகவில்லை.''

"முடியாது! இது என்ன நீ பேசுவது? சாப்பிட வில்லை, தூங்கவில்லை. முடியாது, நீ வீட்டிற்குப் போ அப்பா. இன்று பயப்பட வேண்டியதில்லை.''

சதீஷ் தலையை அசைத்துக் கொண்டு, "பயமிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, உன்னைத் தனியாக விட்டு நான் வீட்டிற்குப் போகமாட்டேன். நான் ஒட்டலில் சாப்பிட்டாய் விட்டது'' என்ருன்.

"அதெல்லாம் முடியாது. ஒட்டலில் சாப்பிட்டால் உனது வயிறு நிறையாது என்பது எனக்குத் தெரியும். நான் இரண்டாவது முறையும் சமைத்துத்தான் தீர வேண்டும். ரொம்ப நாளாகவே நீ வேளா வேளைக்குச் சாப்பிடுவதில்லை. குளிப்பதில்லை. உன் தேகம் ரொம்பக் கெட்டு வருகிறது. இன்று இரவும் நீ இங்கு தங்கினல் உனக்கு அவசியம் ஜுரம் வந்து விடும். இம்மாதிரி ஏற்பட நான் ஒரு நாளும் விடமாட்டேன்'' என்ருள் கிரணமயி.

சதீஷ் சிரித்து கோபத்துடன், "நான் இரண்டு நாளாகச் சாப்பிடாததாலும், தூங்காததாலும் ஜுரம் வந்து விடுமானல் நீங்கள் ஒரு மாதமாக என்னைப் போலவே இருந்து வருகிறீர்களே! உங்களுக்கு ஒன்றும் வரவில்லையே? நீங்கள் செய்வது மட்டிலும் நியாயமா? நீங்கள் ஒரு மாதமாக இம்மாதிரி இருந்தும் இறக்கவில்லையானல் நான் இரண்டு நாள் இருப்பதால் இறந்து விடுவேன?'' என்ருன்.

"நீ சொல்வதிலிருந்து என்ன தெரிகிறதென்ருல், ஒரு மாதம் சாப்பிடாமல் கொள்ளாமல் நானும்கூட இருக்க முடியும் என்று சொல்கிருய்!''

"நான் இதைச் சொல்லவில்லை. இருந்தாலும்.........''

கிரணமயி சிரித்துக்கொண்டு, "இல்லை, இருந்தாலும், ஆனலும், என்ன? நான் ஒரு பெண் தானே! பெண்ணிற்கு எங்காவது நோய் வருமா? இல்லை. பெண்

இறப்பதில்லை. சாப்பிடாததால் எங்காவது ஒரு பெண் இறந்திருக்கிருள் என்று கேள்விப்பட்டிருக்கிருயா?'' என்ருள்.

"இல்லை. கேள்விப்பட்டதில்லை தான். பெண்கள் சிரஞ்சீவி வரம் வாங்கிக் கொண்டே உலகத்தில் உதித்திருக்கிருர்கள் என்று தான் கேள்விப் பட்டிருக்கிறேன்.''

"ஆம், இது உண்மை தான். உயிர் இருக்கிற வரையிலும் இருக்கிறது. இல்லாது போகும் போது போவதென்ன? கடவுள் பெண்களுக்கு உயிர் கொடுக்கவில்லை. ஒரு பெண்ணை கழுத்தில் சுருக்கிட்டு பத்து, இருபது வருஷ வரையிலும் வேண்டுமானுலும் தூக்கிட்டுப் பாருங்கள். அவள் ஒரு போதும் சாகமாட்டாள்.''

"இதையெல்லாம் நான் கேட்க விரும்பவில்லை. கேட்டால் பாவம் ஏற்படும்.''

"உண்மையைக் கேட்டால் பாவம் வந்து சூழும் என்று உனக்கு யார் சொன்ஞர்கள்? சரி, நீ இவ்வளவு தூரம் பெண்களுக்கு எதற்காகப் பரிந்து பேசுகிருய்? சொல்லு பார்ப்போம்.''

சதீஷிற்கு உண்மையிலேயே கோபம் வந்து விட்டது. "மன்னி நீ அடிக்கடி பெண்கள் என்ற போர்வையில் உன்னைத் தாழ்த்திப் பேசிக் கொள்கிருய். ஏன் இப்படி நடந்து கொள்கிருய் என்று தெரியவில்லை. ஆனுல் ஒன்று சொல்லி விடுகிறேன். உங்களைப் பற்றி நீங்களே கேலியாகப் பேசுவதை நான் கேட்டுச் சகிக்க மாட்டேன். இது எனக்கு ரொம்பவும் கோபத்தை உண்டாக்குகிறது. சரி நான் போகிறேன்'' என்ருன்.

"இதோ பார்!''

சதீஷ் திரும்பி நின்று கொண்டான்.

"என்ன?'' என்ருன்.

"உண்மையிலேயே கோபம் அடைந்து விட்டாயா?''

"கோபம் வருகிறது மன்னி! இந்த உலகத்திலே நான் இரண்டு பேரிடம் அளவு கடந்த மதிப்பு வைத்திருக்கிறேன். உபேந்திர அண்ணு, நீங்கள். இரண்டு பேர் தான். ஒருவரை நினைத்தாலே மற்றவர் ஞாபகமும் தானே வந்து விடுகிறது. உங்களிருவரையும் நான் ஒன்ருகத் தான் பாவிக்கிறேன். ஆனுல் நான் இந்த வேடிக்கையை மட்டிலும் சகிக்க முடியவில்லை. போய் சாப்பிட்டு விட்டு வருகிறேன்'' என்று கூறி விட்டு சதீஷ் கீழே இறங்கினுன்.

கிரணமயி கண்ணை மூடிக் கொண்டு மேஜை மீது தலையை வைத்தபடி மயக்கம் வந்தவள் போல சாய்ந்து கொண்டிருந்தாள். அவள் காதிலே, 'உங்களிருவரையும் நான் ஒன்ருகவே பாவிக்கிறேன்' என்ற வார்த்தைகளே ஒலித்துக் கொண்டிருந்தன.

அத்தியாயம் இருபது

சதீஷ் யாரிடமும் சாவித்திரியைப் பற்றி இதற்கு முன் கூறியது கிடையாது. கிரணமயியிடம், சாவித்திரியைப் பற்றிக் கூறிய பிறகு அவன் உள்ளத்தில் சந்தோஷம் பொங்கியது. கிரணமயியை, சதீஷ் அன்னை போலப் பாவித்தான். அவளுடைய பேச்சில் அளவு கடந்த நம்பிக்கையும் சிரத்தையும் வைத்தான். 'துன்பத்திற்குப் பிறகு சந்திப்பு ஏற்படும்' என்று அவள் சொல்லியிருக்கிருள். இப்பொழுது அவன் மனதிலே

அம்மாதிரி சந்திப்பை எண்ணவும் தேகம் சிலிர்த்தது. அச்சமயம் எப்படி இருக்கும், என்ன துன்ப ரூபத்தில் அவள் தோன்றுவாள்? என யோசித்துக்கொண்டே இரவு எட்டு மணி சுமாருக்கு வீடு வந்து சேர்ந்தான். வீட்டிற்குள் நுழைந்ததும் ஒவ்வொரு வஸ்துவும் அவன் பார்வையைக் கவர்ந்தது. தூக்கில் சட்டை, வேஷ்டிகள் ஒழுங்காகத் தொங்கவிடப் பட்டிருப்பதைப் பார்த்தான். மான் கொம்பில் சாயங்காலம் தரித்துக் கொள்ளும் உடைகள் மடித்து வைக்கப் பட்டிருந்தன. உட்காரும் போது நாற்காலியில் அழுக்குத் துணிகள் இல்லாதிருப்பதைக் கண்டான். ஒரு வாரமாக வண்ணான் வராததால் அழுக்குத் துணிகள் குவிந்து கொண்டு வந்தன. உட்காரும் போது சதீஷ் கழற்றி வீசி எறிந்து விடுவான். பிறகு பிஹாரி எடுத்து ஒழுங்காக வைப்பான். இந்த ஒரு வாரமாக எஜமானனும் வேலைக்காரனும் இதே வேலையைத் தான் செய்து வந்தார்கள். திடீரென இவைகளெல்லாம் தலை கீழாக மாறியிருக்கின்றன. போர்வைகளும், தலையணை உறைகளும் அழுக்கடைந்திருந்தன. ஆனால் இன்றோ அவைகளெல்லாம் சுத்தமாயிருந்தன. கொசுவலை ரொம்ப நாளாகவே தாறு மாறாகத் தொங்கிக் கொண்டிருந்தது. ஆனால் இன்றோ, ஒழுங்காகக் கட்டப் பட்டிருந்தது. ரொம்ப நாளாக மங்கலாய் எரிந்து கொண்டிருந்த விளக்கு இன்று பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. எல்லாப் பக்கத்திலுமே இம்மாதிரி மாறுதலைக் கண்டு மிகுந்த சந்தோஷமடைந்தான். ஆனால் யாருடைய கரஸ்பரிசத்தால் மாறுதல் ஏற்பட்டது? கிழ வேலைக்காரன் காரியமில்லை இது. "பிஹாரி" என்று கூப்பிட்டான். மறைவில் நின்று கொண்டிருந்த பிஹாரி "இதோ வந்து விட்டேன்" என்றான்.

"இவைகளை யெல்லாம் நீயா செய்தது?"

பிஹாரி ஒன்றும் பதிலளிக்கவில்லை. மறுபடியும் சதீஷ் "இவைகளெல்லாம் செய்தால் வீட்டிற்குச் சோபையளிக்கவா செய்யாது? எனக்கு இன்று மிகுந்த உற்சாகமாக இருக்கிறது." என்றான்.

பிஹாரி அதிக வணக்கத்துடன் "இன்று உங்களுக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது" என்றான்.

"எங்கே?" என்று கூறிவிட்டு இங்கு மங்கும் மேஜை மீது பார்த்தான். பிறகு மேஜை மீது கிடந்த தந்தியைப் பார்த்துவிட்டு "உபேந்திரண்ணாவின் தந்தி இது. அவர் பதினேரு மணி வண்டிக்கு ஹவடா ஸ்டேஷனுக்கு வருவார்" என்று கூறிவிட்டுக் கடிகாரத்தைப் பாத்தான். மணி ஒன்பதாகியிருந்தது. அவன் மிகுந்த பரபரப்புடன் "பிஹாரி, ஜல்தியாகப் போய் ஒரு வண்டி கொண்டு வா" என்றான்.

ஐந்து நிமிஷத்திற்குள் வண்டி கொண்டு வந்து நிறுத்தி விட்டு, "ஐயாவை இங்கு அழைத்து வருவீர்களா?" என்றான்.

சதீஷ் சிறிது யோசித்து விட்டு, "இல்லை, இரவு வரமாட்டோம்" என்றான்.

உபேந்திர அண்ணா நேராக ஆரான் வீட்டிற்குப் போவார் என்பதில் சதீஷுக்குத் துளியும் சந்தேகமில்லை. ஏனென்றால் அவனுடைய மனைவியும் கூட வருபதாக தந்தியில் ஒன்றும் இல்லை.

சதீஷ் இதற்கு மத்தியில் சுடச் சுட இரண்டு மூன்று பூரி சாப்பிட்டிருந்தான். பிஹாரி ஒதுங்கி நின்றபடி "பாபுஜீ, ஒரு வேண்டுகோள்" என்முன். ஏதாவது முக்கியமான விஷயங்கள் கேட்க வேண்டியிருந்தால் பிஹாரி இம் மாதிரி பண்டித பாஷையில் தான் பேசுவது வழக்கம்.

சதீஷ் தலையை உயர்த்தி, "என்ன வேண்டுகோள்?" என்முன்.

பிஹாரி, "ஐயா!" என்று கூறி விட்டுப் பேசாமலிருந்தான்.

"ஐயா என்ன? என்ன சொல்லு" என்முன் சதீஷ்.

பிஹாரி விநயத்துடன், "முப்பது ரூபாய் கொடுத்தால்......" என்று கூறினன்.

சதீஷ் ஆச்சரியத்துடன், "முந்தாநாள் தானே முப்பது ரூபாய் வாங்கிக் கொண்டாய்? ஊருக்கு அனுப்பிவிட்டாயா?" என்முன்.

"அதற்காகத்தான் வாங்கினேன். ஆனல் விடுதி சமையல்க்காரன்........."

சமையல்க்காரனைப் பற்றிக் கேள்விப் படவே சதீஷ் கோபமடைந்தான். "அந்தப் பணத்தை சமையல்காரனுக்குக் கொடுத்து விட்டாயா? இதை யாருக்குத் தருமம் கொடுக்கப் போகிமுய்?"

"இல்லை, தருமம் கொடுக்கப் போவதில்லை. ஒருத்தர் ரொம்பத் துன்பப் படுகிமுர்......"

"கடன் கேட்கிமுஞ?"

"கடன் எதுக்குக் கொடுக்க வேண்டும்........."

"உன்னிடமிருந்தால் நீ கொடுத்துக்கொள் பிஹாரி. நான் தினமும் பணத்தை இழப்பதற்கு அவ்வளவு பெரிய மனிதனல்ல. நான் கொடுக்க முடியாது."

இந்தத் தடவை பிஹாரி மிகுந்த பிடிவாதத்துடன், "இல்லை, நீங்கள் கொடுக்காவிட்டால் முடியாது. என் சம்பளத்திலிருந்தாவது கொடுங்கள்" என்முன்.

இதைக் கேட்டு சதீஷ் திடுக்கிட்டான். "சம்பளத்திலிருந்தா? இது வரையிலும் எத்தனை ரூபாய் வாங்கியிருக்கிமுய் தெரியுமா?" என்முன்.

"எத்தனை ரூபாய் வாங்கியிருக்கிறேனே; அதிலிருந்து மூன்று காணி நிலமும், ஆடு மாடு எல்லாம் வாங்கியிருக்கிறேன். அதைத் தவிர ஒரு வீடும் கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனல் இந்தப் பணம் எல்லாம் என் சம்பளத்தைச் சேர்ந்ததல்ல. சம்பளப் பணமெல்லாம் உங்களிடம் தான் இருக்கின்றது. இன்று அதிலிருந்து கொடுங்கள்" என்முன் பிஹாரி.

சதீஷ் சிரித்துக் கொண்டு, "உன் பெண்டு பிள்ளைகளுக்காக நிலபுலன்கள் வாங்கி எனக்குப் பெரிய உபகாரம் செய்தாய் பிஹாரி! போ, என்னிடம் பணம் கிடையாது" எனக் கூறி விட்டு வேஷ்டியை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு ஸ்டேஷனுக்குப் புறப்பட்டான்.

பிஹாரி வீட்டிற்குள் வந்து "அம்மா, குளித்து விட்டு ஏதாவது கொஞ்சம் சாப்பிடு. நாளைக் காலையில் எப்படியாவது உனக்குப் பணம் கொடுத்து விடுகிறேன்" என்முன்.

சாவித்திரி அறைக்குள் ஒரு பலகையின் மேல் முந்தானையை விரித்துப் படுத்துக் கொண்டிருந்தாள். அவள் எழுந்து உட்கார்ந்து, "ஐயா பணம் கொடுக்கவில்லையா?" என்றாள்.

"அந்நியர் கஷ்டப் படுகிறார்கள் என்று கேட்டால் கொடுப்பார். எஜமானன் கொடையில் கர்ணன் தான். இப்போது கொடுக்கவில்லை. ஸ்டேஷனுக்குப் போய் விட்டார். ஆனால் காலையில் திரும்பி வந்ததும் கூப்பிட்டுக் கொடுப்பார். நீ ஒன்றும் கவலைப் படாதே. எழுந்து சாப்பிடு. நாள் முழுதும் இப்படியே இருப்பவளா?"

சாவித்திரியின் வெளிரிய முகத்தில் சிறிது புன்முறுவல் தெரிந்தது. "இன்று இரவு அவர் வராமல் இருப்பது நல்லது தான். நாளை மத்தியான வண்டிக்குக் காசி போய் விடுவேன். என் பிஹாரி, சரிதானே?" என்றாள்.

"சரிதான் அம்மா!" என்று கூறி விட்டு சிறிது நேரத்திற்குப் பிறகு, "நீ ஒரு பக்கம், என் எஜமானர் ஒரு பக்கம்! ஊரிலிருந்து கிழவி உருக்கமாக ஒரு கடிதம் எழுதியிருந்தாள். ஐயா படித்து விட்டு, "பிஹாரி, உனக்கு வீடு வாசல் ஒன்றுமே கிடையாதா?" என்று கேட்டார். நான், "ஏழைக்கு அது எல்லாம் ஏது?" என்றேன். அவர் வேறு ஒன்றும் கேட்கவில்லை. நாலு நாளைக்குப் பிறகு அறுநூறு ரூபாய் கொடுத்து என்னை ஊருக்கு அனுப்பி விட்டார். நிலங்கள், ஆடுமாடு, வீடு வாசல் எல்லாம் வாங்கினேன். எல்லாவற்றையும் பிள்ளைகள் வசம் ஒப்புவித்து விட்டு ஒரு மாதத்திற்குள் எஜமானரிடம் வந்து விட்டேன். கிழவி அழுது கொண்டே, 'என்னையும் கூட்டிக் கொண்டு போ. அவரை ஒரு முறை தரிசித்துவிட்டு வருகிறேன்' என்றாள். அதற்கு நான், "வேண்டாம், இன்னும் அதிகமாகக் கடமைப் பட்டுக்கொள்ள வேண்டாம். நீ வந்தால் இன்னும் நூறு இருநூறு கொடுத்து விடுவார்" என்று தடுத்து விட்டேன். உனது எஜமானரோ மருந்து வாங்கிக் கொடுத்ததற்குப் பணத்தைக் கொடுத்து விட்டுப் போகச் சொல்லுகிறார். ஆஹா! வேலை செய்யப் போய் உனக்கு எத்தனை துன்பம் ஏற்பட்டது அம்மா! எங்களுக்கு இது ஒன்றும் தெரியாது. ஆகையால் விபின் பாபுவிடம் இருக்கிறாய் என்று நினைத்து உன்னை எவ்வளவு திட்டினோம்! என்னை மன்னித்து விடு. இல்லாவிட்டால் எனக்கு ஆறுதல் உண்டாகாது" என்றான்.

விபினுடைய பெயரைக் கேட்டதும் சாவித்திரி வெறுப்புடன், 'ச்சீ! ச்சீ!' என்றாள். ஆனால் மறுகணமே புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு, "ஒரு துணி கொடு, குளித்துக் கொள்கிறேன்' என்றாள்.

"துணியா?" என அலட்சியமாகக் கூறிவிட்டு, "உன் தருமத்தில் ஒன்றல்ல, பத்து வேண்டுமானாலும் கொடுக்கிறேன். ஆனால் நான் கட்டின வேஷ்டியை எப்படிக் கொடுக்கட்டும்? இரு, ஐயா வேஷ்டியில் ஒன்று கொண்டு வந்து கொடுக்கிறேன்" என்றான்.

பிஹாரி இவைகளிலெல்லாம் ரொம்பக் கண்டிப்பாக இருப்பான். ஆகையால் அவனுடன் தர்க்கம் செய்வது வீண் எனக் கருதி அவனோடு அறைக்குள் வந்தாள் சாவித்திரி.

(தொடரும்)

அண்ணன் செய்த உதவி

சி. ஆர். ராமசுவாமி

வரதராஜய்யங்கார் சென்னையில் ஒரு பெரிய வக்கீல். அவருக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். இருபது வயதுள்ள கோபாலன் என்ற பையனும் பதினாறு வயதுள்ள கமலா என்ற பெண்ணும் தான் அவருடைய சம்பத்து என்று சொல்லலாம். வக்கீல் தொழிலில் எவ்வளவு சம்பாதித்தாரோ அதையெல்லாம் கூசாமல் செலவழித்து மக்களைச் செல்லமாய் வளர்த்தார். அவருடைய மனைவி லக்ஷ்மியம்மாள் இருபத்தைந்தாவது வயதிலேயே இறந்துவிட்டாள். வரதராஜய்யங்கார் அவள் மேல் உயிராயிருந்தார். ஆனால் நாம் யாரிடத்தில் அல்லது எந்த வஸ்துவின் மேல் அதிக மோகங் கொள்கிறோமோ அதை பகவான் அபகரித்துப் போய்விடுவது அவர் வழக்கம் போலும். இரண்டு மூன்று வருஷங்கள் கண் இழந்தவனைப் போல் ஊக்கமற்று பரிதபித்துப் பிறகு தன் கவனத்தையும் அன்பையும் மக்கள் மேல் செலுத்தத் தொடங்கினார். பையன் மிகவும் புத்திசாலி. பரிக்ஷைகளில் நன்றாய்த் தேறி இஞ்சினியரிங் காலேஜில் படித்து வந்தான். பெண் இண்டர்மிடியட் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். அவள் நல்ல அழகும், குணமும் படைத்தவள்.

தந்தைக்கு தாயிறந்த தன் பெண்ணுக்கு அவசரப் பட்டு யாருக்கோ கொடுத்துவிட மனம் வரவில்லை. நல்ல இடத்தில் பார்த்துக் கொடுப்பதற்குக் கையில் பணமில்லை ஆகையால் அவர் தன் மனச்சாட்சிக்கு விரோதமாய், பிள்ளைக்கு முதலில் கல்யாணம் செய்து வைத்து, அதில் ஏதாவது கிடைத்தால் அதைப் பெண்ணுக்காகச் செலவழிக்கலாமென்று எண்ணினார்.

தன் சிநேகிதர் சப் ஜட்ஜு கோவிந்தாச்சாரியாருடையபெண் அலமேலுவை நிச்சயம் செய்யலாம் என்று விருப்பப் பட்டு சப் ஜட்ஜைக் கேட்டார். அவரும் கோபாலன் புத்திசாலி, லட்சணமாகவுமிருக்கிறான் என்று ஒப்புக் கொண்டார். வரதராஜய்யங்கார் கேட்குமுன்னரே, வைரத் தோடும் ஒட்டியாணமும் வரதட்சிணை மூவாயிரமும் கொடுப்பதாகச் சொன்னார். பெண் மாநிறமாக விருந்தாலும் கண் மூக்கு நன்றாயிருந்தது. கல்யாணம் நடந்து விட்டதாகவே எண்ணி மகிழ்ச்சியுடன் வீட்டிற்குத் திரும்பினார்.

அன்று கோபாலன் வீட்டிற்கு இரவு 11 மணிக்கு மேல்தான்

வந்தான். தகப்பனர் ஏன் இவ்வளவு நேரம் என்று கேட்டார். "நான் என் சிநேகிதன் தேசிகனுடன் சினிமாவுக்குப் போயிருந்தேன்" என்று சொன்னன். அவனை சினிமாவுக்கு இழுத்தது தேசிகனல்ல. தேசிகன் தங்கை சுந்தரியும் சினிமாவுக்கு அவன் கூட வந்திருந்தாள். தேசிகன் கோபாலனைக் கூட வரும்படி சொன்னதும் அவனும் போனன். தேசிகனுக்கும் கோபாலனுக்கும் ஒருவர் தங்கையை ஒருவன் கல்யாணம் செய்து கொண்டு விடுவதாக ஒருவிதமான உடன்படிக்கை ஏற்பட்டிருந்தது. ஆகையால் கோபாலன் வீட்டுக்கு வந்தவுடன் அவன் தகப்பனர் ஏன் நேரமாயிற்று என்று கேட்டதும் சற்று திகிலடைந்தான். கொஞ்சநாட்களாக தன் கல்யாணத்தைப் பற்றி தகப்பனர் யோசனை செய்து கொண்டிருப்பது அவனுக்குத் தெரியும். அவர் அதைப் பற்றி தன்னிடம் பேசப் புகுந்தால் தான் என்ன பதில் சொல்லுவது, தனக்கு தேசிகன் தங்கை சுந்தரியை மணந்து கொள்ள விருப்பமென்று சொல்லிவிடலாமா, அதற்குத் தகப்பனர் ஒத்துக் கொள்வாரா என்று ஏங்கியிருந்தான். தகப்பனர் இரவில் தன்னுடன் எதிர்பாராத விதமாய் பேசத் தொடங்கியதும் அவர் தனது கல்யாண விஷயமாய்த் தான் பேசப் போகிறரென்று ஊகித்தான்.

அவன் நினைத்த மாதிரியே வரதராஜய்யங்கார், இந்த ஊரிலேயே "நான் உனக்கு ஓரிடத்தில் பெண் பார்த்திருக்கிறேன்......வேறுயாருமில்லை. சப் ஜட்ஜு கோவிந்தாச்சாரி தெரியுமோ இல்லையோ. அவர் தன் பெண் அலமேலுவை உனக்குக் கொடுப்பதாக ஒத்துக் கொண்டிருக்கிறர். எல்லா ஏற்பாடுகளும் செய்தாய் விட்டது. நீ பெண்ணைப் பார்ப்பதுதான் பாக்கி" என்றர்.

அதற்கு கோபாலன், "என்ன அப்பா பழைய காலத்து மனிதர் மாதிரி பேசுகிறீர்கள்? முதலில் நான் பெண்ணைப் பார்த்து ஒத்துக் கொண்ட பின்னல்லவா நீங்கள் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்? எனக்குப் பெண் பிடிக்காவிட்டால் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படுமே?" என்றன்.

வரதராஜய்யங்கார், "பிடிக்காமலிருக்கக் காரணமில்லை. நீ போய் பார்த்துவிட்டு வா" என்றர்.

கோபாலன் அலமேலுவைப் பற்றி சுந்தரி பேசக் கேட்டிருக்கிறன். பெண் அவ்வளவு அழகில்லையென்று அறிவான். குட்டையாய் சற்று பருமனயிருப்பாளென்றும் கறுப்பு என்றும் சுந்தரி சொல்லக் கேட்டிருந்தான் சுந்தரி, கமலா, அலமேலு எல்லாரும் காலேஜில் ஒரே வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார்கள். ஆனல் இதைத் தகப்பனருக்குச் சொல்லக் கூச்சம் கொண்டு "போய்ப் பார்க்கிறேன்" என்று சொன்னன். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமையாயிருந்ததால் 9 மணிக்குப் புறப்பட்டு பெண்ணைப் பார்த்துவிட்டு வந்து "அப்பா அந்தப் பெண் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை" என்று சொல்லிவிட்டான். வரதராஜய்யங்கார் சற்றுக் கோபமாய், "இந்தக் காலத்துப் பையன்களுக்கு புத்தியேயில்லை. சினிமாவுக்குப் போய் மூளையைக் கெடுத்துக்கொண்டு விடுகிறர்கள். ஒவ்வொரு கல்யாணமும் சகுந்தலை துஷ்யந்தன் மணம் போலிருக்கு மென்று சங்

கற்பம் செய்து கொண்டு விடுகிருர்கள்.'' அதற்கு கோபாலன் "மணம் செய்து கொள்பவர்கள் ஒருவரை யொருவர் விரும்ப வேண்டாமா? நமது புராணங்கள் சொல்லும் மற்ற நீதிகளை யெல்லாம் நியாயமென்று ஒத்துக் கொண்டு, அவற்றில் காணப் படும் முக்கிய விஷயமாகிய தம்பதிகளிடையே உள்ள அழகிய காதலை மட்டும் மறந்து விடலாமா? காதலைப் பற்றி பாரதியார் பாடவில்லையா? செல்வம், யோகம், பெயர் இதெல்லாம் மனித வாழ்க்கையில் நிச்சயமில்லை. கடைசியில் நிலைத்திருப்பது அன்புதானே? எனக்கு இஷ்டமில்லாத ஒருவனை எனக்கு மணம் செய்ய விரும்புகிறீரே, கமலாவை அவளை விரும்பாத ஒருவன் கல்யாணம் செய்து கொண்டால் அவள் வாழ்க்கை சுகமாயிருக்குமா? செல்வமும் கௌரவமும் காதலில்லாத மணத்தின் குறைகளை ஈடாக்குமா?'' என்று கேட்டான்.

இதற்கு வரதராஜய்யங்கார் பதில் சொல்லவில்லை. மனைவியின் மேல் மேன்மையான அன்பு காட்டி, அவள் இறந்த துக்கத்தை பிள்ளையையும் பெண்ணையும் அருமையாய் வளர்ப்பதில் ஒருவாறு மறந்திருந்த அவர், பிள்ளையை எதிர்த்துப் பேச விரும்பவில்லை. "உன் இஷ்டப்படி செய். உன் நன்மையைக் கோறித்தான் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொன்னேன்'' என்று மனம் உடைந்து போனவர் போல் சொன்னர். கோபாலன், "அப்பா உமது கஷ்டம் எனக்குத் தெரியாமலில்லை. உமக்கு அந்தப் பெண்ணை நான் கல்யாணம் செய்ய விரும்பாதது ஏன் அவ்வளவு விசனத்தை உண்டாக்க வேண்டும்?'' என்று கேட்டான். வரதராஜய்யங்கார், "அவர் நகைகளும், வரதக்ஷிணை மூவாயிரமும் கொடுக்கிறேனென்று ஒத்துக் கொண்டார். கமலாவின் கல்யாணம் செய்து முடித்துவிடலாமென்று நினைத்தேன்'' என்ருர். கோபாலன், எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. என் சிநேகிதன் தேசிகன் இருக்கிருன். அவன் கமலாவைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டப் படுகிருன். கமலாவை அவனுக்குக் கொடுத்து முடித்து விடுங்கள். கமலாவும் அதற்குப் பிரியப்படுவாளென்று எனக்குத் தெரியும். என்னுடைய விவாகத்தைப் பற்றி பிறகு யோசித்துக் கொள்ளலாம். அவன் பி. ஏ படிக்கிருன். வக்கீல் பரிக்ஷைக்குப் படிக்கலாமென்று மிருக்கிருன்.''

வரதராஜய்யங்கார், "வக்கீல்களுக்குக் கணக்கில்லை. படித்தவுடன் என்ன சம்பாதித்துவிடப் போகிருன்? மேலும் வரதக்ஷிணைக்கும் கல்யாணச் செலவிற்கும் பணமெங்கே?'' என்ருர். கோபாலன், "அவர்கள் வரதக்ஷிணை கேட்கமாட்டார்கள். கல்யாணமும் தடபுடலாய்ச் செய்யவேண்டுமென்று வற்புறுத்தமாட்டார்கள்'' என்ருன்.

வரதராஜய்யங்கார் 'சரி' என்று ஒத்துக் கொண்டார்.

* * *

கல்யாணம் சச்சரவில்லாமல் நடந்தேறியது. கமலா காலேஜில் படித்துக் கொண்டே இருந்தாள். அவளை இண்டர் மீடியட் படித்து முடித்தவுடன் புருஷனிடம் அனுப்பிவிடுவதாக வரதராஜய்யங்கார் சொன்னர். சம்பந்திராக வாச்சாரியும் இதுவரையில் படித்தது வீணுக வேண்டுமென்று

ஒத்துக் கொண்டார். ஆறு மாதங்கள் சென்றன. ராகவாச்சாரி நிறையப் பணம் போட்டிருந்த ஒருகம்பெனி முறிந்துவிட்டது. பையன் தேசிகனுடைய சட்டப் பரீக்ஷைப் படிப்பு நின்று விட்டது. ஏதோ ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் அதன் பம்பாய் ஆபீசில் மாசம் 75 ரூபாய்க்கு ஒரு குமாஸ்தா வேலையில் அமர்ந்தான். தாதரில் குடியிருந்தான். மாமனருக்கு கமலாவை அனுப்பிவிடும் படி கடிதம் போட்டான். அந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன் வரதராஜய்யங்காருக்குச் சொல்ல முடியாத துக்கம் வந்தது. செல்வமாய் வளர்த்த பெண்ணை எங்கேயோ திக்கற்ற ஒரு குமாஸ்தாவுக்குக் கட்டிக் கொடுக்க நேர்ந்ததே என்று வருத்தப் பட்டார். உடனே ஒரு கடிதம் எழுதினர். "உனக்கு வரும் சிறிய சம்பளத்தில் ஒரு குடும்பம் நடத்துவது கஷ்ட மென்று நினைக்கிறேன். கமலா இங்கேயே படித்துக் கொண்டிருக்கட்டும். உன் சம்பளம் சற்று உயர்ந்ததும் கமலாவை அழைத்துக் கொள்" இவ்வாறு கடிதம் எழுதி உடனே தபாலில் போட்டுவிட்டார். கோபாலனுக்கும் நடந்ததைச் சொல்லிவிட்டார். மாதங்களாயும் தேசிகனிடத்திலிருந்து பதில் வரவில்லை.

* * *

ஒரு வருஷம் சென்றது. அப்பொழுதும் தேசிகனிடமிருந்து கடிதம் வரவில்லை. வரதராஜய்யங்கார் திகிலடைந்தார். அவருக்கு அடிக்கடி மாரடைப்பு வர ஆரம்பித்தது. டாக்டர் ஜாக்கிரதையாக இருக்கவேண்டு மென்று சொன்னர். ஒருநாள் பேப்பரில் பம்பாயில் ஒரு வெடி மருந்துக் கப்பல் எரிந்து பல கட்டிடங்கள் சேதமேற்பட்ட தென்று படித்தார்கள். இரண்டு மூன்று நாட்கள் கழித்து தேசிகன் குமாஸ்தாவாக விருந்த இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியும் நாசமடைந்த கட்டிடங்களி லொன்று என்று வரதராஜய்யங்காருக்குத் தெரிய வந்தது. இந்த ஏக்கத்திலேயே அவருடைய வியாதி கொஞ்சம் அதிகரித்தது. டாக்டர் பார்த்து தேகஸ்திதி நன்றுயில்லை யென்று சொன்னர். படுத்த படுக்கையாகவே இருந்தார். கமலா தன்னுடைய துக்கத்தை அவருக்குப் பணிவிடை செய்வதில் மறந்தாள். கோபாலன் ஏதோ பாவம் செய்தவன் போல் பரிதபித்தான்.

கோபாலனுக்குத் துக்கம் தாங்கவில்லை. தன்னால்தான் எல்லாம் வந்தது என்று துயரத்தில் மூழ்கினன். கடைசியில் அதையும் பார்த்துவிடலாமென்று, தேசிகன் பம்பாயில் வேலை செய்து வந்த இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு ஒரு தந்தி அடித்தான். "என் தகப்பனர் மரணத் தருவாயிலிருக்கிருர். கமலா உடனே உன் வரவை எதிர் பார்க்கிருள்" என்று அனுப்பினன்.

அடுத்த நாள் சாயந்திரமே பதில் வந்தது. "ஞாயிற்றுக் கிழமை காலையில் வருகிறேன். ஸ்டேஷனில் பார்க்கவும்"

கோபாலன் ஸ்டேஷனுக்குப் போனன். தான் தந்தி அடித்ததையும் தேசிகனிடத்திலிருந்து பதில் கிடைத்ததையும் தகப்பனரிடமும் சொல்லவில்லை கமலாவிடமும் சொல்லவில்லை.

வரதராஜய்யங்காருக்கு இப்பொழுது சற்று சுகமாயிருந்தது. யார்வலி அனேகமாக நின்று விட்டது. டாக்டர் வரும் நேரம்

ஆயிற்று. வாசலில் ஒரு கார் வந்து நின்றது. டாக்டர் தான் வழக்கம் போல் வந்திருக்கிறார் என்று நினைத்தார். பிறகு, "யார் இது தெரியவில்லையே, பெரிய சரிகைத் தலைப்பாவும் பஞ்சகச்சையும் வைஷ்ணவ நாமமும்? கையில் ஒரு பகவத் கீதை புத்தகம்" என்றார். கோபாலன் அவர் பின்னால் வந்தான். தனக்கு ஒரு பாகவதரை ராமாயணமோ பாரதமோ வாசிக்க கோபாலன் இவரை அழைத்து வந்திருக்கிறானென்று மரியாதையாய் நமஸ்காரம் செய்தார்.

பாகவதரும் ஒரு பகவத் கீதை புஸ்தகத்தை யெடுத்து சுலோகங்களை வாசிக்க ஆரம்பித்தார். இரண்டு மூன்று சுலோகங்கள் கம்பீரமாய் வாசித்தார். அதற்குள் கமலா தட்டில் பழங்களை எடுத்தபடி அறைக்குள் வந்தாள். பாகவதரைப் பார்த்துச் சிரித்து, மெதுவாய் தட்டைக் கீழே வைத்து, "அப்பா, அவர் தெரியவில்லையா?" என்று கேட்டாள்.

பிறகு ஒரே ஆனந்தம். தேசிகன் இப்பொழுது தான் குமாஸ்தா வேலை செய்து வந்த இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியார் புதிதாய் ஏற்படுத்திய மதராஸ் ஆபீசின் மேனேஜராக நியமிக்கப்பட்டிருப்பதாகவும், கோபாலன் தந்தி வந்ததும் ஏற்பாடுகளை துரிதப்படுத்தி உடனே வந்து விட்டதாகவும் கூறினன்.

கோபாலன் மெத்தை நிலா முற்றத்தில் சாய்ந்து ஆலோசனையிலாழ்ந்திருந்தான். கமலாவின் புருஷன் வந்து அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துப் போய் ஒரு மாதமாயிற்று. தகப்பனருக்கு இப்பொழுது உடம்பு முற்றிலும் குணமடைந்து விட்டது. அவன் மனத்தில் இன்னும் என்ன துக்கம்? அவன் யோசனைகளுக்கு விளக்கு வைத்தாற் போல் பூர்ண சந்திரன் ஒரு மேகத்திலிருந்து துள்ளி வெளியே வந்தான். ஆகா! இந்தப் பூர்ண சந்திரன் நீல வெளியில் பொழியும் வெண்ணிலாவின் அழகை எல்லாருந்தான் பார்க்கிறார்கள். இரவில் திருடப் போகும் ஒருவன் அதைப் பார்த்து தன் துரதிர்ஷ்டத்தை நிந்திக்கிறான். ஒரு நாய் அதைப் பார்த்து காரணமின்றி ஊளையிடுகிறது. வால்மீகி ஒரு அத்தியாயம் முழுதும் அதை வர்ணிக்கிறார். ஒரே நிகழ்ச்சியினால் ஒவ்வொருவரிடமும் காணும் உணர்ச்சி தாரதம்மியத்தைப் பாருங்கள்! பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வரும் இந்தப் பூர்ண சந்திரனுடைய ஒளியை கோபாலன் ஒரு சிறு காகிதத் துண்டால் மறைத்துக் கொள்கிறான். இந்தக் குளிர்ந்த நிலா வெளிச்சம் அவன் நெஞ்சத்தை உறுத்திற்று. எட்டாத தூரத்திலிருந்து தன்னை நோக்கி முழங்கை தூரம் வந்து ஒரு சிறு காகிதத் துண்டாலல்லவோ தனக்குக் கிடைக்காமல் போய் விட்டது என்று யோசிக்கிறான்.

சுந்தரியும் தனக்கு இப்படிக் கிட்டாமல் போய்விடுவாளோ என்று பயந்தான். ராகவாச்சாரி செல்வமிழந்து கஷ்ட தசை அடைந்த பிறகு தன் மகன் படிப்பை நிறுத்தி விட்டு மகள் சுந்தரியையும் காலேஜிலிருந்து நிறுத்தி விட்டார். அவளை பாட்டு, பரத நாட்டியம் எல்லாம் கற்கச் செய்தார். சுந்தரி இப்பொழுது பாட்டுக் கச்சேரிகளும், அபிநயக் கச்சேரிகளும் செய்யக் கூடியவளாய் நல்ல பேர் சம்பாதித்து தகப்பனருக்கு அவளைப் பற்றிய கவலையைத் தீர்த்தாள். கோபாலன் கையிலிருந்த கடிதம் அவளிட

மிருந்து வந்த கடிதம் தான். அதில், தான் அவனை மறந்துவிட வில்லை யென்றும், தகப்பனரின் அனுமதி பெற்று தன்னை மணந்து கொள்ள விரும்பினுல் தான் அதற்கு ஒரு ஆட்சேபணையும் செய்யவில்லை யென்று மெழுதி யிருந்தது. ஆனல் கோபால னுக்கு அதைத் தகப்பனரிடம் சொன்னல் மறுபடியும் அவர் எங்கே கோபமுற்று பழைய தேகஸ்திதிக்கு வந்து விடுவாரோ என்று பயப்பட்டான். மேலும் கடிதத்தைப் படித்தான். அதில் தான் அடுத்த ஞாயிற்றுக் கிழமை குமாரசம்பவத்தை ஒரு கச்சேரி யில் அபிநயம் செய்து காட்டப் போவதாகவும் அவனை அதற்கு வரும்படியும் கேட்டிருந்தாள்.

ஞாயிற்றுக்கிழமை மாலை நாலு மணி. வரதராஜய்யங்கார் ஒரு பேப்பர் வைத்துப் படித்துக் கொண்டிருந்தார்.

“இந்தப் பத்திரிகைகளின் தலை யங்கங்ளைகப் படித்தால் வேடிக் கையாயிருக்கிறது. ஒவ்வொரு நாளும் இவர்கள் பேச்சைக் கேட் டுத்தான் ஐரோப்பாவில் சர்ச்சி லும் ஹிட்லரும் போரை நடத்து கிருர்களென்று ஒரு பிரமை கொண்டிருக்கிருர்கள் போலிருக் கிறது'' என்ருர்.

இரவு தேசிகன், “அதைக் கீழே போட்டுவிடும். இன்று 7 மணிக்கு மேல் ராமகிருஷ்ண மடத்தில் குமாரசம்பவம் அபிநயக் கச்சேரியாக நடக்கிறது. அதற் குப் போகலாமா?'' என்ருன்.

வரதர்ாஜய்யங்காருக்கு சமஸ் கிருதத்தில் அதிலும் காளிதாச னுடைய காவியத்தில் மிகவும் ருசி. ‘போகலாம்’ என்ருர்.

இவர்கள் போவதற்கு முன் கச்சேரியில் பெரிய கூட்டம் சேர்ந்திருந்தது. டிக்கட்டுகள் 5 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை யில். கச்சேரி செய்பவள், சிறு பெண், சரஸ்வதி போல் அழகு. பாட்டிலும் அபிநயத்திலும் ஊர் வசியைக்கூட தோற்கடிப்பாள் என்று சிலர் பேசிக் கொண்டார் கள். டிக்கட்டுகளெல்லாம் ஒரு வாரத்திற்கு முன்னமேயே விற் றுப் போய் விட்டன. கோபா லன் டிக்கட்டுகளுக்குக் கொஞ் சம் சிரமப்பட்டு ஏற்பாடு செய்தி ருந்தான். வரதராஜய்யங்கார் கண் கொட்டாமல் அபிநயத்தை ரசித்துக் கொண்டிருந்தார்.

பரமசிவனை வர்ணித்து, அவரை இகழ்ந்து கூறி முடித்தவுடன் பார்வதி பேச ஆரம்பிக்கிருள்.

“நீ அரனை சரியாய் அறிந்து கொள்ளாமல் இந்தமாதிரி பேசுகி ருய். இதில் ஆச்சரியம் ஒன்று மில்லை'' என்று கோபமாக ஆரம் பிக்கிருள். கடைசியில் அவன் மறுபடியும் பேச ஆரம்பிப்பதைப் பார்த்து.

“தீயோர் சொல்வதும் தீதே, தீயோர் பேச்சைக் கேட்பவரும் தீயரே'' என்று சொல்லி அவ் விடம் விட்டு அகல, ஒரு காலைத் தூக்கி ஒரு அடிவைக்கப் பார்க்கி ருள். அதை வர்ணிப்பதில்தான் காளிதாசனின் கவிதையழகும் அபிநயிப்பவரின் நடிப்புத் திறமை யும் வெளியாகிறது. சபையோர் ஆனந்த பரவசமாய்க் கவனித்த னர்.

கச்சேரி முடிந்தது. வரதராஜய் யங்கார் வீடு வந்து சேர்ந்தார். “பெண்களைக் கச்சேரியில் பாடச் செய்வது சுத்தத் தப்புஎன் கிற கொள்கையைக் கொண்டிருந்

தேன். நம்முடைய எண்ணங்கள் நாம் நினைத்தபடி நடக்கவிடாமல் கடவுள் செய்வது சில சமயத்தில் உலகத்துக்கு நல்லதென்றே தோன்றுகிறது. இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்பவன் ஒரு மகானயிருக்கவேண்டும்" என்றார்.

அடுத்த நாள் காலை 8 மணிக்கு ஒரு வண்டி வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து ராகவாச்சாரியும், தேசிகனும் ஒரு பெண்ணும் இறங்கினர்கள். வரதராஜய்யங்காரும் எதிர் கொண்டழைத்தார். ஆச்சரியம்! பெண்ணைப் பார்த்தால் நேற்று அபிநயம் செய்த மங்கை மாதிரியல்லவா யிருக்கிறது!

தேசிகன், "இவள் என்னுடைய தங்கை. அப்பா உங்களுக்கு இவளைக் காட்டி தாங்கள் அனுமதித்தால் உங்கள் பிள்ளைக்கு இவளை விவாகம் செய்து வைக்கலாமென்று பிரியப்படுகிறார்" என்றான்.

வரதராஜய்யங்கார், "கோபாலன் ஆபீசுக்குப் போய்விட்டான், வீட்டிலில்லையே" என்றார். கோபாலன் இப்பொழுது மதராசில் எலெக்ட்ரிக் ஆபீசில் ஒரு உத்தியோகஸ்தன்.

ராகவாச்சாரியார், "உங்கள் பிள்ளைக்கு இவளை வெகு நாளாய்த் தெரியும். தேசிகன் கல்யாணத்திற்கு முன்னிருந்தே தெரியும். இருவருக்கும் பரஸ்பரம் பிரியமுண்டு" என்றார்.

"அவனுக்கு இஷ்டமிருந்தால் எனக்கு ஒரு ஆட்சேபணையுமில்லையென்றார்" வரதராஜய்யங்கார்.

தேசிகனுக்கும் சுந்தரிக்கும் கல்யாணம் வெகு ஆடம்பரமாய் நடந்தது. அன்பர்களிடமிருந்து பரிசுகள் ஏராளமாய் வந்து குவிந்தன.

கவிதை மணம்

அம்புலியின் தோணியிலே நீலம் ஏற்றும்
அழகென்ற ஆழமுள்ள ஆழிக்கண்ணுள்
செம்பவளச் சிலைகொக்கி போன்ற இதழில்
சிரிப்பென்னும் சரவிளக்கு திகழவந்தாள்
கும்மிருட்டுக் கூந்தலினைத் தென்றலலை மோத
கொட்டினவே முல்லைமலர் விண்மீனைப் போல
'கம்' மெனவே கமழ்ந்ததுவே கனவில்மும் மணமே
கவிதையினல் பெண்மலரைக்காதலில் மணந்தேன்!

— வி. எஸ். ஆர்.

"சுகி"

வாழ்க்கை முறையை யொட்டி படிப்பும் இருக்க வேண்டு மென்று கல்வி மேதாவிகள் கதறு கிறார்கள். யுத்தம் எப்படிக் கல்விக் குள் நுழைய முடியும் என்பதற்கு கணக்கை மட்டும் ஒரு சான்றாகச் சொல்லுகிறேன்.

(1) ராமன் மணிக்கு 13 ஏ. ஆர். பி. குழிகள் வெட்டும் நேரத்தில், கிருஷ்ணன் 3 குழிகள் குறைவாக வெட்ட முடியும். ராமனைவிட 50% வேலை தான் கோவிந்தனுக் குச் செய்ய முடியும். மூவரும் 131 குழிகள் எத்தனை நாளில் வெட்டுவார்கள்? அவர்கள் சம்பள விதம் 3 : 2 : 1 என்றாலும், பஞ்சப் படி 5 : 4 : 3 ஆகும். கோவிந்த னுக்குள்ள சர்க்கரை ரேஷன் எவ்வளவு? அவன் உடுத்தியிருந்த மலிவுத் துணியின் விலையென்ன?

(2) ஐந்து நிமிஷத்தில் இருபது லாந்தல் கம்பங்களைத் தாண்டி மிலிட்டரி லாரி வந்தால், இறந்த வரின் எண்ணிக்கை கம்பத்தில் இரண்டு பங்கு ஆகும். தப்பியவர் எண்ணிக்கை கம்பத்தைப் போல் ஆறு மடங்கு அதிகம் என்றால், பாதசாரிகளின் ஓட்ட வேகத்திற் கும் லாரியின் வேகத்திற்குமுள்ள சதவிகிதம் என்ன? ஓட ஆரம்பித்த ஒரு நிமிஷத்தில் அபாயச் சங்கு ஊதினால் ஓட்டத்தின் வேகம் லாரி யைவிட $\frac{3}{4}$ பங்கு அதிகமாகும். உயிர் தப்பியவர்களை லாரியில் உள்ள நம்பர் பிளேட்டுகளுக்கு பின்னமாக்குக!

(3) ரயில் புறப்பட்டதும் ஒரு பிளேட் பாரத்தில் புருஷர்களை விட்டுப் பரதவித்த மனைவியர்கள் அறுபது பேர்; இவர்களைப் போல் இரண்டு பங்கு புருஷர்கள் மனைவிகளை விட்டுப் பரதவித்தவர் கள். தாயைப் பிரிந்த குழந்தை களும், குழந்தையைப் பிரிந்த தாய் மார்களும் 4 : 5 என்ற விகித மானால், ஓடின் மெயிலில் ஏறிக் கொண்ட நபர்கள் எத்தனை பேர்? விட்டுப் போன படுக்கைகள்,

கூஜாக்கள் எவ்வளவு? வண்டி புறப்பட்டதும், ஒவ்வொரு வாசற் கதவிலும் ஒன்பது பேர் சராசரி கீழே விழுந்த பின்பு 30 மைல் வேகத்தில் புறப்பட்ட எஞ்சின் 35 வேகத்தில் ஓட ஆரம்பித்தால், விழுந்தவர்களில் எத்தனை பேர் அநாவசியப் பிரயாணம் செய்தவர்கள்? அப்படி அநாவசியப் பிரயாணம் செய்தவர்களில் டிக்கட் இல்லாத இரண்டாம் வகுப்பு பிரயாணிகளுக்கும் பிச்சைக்காரர்களுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

(4) பதிமூன்று நபர்கள் உள்ள ஒரு குடும்பத்தில் முப்பத்தியொரு வேளைச் சாப்பாட்டிற்கு ரேஷன் அரிசி யிருந்த போது, சிலர் நாலு நாள் தங்க வந்தார்கள். [ஆனல் அவர்கள் பதினொரு வேளைச் சாப்பாடு தான் சாப்பிடுவார்கள். நாலாம் நாள் இரவுச் சாப்பாட்டு நேரத்தில் மெயிலுக்குப் போய் விடுவார்கள்.] அவர்கள் போன பின்பு வீட்டுக்காரர்களுக்கு அதிகப் படியாக மூன்று வேளை ரேஷன் அரிசி மிச்சப் பட்டால், வந்தவர்களில் எத்தனை பேர் வயிற்று வலிக்காரர்கள்? அவர்கள் பிரயாணம் எந்த ஊருக்கு? காசிக்கா? ராமேஸ்வரத்திற்கா? அல்லது கயாவிற்கா?

(5) யுத்தத்திற்கு முன்பு நல் லெண்ணெயில் படிக்குப்படி கடலை எண்ணெய் சேர்த்து ரூபாய்க்கு இரண்டு ரூபாய் ஆதாயம் எடுத்த நல்லெண்ணெய்காரருக்கு, அதே லாபத்தை எடுக்க தற்போதைய விலைவாசியில் கடலெண்ணெயில் எவ்வளவு நல்லெண்ணெய் கலக்க வேண்டும்?

(6) ராமன், கோவிந்தன் இருவரும், ஏ. ஆர். பி. குழியொன்றில் 4 மணங்கு எடையுள்ள மீன் பிடித்தால், (1) அதில் மழை காலத்தில் எத்தனை தவளைகளும், வெயிற் காலத்தில் எத்தனை மனிதர்களும் பதுங்கலாம்? (2) அதிலுள்ள கன அடித் தண்ணீரால் சமீபத்திலுள்ள விறகுக் கடைக்குக் கிடைக்கும் லாபம் எவ்வளவு? (3) கிருஷ்ணன் அந்தச் சமயம் எங்கேயிருந்தான்? (4) அல்லது அவன் நீச்சல் அடித்த ஏ. ஆர். பி. குழியின் விஸ்தீரணம் என்ன?

(7) ஒரு படி துவரம் பருப்பில் மூன்று வீசம் படி கல் இருந்தால் அக்கடைக்காரருக்கு விதிக்கப்படும் வருமான வரி ரூபாய்க்கு எத்தனை தம்பிடி? அத்தம்பிடிகளைச் சமாளிக்க அவர் சீகைக் காய்த் தூளில் கலக்கும் உப்புமண் விகிதம் என்ன? முந்திய வருஷம் அவருக்கு வந்த உப்புமண் மூட்டைகள் 81 என்றல் அவ்வருஷம் அவர் துவரம் பருப்பில் கலக்கும் கல்லுகளுக்காக எத்தனையாயிரம் ரூபாய் செலவிட்டிருப்பார்? அதில் மூத்த பையனுக்கு எழுதி வைத்த கல் மூட்டைகள் எவ்வளவு?

(8) கோபாலன் ஒரு எருமை மாட்டில் இரண்டரைப் படி பால் கறந்து அதை பத்து வீடுகளுக்குத் தலா கால் படி வீதம் பசும் பாலாயும், காலே யரைக்கால் படி வீதம் ஏழு வீடுகளுக்கு எருமைப் பாலாகவும் ஊற்றி வந்தால் 1. அவனுடைய ரேஷன் கார்டில் அரிசி யூனிட் எவ்வளவு? அது தினசரி கார்டா, வாரக் கார்டா? (2) தன் சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொண்ட பாலில், மோரும் வெண்ணெயும் தினம் இரண்டணவிற்கு வியாபாரம் செய்து, நெய் படி ரூ. ஆறு வீதம் 9 ரூபாயுக்கு நெய்யும் விற்றல்,

அம்மாட்டின் பெறுமானம் என்ன? 14 வயதுக்குட் பட்டவர்கள் அவன் மனைவி யுள்பட அவன் வீட்டில் எத்தனை பேர்!

இப்படி எத்தனையோ யுத்த காலப் புதிர்கள் போடலாம். இந்தத் தொண்டு செய்கிறது யார் என்னைத் தவிர?

ஸ்ரீமான் சுடலை முத்துப் பிள்ளை, ஒரு காலத்தில் கடலைப் பட்டாணி வியாபாரம் செய்து வந்தவர். நாளது தேதியில் பெரிய மளிகைக்கும் லகாரத்திற்கும் சொந்தக்காரர் ஆகி விட்டார். அப்படியிருந்தும் தமது கையெழுத்தை இன்னும் கடலை முத்துப் பிள்ளை யென்றுதான் எழுதி வருகிறார். 'க'வுக்கும் 'சு'வுக்கும் என்ன வித்தியாசம் என்று அவருக்குப் புலப்பட்டதாகத் தெரியவில்லை.

கருவேப்பிலைக் கன்று போல, கண்ணின் மணிபோல பாதுகாத்து வந்த தமது திருக்குமாரத்தி காராமணி யம்மையிடம் ரொம்பவும் அன்பு, பிரியம். ஒரே குழந்தையை நல்ல இடமாக, பசியாமல் சாப்பிடும் இடமாகத் தள்ள முயற்சித்து வந்தார். பையன் "உளுந்து வடை" அவர் கண்ணில் விழுந்தான். இயற்கைப் பெயர், சர்க்கரைப்பையனாக இருந்தும், பையனுக்கு உளுந்து வடையின் பேரிலுள்ள மோகத்தால், தோழர்கள் இட்ட இப்பெயரே நிலைத்து விட்டது.

மணமகன் உளுந்து வடைப் பெருமாளுக்கும் மணமகள் காராமணி யம்மாளுக்கும் தீர்மானம் ஆகுமுன், வேறு சில பூர்வாங்க சத்தியங்கள் வாங்கப் பட்டன.

1. காலை, இரவு டிபனுக்கு கட்டாயம் இட்டலி போடப் பட வேண்டும்.

2. பாயஸத்திற்கு நெய்யில் வெந்த வடை $11\frac{1}{2}$ அங்குலச் சுற்றளவுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

3. ஜிலேபி மாலை டிபனில் ஆளுக்கு மூன்று.

4. அப்பளம் விருந்தினர்கள் (மாப்பிள்ளை வீட்டார்) கேட்ட போதெல்லாம் கொடுக்க வேண்டும்.

மற்றவை நகை, துணிமணிகள் இதெல்லாம் இரண்டாம் பக்ஷமாகவே பேச்சுகளில் அடிபட்டன. முடிவில் கடலைமுத்துப் பிள்ளையவர்கள் தமது கிராமமான நெல்வேலியில் திருமணம் நடத்த, நாலு நாள் முன்னதாகவே பந்து மித்திரர்கள் வரவேண்டுமென முன் எச்சரிக்கை விடுத்தார்.

கலியாண நேரம் மத்யானம் 1 முதல் $2\frac{1}{2}$ மணி ஐ. எஸ். டி. படி நடக்க வேண்டும். காலைப் பந்தியில் இட்லிகள் வெகு குறைவாகத் தலை நீட்டின. உளுந்தே கண்டிராத சில நபர்கள், இட்லிக் கொப்பரையை அப்படியே இலையில் கொட்டிக் கொண்டார்கள். வந்தவர்களில் நாலில் ஒரு பங்கு சாப்பிட்ட போதே "இட்லிகள் இல்லை" என்ற வதந்தி உண்மையாயிற்று.

மாப்பிள்ளையின் தகப்பனார் 'பசிக்கிறது' என்ற போது ஒரு லாடு, லட்டு, ஹல்வா இதைக் கொண்டு வந்த கடலை முத்துப் பிள்ளை, கையைப் பிசைந்தார்; பல்லைக் காட்டினார்.

"இட்லி உண்டா?" என்றார் சம்பந்தி.

உடனே மாப்பிள்ளை வீட்டு ஜனங்கள் அத்தனை பேரும் போட்ட

'இட்லி இட்லி' என்ற கோஷம், மணப் பந்தலை மேலே ஒரு அடி தூக்கிற்று.

பெண்கள் வேறு "இட்லி இல்லையா?" என்று ஒப்பாரி வைத்தனர்.

ஒவ்வொருத்தர் முகமோ ஊறப்போட்ட சோளம் போல் பொதுமிப் போய் விட்டது. கண்ணிலோ கடுகும் மிளகும் வெடிக்கின்றன.

"துரோகி! துரோகி!!" என்ற குரல்கள் நாலா பக்கமிருந்தும் கடலைமுத்துப் பிள்ளையின் காதுக்குள் பாய்ந்தன.

மத்தியானம் பாயஸத்திற்கு 'நெய் வடை' போட துளிகூட உழுந்து இல்லையென அறிந்தார்.

நிலைமை, சட்டியில் பட்ட கடுகு போலாயிற்று.

இந்த நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு, மாப்பிள்ளையின் தகப்பனர் காதில் ஏதோ ரகசியம் பேசினர் 'தயிர் வடை'ப் பிள்ளை அவர்கள். கூட்டத்தில் ஹேஷ்யங்கள் பிறந்தன. அத்தோடு அவரிடம் ஒரே பெண் கோதுமைவல்லி இருக்கிற பேச்சும் சந்திக்கு வந்து விட்டது.

கடலை முத்துப் பிள்ளைக்குக் கோபம். தம் வியாபாரத்தோடு போட்டியிடும் தயிர் வடைப் பிள்ளை (இவர் இயற்கைப் பெயர் சோள முத்துப் பிள்ளை) தமக்கு வாய்க்க விருந்த மாப்பிள்ளைக்கும் போட்டியாக வந்ததை நினைத்து, மிளகாய் மூட்டையைக் கண்டது போல் துடிதுடித்தார். அந்த எரிச்சல் தீர கண் மூடி, கண் திறக்குமுன், ஒரு கார் தமது மணப் பந்தலை விட்டுப்போவதைக் கண்டார்,

அதிலே மணமகன் உளுந்துப் பெருமாளும், அவன் தந்தையும், தயிர் வடைப் பிள்ளைவாளும் இருந்தார்கள்.

கார் போய்க் கொண்டிருந்த போது "மாப்பிள்ளை உங்க பேரு உளுந்து வடையாமே" என்ருர் தயிர்வடை.

"ஆமாம் மாமா" என்ருன் பையன்.

"என்னடா பயலே அதுக்குள்ளே, மாமா என்கிறே! அவரைப்போல இவரும் உளுந்து இல்லாமல் ஏமாற்றினல் என்ன செய்வாய்?" என்று தகப்பனர் கடிந்து கொண்டார்.

"அறுபது மூட்டை நயம் நாட்டு உளுந்து ஸ்டாக் இருக்கிறது. வந்து பாருங்கள்" என்ருர் தயிர்வடைப் பிள்ளைவாள்.

கார், பல இடங்கள் திரும்பி ஒரு வீட்டு முன் நின்றது. அதைப் பார்த்தால் தொழுவம் போலவே இருந்தது. இறங்கி குப்பை கூளம், தாண்டி ஒரு ஒத்தையடிப் பாதை வழியாகச் சென்ற போது ஒரு வழவழப்பான தரையில் நடக்க ஆரம்பித்தார். உளுந்த மாவினல் செய்த கற்களோ என்று தகப்பனும் மகனும் நினைத்தனர்.

அங்கே அந்த அறைக்குள் கண்ட காட்சி திடுக்கிடச் செய்தது. 60 மூட்டையில் கல் நரவிய உளுந்துகள் குத்திட்ட சாக்குகளில் வரிசை வரிசையாக நின்றன.

அந்த இடத்திலே "ஐயா, தயிர் வடைப் பிள்ளைவாள்! இனி பையன் நம்ம பையன் இல்லை."

"ஏன், என்ன?" என்று திடுக்கிட்டார் தயிர்வடை.

"அப்பா மகனே உளுந்துவடை, இனிமேல் நீ இவர்கள் மருமகன்."

"மாமா" என்று அன்பு கனியக் கூப்பிட்டான் அவன்.

"மருமகப் பிள்ளை!" என்றார் அன்போடு.

அப்போது அங்கே கலகல வெனச் சிரிப் பொலி கேட்டது. அது யார்? கோதுமைவல்லியின் சிரிப் பொலிதான்.

வந்தவழியே திரும்பி நடந்து ஒத்தை யடிப்பாதை வழியாகத் தொழுவத்தைக் கடந்து வெளியே வந்தார்கள்.

வெகு தொலைவில் ஒரு கார் போய்க் கொண்டிருந்தது. அதைப் பிடிக்கக் காரை வேகமாக விட்டும் பலனில்லை.

காராமணிக்கும், உளுந்து வடைக்கும் தடங்கல் ஏற்பட்ட கலியாணம் மறு வாரத்தில் கோதுமைவல்லிக்கும் உளுந்து வடைக்கும் நடக்க விருந்தது.

கலியாணத்திற்கு முதல் நாள் அறுபது உளுந்து மூட்டைகளும் இரவோடு இரவாக வீட்டிற்கு வந்தன. கடைசி மூட்டை இறங்கிய போது கடலை முத்துப் பிள்ளை, இரு போலீஸ் சப்இன்ஸ்பெக்டருடன் வந்து இறங்கினர்.

உளுந்து மூட்டைகள் கைப் பற்றப்பட்டன: தயிர் வடைப் பிள்ளைவாள் கையும் பற்றப் பட்டது.

கடலை முத்துப் பிள்ளையின் எக்காளச் சிரிப்பு சட்டைப் பையிலிருந்து பொட்டுக் கடலை தெரிப்பது போல இருந்தது.

உளுந்துவடை, அப்பாவைப் போல தலைகுனிந்தான்.

"இப்போதும் ஒன்றும் ஊசிப் போகவில்லை. என் மகள் காராமணியை மணக்க இஷ்டமா?" என்று கேட்டார்.

உளுந்துவடை தகப்பனர் முகத்தைப் பார்த்தான்; அவர் கடலை முத்துவைப் பாத்தார்; அவரோ மோட்டாரைப் பார்த்தார். மூவரும் ஏறிப் புறப்பட்டனர், மணப் பந்தலுக்கு.

பறிமுதல் செய்யப்பட்ட மூட்டைகள் ரேஷன் அதிகாரிகள் கைவசம் வந்து சேர்ந்தன.

காராமணி வசம் பையன் வந்து சேர்ந்தான். பொன் விலங்கு பூட்டப்பட்டது.

மேளக்காரன், உருண்டோடும் பாசிப் பயிறு போல ரவைகளைப் பிருக்காவோடு உருட்டி ஆலாபனை செய்து கொண்டிருந்தான்.

தயிர்வடைப் பிள்ளை கண்ணீரை 10-ம் நம்பர் ஜெயில் அறைக்குள் உருட்டிக் கொண்டிருந்தார்.

★

கலைக் கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

இரா: என்ன மாமா அநியாயம்! நீ ஏன் உடனே போலீஸில் தெரிவித்திருக்கக் கூடாது? பிறகென்ன நடந்தது?

மூத்: ராமு, நான் போலீஸ் என்றிருந்தால் அங்கேயே மண்டை சிதறியிருக்கும்; அந்தப் பொல்லாத மாளிகையை விட்டு பிஜிலி உத்தரவில்லாமல் வெளியே வரக்கூடாது. இன்றும் அவள் உத்தரவினாலேதான் வந்தேன். கேள்; என்னை நான்குநாளைக்குப் பிறகு மருந்து போட்டுக் காயமாற்றினார்கள். பிறகு மற்றொரு மோசடிக்காக என்னைத் தயாரித்தார்கள். அதை நான் சிவநேசத்திடம் சொல்ல வேண்டும்.

இரா: சரி, நீ காயமாறிய பிறகு பிரியமாயிருந்தார்களா? என்ன செய்து கொண்டிருந்தாய்?

மூத்: பிஜிலியம்மாள் ஆணைப்படி நான் அத்தரின் அடிமையானேன்; அவள் இந்த ஊர் செல்வ வாலிபன் ஒருவனை வசப்படுத்திக் கொண்டாள். அவளிடம் நடனம் பழக வேண்டியது; சரியாக ஆடாவிட்டால் அவள் தரும் சவுக்கடிகளைப் பொறுக்க வேண்டும்; அவள் செய்யும் கேலி நையாண்டிகளை ஆசீர்வாதமாகத் தாங்க வேண்டும்; அவள் பேடாப் புறப்படும்போது நான் அவளுக்குச் செருப்பு மாட்ட வேண்டும்; காப்பிக் கூஜா தூக்கிச் செல்ல வேண்டும்! அவளுக்கு வேர்த்தால் விசிறி போடவேண்டும்.

அவள் சொல்லும் அலுவற் கடிதங்களை எழுத வேண்டும்; அவள் நடனத்திற்கு காட்சி ஜோடிக்க உதவ வேண்டும். அவள் அழகையும் கலையையும் விளம்பரப் படுத்தவேண்டும்; பிஜிலியைத் தெய்வமாகக் கருதி வணங்க வேண்டும். பெண்களைக் கண்டால் எழுந்து என் தலை வணங்கவேண்டும். அவர்கள் உத்தரவுக்குக் காத்திருந்தே மூச்சு விட வேண்டும்; பிஜிலி உத்தரவில்லாமல் இருந்த இடத்தை விட்டுச் செல்லக் கூடாது. அவள் இட்டதே சட்டம். இந்த மாதிரி நாயடிமையாக நான் நடக்க வேண்டியிருந்தது; மறுத்தால் உயிர் பிழைக்காது. உயிர் மேல் அபிமானம், அத்தரிடம் பாசம், எனது நாத்திகத் திமிர், அகம்பாவம், காமம், கலையின் மோகம் இவையே நான் நாயடிமையாயிருந்ததன் காரணம். என் ஆத்திரங்களையெல்லாம்

அடக்கி வைத்திருந்தேன். இன்றே உன்னிடம் சொல்ல வாய்ப்புக் கிடைத்தது.

இரா: மாமா இந்த அடிமை வாழ்க்கை உனக்கு இன்னும் வேண்டுமா? கலையுலகில் இக் கொலைகளை நீ சம்மதிக்கிருயா?

முத்: ஐயோ, வேண்டாம். விடுதலை வேண்டுகிறேன். ஆனல் வழி தெரியவில்லை. ராமு உனக்குப் புண்ணியமுண்டு. எப்படியாவது சிவநேசத்தை இங்கே ஒரு நாள் வரச்செய்.

முத்து இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு சட்டை போட்ட ஆள் உள்ளே வந்து நாடக அறிக்கை தருவது போல் முத்துவை விறைப்பாகப் பார்த்தான். உடனே முத்து முகம் வெளுத்தது. ராமுவுக்குக் கண்சாடை காட்டி விட்டு "உத்தரவு பெறுகிறேன். அவசியம் ஜகன் மோகனங்கி பிஜிலி ராணியின் நடனத்திற்கு வரவேண்டும்" என்று அந்த ஆளுக்குப் பின்னலேயே முத்து ஓடி மறைந்தான்.

யார் ஆள்? பிஜிலியின் ஒற்றனே! ஒரு தூதனை ஒருவேலைக் கனுப்பினல் ஓர் ஒற்றனையும் அனுப்பி ஆளைக் கவனிப்பது பிஜிலியின் வழக்கம். அவளிடம் ஒரு கெஸ்டாபோ படை உண்டு.

முத்து குப்புவிடம் இராமநாதன் நடனத்திற்கு வரப்போவதாகத் தெரிவித்தான்.

இராமநாதனே உடனே டாக்டர் சிங்கத்தைப் பார்த்து முத்துவின் பயங்கர அடிமை வாழ்வைச் சொன்னன். இருவரும் சிவநேசத்தை அழைத்து வந்து மீதி ரகசியங்களையும் அறிய விரும்பினர். இரகசியத்தை வாசகர் ஊகிக்கலாம்; என்றாலும் முத்து வாயிலாகவே வரட்டுமே.

42. காதல் வனம்

"டேடை! அந்தப் பையனிடம் என்ன பேசினய்? சொல் உண்மையை; உன்னைப் பற்றிப் பேசினயா? என்னைப் புகழ்ந்து பேசினயா? தற்புகழ்ச்சி செய்யும் நாயே, என் சோற்றுக்கு ரெண்டு செய்தாயா? என் ஆடல் பாடல் அழகு உலகிலில்லா அற்புதம் என்ருயா இல்லையா?"

இவ்வாறெல்லாம் பிஜிலி கேள்வி போட்டுக் கசக்கிப் பிழிந்து, பிறகு "சரி நமது மோட்டாரில் அழைத்து வா — ஞாயிறு கணக்காக 5 மணி. வனத்தில் ஜுஞ்சுலா வருவதற்கும் அந்தப் பையன் வந்து ஜவ்வாதின் பக்கம் உட்காருவதற்கும் சரியாயிருக்க வேண்டும். தெரியுமா? ஜவ்வாதுக்கு வலதுபுறம் ஒரு அங்குலமே இடம் விட்டு அமர்த்து...கவனம்" இவ்வாறு பிஜிலி இங்கே ஒத்திகை நடத்தினள். அங்கே செல்வோம்.

* * *

தமிழ்மணி அறிவாளியாதலால் உல்லாச மாளிகையில் நடக்கும் அல்லி தர்பாரை உடனே அறிந்து கொண்டான். அவன் ஊகம் சுடலையாடிச் சாமியின் திருவிளையாடல் மட்டும் சென்றது. உடனே டாக்டர் சிங்கத்திடம் டையின் கதையையும் தன் ஊகத்தையும் சொன்னன்.

சிங்கம் "என் சந்தேகம் தீர்ந்தது" என்று பராங்குசத்துடன் ஏதோ பேசினர். பிறகு நண்பர்கள் கூடி இரகசியமாக ஓர் முடிவு

செய்தனர். இரகசியமாதலால் உங்களுக்கும் இப்போது சொல்ல மாட்டேன். கப் சுப்!

* * *

ஞாயிறு மாலை 4—50; பளபளப்பான மோட்டார் நெல்லு மண்டிக்கு வந்தது; டை உள்ளே புகுந்தான்; தமிழ்மணி "முத்தையா ஒரு கேள்வி; என்னை அழைத்துச்செல்வது ஆட்டம் பார்க்கவா, அழகைப் பார்க்கவா? பாட்டைக் கேட்கவா? பல்லைப் பார்க்கவா? இரகசியத்தை உடனே சொல்லு" என்று வெளிப்படையாகக் கேட்டான்.

முத்தையா "ராமு என்னை நம்பு. எதாவது இடர் வந்தால் நான் இருக்கிறேன்; இந்த அழைப்பு எனக்கும் உலகிற்கும் நல்ல காலத்திற்கே வந்திருக்கிறது. ஒன்று மட்டும் சொல்லுவேன்; உன் அருகே ஒரு பெண் இருப்பாள். அவளிடம் மட்டும் மயங்கி விடாதே; அவள் மினுக்கைப் பார்த்தால் பதினறு வயது என்பாய்! முகச் சாயத்தை அழித்துப் பார்த்தால் முப்பது — அவள் ஆடல் பாடல் தளுக்கு மினுக்குகளில் கைகாரி; மெத்தப் படித்த பச்சை மோகினி; மனதை உறுதியாக வைத்துக் கொண்டுவா—" என்முன். தமிழ்மணி ஒரு நிமிஷம் முருகனைத் தியானித்தான்; உடனே மோட்டார் ஏறி, வழியில் டாக்டர் சிங்கம் வீட்டில் நிறுத்தச் சொன்னன். சிங்கமும் "பராங்குசமும் சாதாரண உடையில் அங்கே தயாராயிருந்தனர். தமிழ்மணி இருவரையும் மோட்டாரில் ஏறச் சொல்லும் போது "சாம்ப சதாசிவ சாம்ப சிவா" என்று சட்டிச் சாமியார் வந்தார்; மூவரும் அவரை வணங்கி உடன்வர அழைத்தனர். சட்டிச் சாமியார் நகைத்தார். "சிதம்பர நடனம் கண்டவனுக்கு தேவடியாள் கூத்து எதற்கப்பனே! தம்பி, சிவநேசத்தைப் போலத் திருடரிடம் மாட்டிக் கொள்ளாதே. மினுக்குப் பேயிடம் சிக்காமல், கவனமாயிரு...... அப்பா சிங்கம், இளம்பசு இது. புலியிடம் சிக்காது பார்த்துக் கொள் அப்பா — தம்பி, இந்தா திருநீறு. மோகினிப் பேயெல்லாம் உன்னைக் கண்டு நடுங்குக. ஓம் சிவம் என்று செல். பிறகு வருவோம்"

சட்டிச் சாமியார் இத்துடன் சாம்ப சதாசிவ — பாடிச் சென்முர்; மோட்டாரும் உல்லாச மாளிகைக்கு விரைந்தது.

உள்ளே ஹார்மோனியமும், ஸாக்ஸோபோனும், தில்ரூபாவும் சேர்ந்து அலறின; வாசல் திறந்தது; ஒரு சட்டை மினுக்குப் பேர்வழியிடம் முத்தையா ஏதோ சொன்னன்; உடனே வாருங்கள் என்று மூவரையும் அழைத்துச் சென்று முன்னே சோபாவில் அமர்த்தினன்.

தமிழ்மணி அமர்ந்த இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் ஒரு நாகரிக அலங்காரி வந்து அவன் பக்கத்தில் ஒய்யாரமாக உட்கார்ந்து கைக் குட்டையால் முகத்தை ஒற்றிக் கொள்வது போல் வலது பக்கம் கண்ணை வீசினள். 'ஜம்' என்று ஜவ்வாது மணம் வீசியது. பளபளக்கும் பச்சைப் பட்டும், வைரத் தோடும், வைரத்தளுக்கும் வைர மாலையும், வைரம்பதித்த காப்பும், மோதிரங்களும், வைர ஒட்டியாணமும், வைரம் பாய்ந்த நெஞ்சைக் கூடக்கலக்கும். முகத்தில் அரை அங்குலம் சாயம்

ஏறிப் பளபளக்கிறது. புருவம் வில்லைப் போல் ஒழுங்காக வளைக்கப்பட்டுள்ளது; கண்ணம்பு மிகக் கூரிய சுறுசுறுப்புடன் பாய்கிறது; முறுவலில் வெட்டு மின்னல் தாவியடிக்கிறது.

தமிழ்மணி முத்துவைப் பார்த்தான்; முத்து கண்ணால் பேசினான். "மிஸஸ் கான மோகினி ஜவ்வாது தேவி" என்றான். தமிழ்மணி டாக்டர் சிங்கத்தைப் பார்த்தான்; சிங்கம் பராங்குசத்தைப் பார்த்தான்; மூவரும் விநயமாகச் சிரித்துக் கொண்டனர். தமிழ்மணியின் மனத்தின் முன் சட்டிச் சாமியார் வந்து "சிக்காதே கிளியே" என்று எச்சரித்தார். தமிழ்மணி ஜபமாலையை எடுத்து மேலாடையில் மறைத்து உருட்டிக் கொண்டே பாலசுப்ரமணியனைத் தியானித்தான்.

ஆட்டம் தொடங்குகிறது; பதினெட்டு வகையான வாத்தியங்கள் முழங்குகின்றன. அலைகடல், மலையருவி, ஆடிக் காற்று, காலைப் பறவைகள்; அந்திக் குருவிகள், ஊளை நாய், காட்டு நரி, கழுதை, யானை — சில்வண்டு — எல்லாம் சேர்ந்து கூச்சல் போட்டால் எப்படியிருக்கும்? அப்படி பாண்டு முழங்கியது. திரை உயர்ந்தது.

காதல் வனக் காட்சி ஜிலு ஜிலுப்பாக முன்னின்றது; கொத்துக் கொத்தான மலர்ச் செடிகள்; பூங்கொத்துக்களுக்கு நடுவில், வர்ண மின் விளக்கணிகள், இனியகனிகள் — கொடி படர்ந்த குடில்கள் — எல்லாம் மனோகரமாயிருந்தன. கதை தொடங்குகிறது. வாசகருக்கு அதை முழுதும் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

காதல் வனத்தில் பூலோக ரம்பையர் பதின்மர் மலர் கொய்து பாடியாடி விளையாடுகிறார்கள். இளம் வாலிபர் சிலர் அவர்களைக் கண்டு ஆசைப் பட்டு, மயில், குயில், கிளி அன்னங்களைப் பார்த்துப் பாடுவது போல் குமரிகளை வருணித்துப் பாடுகிறார்கள், ஆடுகிறார்கள்; சிறந்த அழகிதான் ஜயமோகினி (பிஜிலிதான்). அவள் செய்யும் தளுக்கும் மினுக்கும், பாடும் பாட்டும், ஆடும் ஆட்டமும் வாலிபர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. (பிஜிலியின் விழிகள் தமிழ்மணியை நோக்கிப் பலமாகக் கணைபாய்ச்சுகின்றன). இளங்காளைகள் காதல் மயக்கத்தால் பிஜிலியை "வனதேவதையே உன் அடிமை நாங்கள்" என்று சரண்புகுந்து அவளை வர்ணித்துப் பாடுகிறார்கள்.

இது மற்றப் பெண்களுக்குப் பொறாமையாயிருக்கிறது; ஒவ்வொருவரும் தனது தோலழகையும் பிரமாதமாகக் காட்டி ஆடிப் பாடுகின்றனர். பிஜிலி தன்னை அணுகும் வாலிபரையெல்லாம் குறை சொல்லி ஒதுக்குகிறாள். ஒவ்வொருவரும் அவள் தன்னை மணந்தால் தலையில் வைத்துக் கூத்தாடுவேன் என்கிறான். குலாம் என்னும் அழகன் "உனக்கு என் உயிர், உடல், வீடு, என் கோடி ரூபாய் ஆஸ்தி, எல்லாம் தருவேன்; எனக்குக் கடவுள் கிடவுளில் நம்பிக்கை கிடையாது; கடவுள் ஒன்றிருந்தால் அது நீயே. என்னை ஏற்று என் அரசியாயிரு; நான் உன் அடிமையாயிருக்கிறேன்" என்கிறான். "மோஹினியும் அவனுக்கே புன்னகை தந்து அவன் கையைப் பிடித்து, நடனம் செய்கிறாள்.

'கணவன் எனக்கு வேண்டாம் அடிமைகளே வேண்டும்; நிரம்பப் பணந்தரவேண்டும். நான் நினைத்ததைச் செய்ய வேண்டும்; என் சொல் தவருமல் நடக்க வேண்டும்; என்னைத் தவிர உயர்ந்த பொருள் இருப்பதாக நினைக்கக் கூடாது; அவனே என் காதலைப் பெறுவான். என் காதலின்பமே மோட்சம், சுவர்க்கம் எல்லாம்' என்ற கருத்துள்ள கஜல் ஒன்று பாடி பிஜிலி உல்லாச நடனம் செய்து குலாமுடன் செல்கிருள். மீதியுள்ள அழகிகள் அவனைப் பழிக்கின்றனர்; இளங்காளைகள் தமக்கு விருப்பான அழகிகளை வர்ணிக்கின்றனர். அழகிகள் தமக்குப் பிடித்த ஆடவருடன் கைகோத்து நடம்புரிகின்றனர். பிறகு எல்லாரும் அருவியாடிக் களிக்கின்றனர். அப்போது அங்கே ஓர் மன்மத வாலிபன் வருகிருன்; எல்லா அழகிகளும் அவனைக் கண்டு மோகித்து, தாம் முன்னே காதலித்தாரைப் பழித்து ஒதுக்கி ஓடுகின்றனர். "அழகா உனக்கே என் அன்பு" என்று எல்லாரும் அவன் கையைப் பற்றுகின்றனர். அழகன் திடீரென்று சட்டையை உதறி பிஜிலி மோகினியாக நிற்கிருள். எல்லாரும் "மோகினியே நீ ஆண்களை மயக்கும் பெண்' பெண்களை மயக்கும் ஆண். எல்லாம் நீயே, நாங்கள் தோற்ருேம்" என்று பணிகின்றனர். அப்போது ஜகன் மோகனன் (டுணுக் கேசர்) தீச்சுடர் போலப் பொலிந்து தோன்றுகிருர்; அவருடன் பிஜிலி மோகினி "என் வாழ்வின் இணைபிரியா இன்பமே; எனக்கே அடிமை செய்யும் நண்பனே" என்று இனிமையாகப் பாடி பால்ய நடனம் செய்கிருள்; மற்ற ஜோடிகளும் நடனமாடுகிருர்கள்; பிறகு எல்லாரும் மலர் பறித்துக் காதல் மாலை சூடி இன்ப வனமே வாழ்வு, காதலே உயிர் என்று பாடி மதுவுண்டு, வட்டமிட்டுக் கூத்தாடிச் செல்கின்றனர்.

இதுவே இன்பவனக் காட்சி.

பிஜிலியிடம் நூறு நடிக நடிகைகள் ராஜபோகமான அடிமைகளாக வாழ்கிருர்கள். அவர்களை அவள் நான்கு படைகளாகப் பிரித்திருக்கிருள்; படைத்தலைவி எப்போதும் அவளே. தன் அழகை எவரும் மிஞ்சி விடாமல் சாய — வேலை காட்டி, மற்றவர்களை உலகம் மயங்கும்படியாக "மேக்கப்" செய்து வைத்திருந்தாள் பிஜிலி. இன்று ஆடியது முதற்படை — இதிலே தான் டுணுக் கேசர் தோன்றுவார் ஆதலால் இதற்கு டுணுக் சேனை என்று பெயர். இது தனிப் பெருங் காதல் சேனை. இரண்டாம் படை ரோஜா — டக்கர் — குப்பு — முல்லை — அத்தர், ஜவ்வாது, புனுகு, பரிமளா, சம்பங்கி முதலியோர் படை. இவர்கள் காதலும் வீரமும் கலந்த காட்சிகளை நடிப்பார்கள். மூன்றும் படையில் டை உள்படப் பலர் நவரசமுங் கலந்து நடிப்பார்கள்; நான்காம் படையில் ஊரை ஏமாற்றப் புராணக் காட்சிகள் நடக்கும். இரண்டு மூன்று, நான்காம் படைகளி லெல்லாம் குப்பு, டக்கர் முதலியோர், பிஜிலிக்கு இணங்கி நடிப்பார்கள். டுணுக் சேனைக்கே விளம்பரம் அதிகம்; வசூலும் அதிகம். உலகம் காமக் காட்சியிலே தானே மயங்குகிறது? நகரில் தக்க மைனர் காளைகளின் வரவை அறிந்ததும் குப்பையா அவர்களை மயக்கி அழைத்து வருவான். அன்று முதற்படை உல்லாசமாக நடிக்கும். அந்த நடிப்பையும்

நெளிப்பையும் ஒருதரம் பார்த்தால் ஆளை மீட்க முடியாது; பிஜிலிக்கு அவன் அடிமையாய் விடுவான். அவள் கண்ணியிற் சிக்கிய பிறகு மனப்பறவை தப்ப முடியாது; அதன் சிறகை அவள் ஒடித்து விடுவாள். காலுக்கும் தங்க விலங்கு மாட்டி விடுவாள். முத்தையா இந்தக் கதையெல்லாம் முன்பே சொல்லி விட்டான்; கூறியது கூருமல் மேலே செல்வோம்.

ஆட்டம் முடிந்ததும் குப்புவும் டையும் தமிழ்மணியை "எப்படி இருக்கிறது" என்று கேட்டார்கள். "சரியான வேடம்; சரியான நடிப்பு, இரண்டிற்கும் சரியான பாட்டு" என்ருன் தமிழ்மணி. "நீங்கள் நன்ருகப் பாடுவதாகக் கேள்வி; ஒருநாள் இங்கே—" என்றிழுத்தான் குப்பு. "ஆகா அதற்கென்ன? ஆனல் என் பாட்டெல்லாம் பக்திரசமாகவே யிருக்கும்; உல்லாசமாளிகைக்கு ஏற்குமோ?" என்ருன் மணி. "இங்கே பக்தியே அவதரித்து பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடி ஆனந்தக் கூத்தாடுகிறது. தங்களுக்கு எந்த மூர்த்தி வேண்டுமானலும் இங்கே தரிசிக்கலாம். இதுவே தேவலோகம்" என்று உடான்ஸ் அடித்தான் குப்பு.

தமிழ்மணி: எனது நண்பர் சிங்கம் நல்ல ரசிகர். அவர் நெடுநாளாக நாராயண தரிசனம் காண விரும்புகிருர்.

சிங்கம்: இல்லை; நான் திருப்பாற்கடலில் அதைப் பார்த்து விட்டேன்; இப்போது மாணிக்க வாசகருக்குக் குருந்த மரத்தடியில் வந்து அருளிய சிவகுருவையே தரிசிக்க நான் விரும்புகிறேன்.

மணி: நானும் அதையே விரும்புகிறேன்.

குப்பு: அதற்கென்ன, சிவகுரு தரிசனம் செய்து வைக்க நான் தயார்; எங்கள் நடனராணிக்கு எல்லாத் தெய்வங்களும் சொன்னபடி கேட்கும். அடுத்த ஞாயிறு மாணிக்க வாசகர் முத்தி பெற்ற நடனமே நடித்து விடுவோம்.

சிங்: சந்தோஷம். நாங்கள் பத்துப் பேர் வருவோம்; பார்த்து ஆனந்திப்போம்.

குப்பு: இதனிடையே தமிழ்மணியின் இசை விருந்தும் நடக்கட்டும். நாளை நான்கு மணிக்கு எங்கள் நடனராணி தங்களைப் பார்க்க விரும்புகிருள். பிறகு மற்றவை ஏற்பாடாகும்.

மணி: ஆகட்டுமே, நான்கு மணிக்கு வண்டியனுப்புங்கள்.

இச்சமயம் ஜவ்வாது காற்சிலம்பை ஒருதரம் சலசலத்து முகத்தைக் குலுக்கினள். ஜாடையறிந்த குப்பு "இவர் மிஸ் ஜவ்வாது தேவி, ஆடல் பாடல் அரம்பை. எங்கள் கூட்டத்தின் நவரத்தினங்களில் ஒருவர்; இவர் ஆட்டம் அடுத்த வாரம் நிகழும். தங்கள் பாட்டைக் கேட்க இவரும் விரும்புகிருர்" என்று குப்பு அறிமுகப் படுத்தினன். ஜவ்வாது முல்லை நகையுடன் கையை நீட்டினள் (குலுக்க). தமிழ்மணி "மகிழ்ச்சி. கலைக்கு வணக்கம்" என்று கை குவித்து விடை பெற்றுக் கொண்டான். ஜவ்வாது அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்ருள். டாக்டர் சிங்கமும் பராங்குசமும் எல்லாம் கவனித்துக் கொண்டனர்.

சிங்: பராங்குசம்! உமக்குப் பெரிய வேலையிருக்கிறது.

பரா: பெரிய மோசடியைக் கண்டுபிடிக்கப் போகிறேன். இத்துடன் இவர்கள் மோட்டாரில் ஏறினர்; முத்தையா ஓடி வந்து "ராமு நீ தப்பினுய்! இப்படியே உறுதியாயிரு. நாளை வருகிறேன்" என்று உள்ளே ஓடினுன். மோட்டார் விடுதலை முழக்கத்துடன் சென்றது. ஆம், விடுதலைதான். சாதாரண வாலிபராஞல் காதல் வனத்தில் மயங்கிப் போய் ஜவ்வாதுப் பாறையில் மோதிச் சித்தம் உடைந்து மோகினிப் பேய்களுக்கு அடிமையாயிருப்பார்கள்.

43. கலையிற் புகுந்த சனியன்

இரவெல்லாம் என்னென்னவோ கனவு! சரியான வயது; நல்ல வாலிபம்; அதற்குரிய உணர்ச்சிகளும் தமிழ்மணிக்கு இருந்ததுண்மை; அவனும் மானிடனே; அவன் புலனடங்கிய யோகியில்லை — சாதாரண மனிதன். யோகாதி யோகிகளைக் கூடப் பெண்மாயம் கண்ணாலும் உதட்டாலும் கண்ட துண்டம் செய்ய வல்லது; இச்சிறு வாலிபனை அது சும்மா விடுமா?

கனவில் எழிற் குமரிகள் இவனைச் சூழ்ந்து கொண்டு "என்னைக் காதலி, என்னைக் காதலி" என்று அணுகினர்; ஜவ்வாதின் ஆடல் பாடல் நடந்தது; அதிலே தான் தமிழ்மணி மயங்கி விட்டான். ஜவ்வாதும் தானும் ஒரு அருவிக் கரையில் அமர்வதாகவும், அவள் வனமோகினியாக மாறி மெல்லத் தன் தோளில் கை போடுவதாகவும் தன் அதரத்தில் புன்னகை அமுதைப் பொழிவதாகவும் கனவு கண்டான். மயக்க வேளையில் "தம்பீ எழுந்திரு" என்று சட்டிச்சாமி வந்ததாகவும் கண்டான்.

"சாமி வணக்கம்" என்றெழுந்தான்.

காலை ஆறுமணி — நான்கு மணிக்கே எழுந்திருக்கும் மணி இவ்வளவு நேரம் உறங்கியதற்காக வருந்தினுன். உடனே காலைக் கடன்களை முடித்து சிவக் கோலத்துடன் ஜபம் செய்து கொண்டிருந்தான். இரவில் கண்ட கனவு அவனைச் சஞ்சலப் படுத்தியது. அந்தச் சமயம் "பரமசிவம்" என்று சட்டிச் சாமியார் எழுந்தருளினர். தமிழ் மணி அவரை அடி பணிந்து உபசரித்து அமர்த்தினுன்.

சட்டி: தம்பி நீ அறிவாளி; தப்பிக் கொண்டாய்.

தமிழ்: எல்லாம் அடிகள் ஆசியால். தங்கள் அருள் மணம் ஜவ்வாதை வென்றது.

சட்டி: தம்பீ, ஜவ்வாது உன்னைப் போன்ற சாதுக்களுக்கு ஒவ்வாது; இன்னும் அது வலை வீசும்; பெரிய புலி உன்னைத் தந்திரமாகக் கௌவவரும்; சிவநேசத்தைப் போல் சிக்கி விழிக்காதே தம்பீ!

தமிழ்: சுவாமி, கலையுலகில் இந்த விலை வாழ்வை ஒழிக்க வேண்டும்; எனக்கொரு சக்தி அருளுக!

சட்டி: தம்பீ கலையுலகம் பெரிய சனியன் பிடித்தலைகிறது. மகான்கள் அருளிய திருவாக்குகள் பரிசுத்த உள்ளங்களிலிருந்து இசை நயத்துடன் புறப்பட்டால் உலகம் திருந்தும். குடி

யும் கூத்தியும், பணப் பேயும் பிடித்த போட்டிக்காரர் அருட் பாடல்களைக் கொண்டு வாணிகம் செய்கிறார்கள் தம்பி; அதனாலேதான் எத்தனை புத்தி சொல்லியும் உலகிற்கு ஏறவில்லை; பாட்டுக் கச்சேரி பகட்டுக் கச்சேரியாயிருக்கிறது. அந்தக் காலத்தில் மஹா வைத்திநாதையர் பாடிக் கேட்டிருக்கிறேன்—சிவநேசத்திற்கும் தெரியும்.

தமிழ்: நானும் குழந்தைப் பருவத்தில் வைத்திநாத சிவத்தைப் பார்த்திருக்கிறேன்.

சட்டி: அவர் சிவபக்தர்; கலைமணி; பாட்டால் சிவனைப் போற்றி செய்த மகான்; அவர் அப்பர் சரித்திரம் செய்யக் கேட்டு உள்ளம் உருகியதுண்டு. இராமலிங்க சுவாமிகள் இசைப்புலவரல்லர்; இருப்பினும் அவர் அருட்பா பாடிக் கேட்டதுண்டு; மெல்லிய குரலில் உள்ளன்பே உருகிச் சலசலத்தோடி வரும் அந்தப் பாட்டின் பொருள் உள்ளத்தில் ஊறி உயிரிற் கலந்தினிக்கும். தம்பி, குரல் மட்டும் போதாது. குயில் போலக் குரல் இருக்கலாம்; ஆனால் பாட்டின் ஒரு மொழிகூடக் கேட்பவர் உள்ளத்தில் பற்றுமற் போகலாம். இசைப்புலமைட்டும் போதாது; சங்கீதம் என்பது இராகம், தாளம், ரக்தி, பக்தி, ஞானம்—ஆகிய ஐந்தும் சேர்ந்த யோகம் என்றார் தியாகராசர். அவர் பாட்டையும் கேட்டதுண்டு. யோகமும் கலையும் சேர்ந்தாலே உருக்கம். பிஜிலியும் பாடுகிறாள் — ஆடுகிறாள்—நானும் கேட்டிருக்கிறேன். நான் ஒருநாள் சாம்பசிவா ஹரஓம் என்று அந்த உல்லாச மாளிகைக்குள் போனேன். "அட சாம்பல் சிவா, போ வெளியே" என்றாள். "தாயே சிவம் புகாத உன் கலை சுடுகாட்டுச் சாம்பலுக்குச் சமானமே" என்று வந்தேன்.

தமிழ்: அப்படியா சாமி? கலையின் பெயரால் இந்த அரக்கி செருக்கு மிஞ்சி உலகைக் கெடுக்கிறாள். நூற்றுக்கணக்கான இளம் பெண்களையும் ஆண்களையும் குடிவிபசாரப் படுகுழியில் ஆழ்த்தியிருக்கிறாள். பணக்காரர்களை எப்படியோ வசப்படுத்திக் கொள்ளையடிக்கிறாள். முத்தையாவிடம் இலட்ச ரூபாய் பறித்துக் கொண்டு அவனை அடிமை நாய்போல நடத்துகிறாள். இவளைத் தேவதையாகப் போற்றும் டுணுக்கேசர் குட்டுத் தெரியவில்லை. அவளுக்குப் பிடிக்காத பேர்களை வதைக்க ஏராளமான குண்டர். ஊனும் கள்ளும் ஊற்றி வெறி பிடித்த புலிகள் போலத் தயார் செய்து வைத்திருக்கிறாள். சாமி, கலையுலகைப் பிடித்த இந்த சனியனைத் திருத்த வேண்டும், அல்லது ஒழிக்க வேண்டும். வழி சொல்லுங்கள்.

சட்டி: தம்பி, அதற்குத்தானே வந்தேன். கேள். உனக்கு நல்ல தொண்டையிருக்கிறது. நெல்லு மண்டி விசாலமாயிருக்கிறது. இங்கே பாட்டுக் கச்சேரி வாரவாரம் நடத்து; வெள்ளிக் கிழமையில் பெரிய புராணம் நடத்து, பிறகு கம்பராமாயணம்; டாக்டர் சிங்கம் நன்றாகப் படிப்பார்; நீ விரிவுரை சொல்லு. கூட்டம் இங்கே திரும்பும். அந்தப் பொறாமைக்காரி உன்னைச் சரி பண்ண

குண்டர்களை அனுப்புவாள்; நான் காடவர்களை அனுப்புகிறேன். உன்மேல் அவர்களுக்கு உயிர். உனது தருமத்தால் அவர்களும் கதை புராணம் பிரியமாகக் கேட்பார்கள். பிறகு நடப்பதைப் பார். சிவன் சித்தம் உன் பக்கம் உள்ளது.

தமிழ் : சரியான வழி ; அப்படியே செய்கிறேன். நானே அவள் அழைத்தபடியே சென்று சங்கீதத்தில் அவளைத் திகைக்கச் செய்து, பிறகு அடிகள் கட்டளையை நிறைவேற்றுவேன்.

இச்சமயம் டாக்டர் சிங்கமும், பராங்குசமும் வந்தனர். தமிழ் மணி இவர்களை அன்புடன் வரவேற்று சாமியார் கட்டளையைச் சொன்னான்.

டாக்டர் : அதைச் சொல்லத் தான் வந்தோம். நமக்குள் நல்ல பக்க வாத்திய ஜமா உள்ளது. அடுத்த வாரம் முதல் நமது சங்கத்தில் நடக்கும் கச்சேரிகளைப் பொதுக் கச்சேரியாக்கி இங்கேயே வைப்போம். அதற்கிடையே பராங்குசம் ஒரு காரியம் செய்ய விரும்புகிறார்.

தமிழ் : என்ன ? அவர் பெரிய நினைப்புக்காரர்.

பராங் : ராமநாதா எனது நினைப்பெல்லாம் சிவநேசத்திடம் உள்ளது. அவரை உடனே வரச் சொல்லித் தந்தி கொடு. மாணிக்கவாசகருக்கு சிவகுரு முத்தி கொடுத்த நடனத்தை அவர் பார்க்க வேண்டும். நான் போடும் வேடத்தில் அவர் வர வேண்டும். பிறகு நடப்பதைப் பார் ; இந்த நாடகத்தால் ஒரு பெரிய உண்மை வெளிப் படப் போகிறது. அதை இப்போதே சொல்ல மாட்டேன். நாடகத்திற்கு வேண்டிய ஒத்திகை முன்பே செய்து வைத்திருக்கிறேன்.

தமிழ் : தெரிந்தது ; இதோ தந்தி கொடுக்கிறேன். இன்று நான்கு மணிக்கு என்னைத் தனியே காண உத்திரவு. முத்தையா மோட்டார் கொண்டு வருவான். டுணுக்கேசரையும் பார்த்து வந்து சொல்லுகிறேன்.

பராங் : சரி செல். ஏதாவது பிசகு நடந்தால், முத்தையாவை உடனே வெளியே வரச் செய். அங்கே போலீஸ்காரர் தயாராயிருப்பார்கள். முத்தையாதான் நமது ஆளானுனே.

சட்டி : இது நல்ல காலத்திற்கே வந்தது தம்பி. சிவன் பெயரால் திருநீறு பூசிச் செல். இடர் வராது. அவளைப் பாட்டில் திகைக்க வை. செருக் கடங் கட்டும்.

தமிழ்மணி நண்பருக்கு விருந்தளித்தான். சட்டிச் சாமி, சட்டியை நீட்டினார். அதில் மணி நிரம்ப அன்னமிட்டான். சாமி தெருவில் ஏழைகளுக்கு அள்ளிக் கொடுத்துத் தாமும் இரண்டு பிடி யுண்டு "பரமசிவம்!" என்று சிறிது தியானத்தில் இருந்து கிளம்பி விட்டார்.

தமிழ்மணி இசை நூற்களைப் பார்த்துச் சில குறிப்புகளை எடுத்துக்கொண்டு தயாரானான். மணி நாலுக்கு மோட்டார் வந்தது. முத்தையாவுடன் பிஜிலியைப் பார்க்கச் சென்றான்.

(தொடரும்)

பறக்கும் மனிதன்

"வில்லன்"

மனிதன் முதலில் கால் நடையாக நடந்தான். பின்னர் கட்டை வண்டி, குதிரை வண்டி, மோட்டார் வண்டி ஆகியவை ஏற்பட்டன. ஓடை, ஆறு, ஏரிகளைக் கடக்க முதலில் நீந்திச் சென்றான். பின்னர் ஓடம், பரிசல், படகு முதலியன ஏற்பட்டன. கடலைக் கடக்க கட்டு மரம், படகு, பாய் மரக் கப்பல், நீராவிக் கப்பல் ஆகியவை ஏற்பட்டன. மனிதன் ஆகாயத்திலும் பறக்க முயன்று கடைசியாக இன்று ஆகாய விமானத்தின் வழியாகப் பறக்கிறான். இந்த யுத்த காலத்தில் அழிவு வேலைகளில் பெரிதும் பயன் பட்டு வரும் இவ்வாகாய விமானம் யுத்தத்திற்குப் பின் ரயிலைப் போல மிகவும் சகஜமாகி அனைவரும் செல்லக் கூடியதொரு போக்கு வரத்து சாதனமாகிவிடும். இன்னும் இருபது ஆண்டுகளுள் விமான சகாப்தம் வந்துவிடும். இவ்வளவு சிறப்படைந்து வரும் ஆகாய விமானத்தின் ஆதி வரலாற்றையும் அதன் வளர்ச்சியையும் பற்றிச் சுருக்கமாகச் சொல்லலாம்.

பறவையைப் போலத் தானும் வானத்தில் பறக்க வேண்டுமென்னும் விருப்பம் மனிதனுக்கு ஆதி காலந் தொட்டு இருந்து வந்திருக்கின்றது. இவ்விருப்பமானது பல நாடுகள், பல்லினங்களைச் சார்ந்த மக்களிடத்தும் காணப்பட்டதென்பதும், இவ்விருப்பத்தை நிறைவேற்ற அவர்கள் பல முயற்சிகள் செய்து வந்திருக்கின்றனர் என்பதும் அவரவர்களிடையே வழங்கும் பழங்கதைகள், புராணங்கள், காவியங்களிலிருந்து புலனாகின்றது. உட்கார்ந்த மாத்திரத்தில் விரும்பிய இடங்களுக்குக் கொண்டு சென்ற மாந்திரிக ஜமக்காளங்களைப் பற்றிய கதைகளை நீங்கள் படித்திருப்பீர்கள். தியோதாலஸ் என்பவன் மெழுகு, இறகு இவைகளாலான இறக்கைகளைக் கட்டிக் கொண்டு உயரப் பறந்தானென்றும் அவனைப் பின் பற்றிப் பறக்க முயன்ற அவன் மகன், முயற்சி பலிக்காமல் வீழ்ந்திறந்தானென்றும் கிரேக்கக் கதையொன்று கூறுகிறது. கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்பத்தில், மந்திரவாதி சைமன் தீ மயமான விமானமொன்றின் மீதேறி உரோமாபுரியைச் சுற்றிப் பறந்தானென்றும் கான்ஸ்டாண்டி நோபிலைச் சார்ந்த சாரசன் ஒருவன் நீண்ட போர்வை தரித்து அதன் மூலம் கோபுரத்திலிருந்து எழும்ப முயன்று கீழே விழுந்திறந்தானென்றும் கதைகள் வழங்குகின்றன. நமது நாட்டுப் புராண இதிகாசங்களில் செயற்கை இறக்கைகளைக் கட்டிக் கொண்டு பறந்ததாக யாதொரு உதாரணமும் கூறப்படவில்லையாயினும் ஆகாய விமானங்களில் மன்னர்களும் வீரர்களும் பறந்து சென்றதாகச் சில செய்திகள் காண்கின்றன. சீவக சிந்தாமணியில் மன்னன் சச்சந்தன் ஓர் எந்திர ஊர்தியை இயற்றித்தர தன்

தச்சனைப் பணித்தானென்றும், அத்தச்சன் ஏழே நாளில் மயிற்பொறி யொன்றைச் செய்து தந்தானென்றும், அப்பொறியை விரலாலே வலத்தே திரித்த போது அது பொங்கிப் போழ்ந்து விசையுடன் பறந்ததையும், இடத்தே திரித்த போது மெல்ல வீழ்ந்து காலைக் குவித்திருந்ததையும் மன்னன் விசையைக்குப் பிரத்யட்சமாகச் செய்து காட்டினனென்றும், அவ்வண்ணமாகவே விசையை ஆகாய வழி சென்ற போது, பகைவன் முரசொலி கேட்டு மதி கலங்கி மயிற் பொறியை முறுக்கி நடத்த மாட்டாமல் மூர்ச்சித்தாள் என்றும், அப்பொறி அப்பாற் செல்லாமல் ஒரு மயானத்தில் மெல்ல வீழ்ந்ததென்றும் கூறப்பட்டுள்ளன.

இக்கதைகள் யாவும் உண்மையாகவே நடந்தனவெனக் கூறுவதற்குப் போதிய சரித்திரச் சான்றுகள் இல்லை. இவை பெரும்பாலும் மக்கள் பறப்பதில் கொண்டிருந்த ஆர்வத்தைப் புலப்படுத்தும் கற்பனைக் கதைகளாகவே இருக்கலாம். ஆனல், நமது நாட்டைப் பொறுத்த மட்டில் ‘சம்ரங்கன சூத்திரதர’ என்னும் பழைய சிற்ப நூலொன்றில் பெரிய பறவையின் வடிவில் இலேசான மரத்தால் செய்யப்பட்ட சிறு விமானங்கள் இருந்தனவென்றும், அவற்றின் உடலில் வைக்கப்பட்டுள்ள பாதரசம் அனலால் சூடேற்றப் பட்டு ஆவியின் சக்தியால் மரப்பறவையின் இறக்கைகள் இயங்கி விமானங்கள் பறந்தன வென்றும் கூறப்பட்டிருப்பதால் இயந்திர சாத்திர நுட்பங்களை யறிந்த ஒரு சிலரேனும் இயந்திர ஊர்தியின் மீதேறிப் பறந்தனரென்று ஊகிக்க இடமிருக்கிறது. இப்போது ஐயமற நிகழ்ந்த சமீபகால நிகழ்ச்சிகளுக்கு வருவோம்.

லெயனர்தோ தெவேன்சி என்னும் இத்தாலிய சர்வகலா வல்லுனர் 1500 ல் மனித சக்தியால் உந்தப்பட்டு தரையிலிருந்து மேலெழும்பின சிறு விமான மாடல்களைச் செய்தாரெனக் கூறப்படுகிறது. அவர் பறக்கும் சாத்திரத்தை நன்கறிந்தவரென்பது அவர் வைத்துவிட்டுச் சென்ற குறிப்புகளிலிருந்து நன்கு தெரிகிறது. ஆனல் மேதாவிகளுக்கே உரிய இஞ்ஞானம் பெருத பலர் பறவைகளைப் போல்த் தோளில் செயற்கை இறக்கைகளைக் கட்டிக் கொண்டு கோபுர உச்சியிலிருந்து குதித்துச் சிறகடித்துப் பறக்க முயன்றனர். துரதிருஷ்ட வசமாக அவர்களது முயற்சி பெரும்பாலும் பலிக்காமல் கீழே விழுந்து காயமடைந்தனர். 1678-ல் பெஸ்னியே யென்னும் பிரெஞ்சு நாட்டுக் கருமான் ஒருவன் அகன்ற துடுப்புக்களைத் தோளில் கட்டிக் கொண்டு, தன் மாடி அறைஜன்னலிலிருந்து குதித்துக் கைகளாலும் கால்களாலும் தண்டு வலிப்பது போல வலித்து வெற்றிகரமாகப் பறந்து இறங்கினன்.

பூத சாத்திர அறிவு, மேன்மேலும் வளர்ச்சியடையவே காற்றைவிட இலேசான கருவியொன்றை மேலெழும்பவிட்டு அதில் ஏறிப் பறக்கலாமெனச் சில அறிஞர்கள் கருதினர். ஆனல் இத்துறையில் அவர்கள் உருப்படியாக யாதொன்றும் செய்யவில்லை. 18 ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் காகிதஞ் செய்து வந்த மோங்கோல்பியே சகோதரர்கள் இருவர் காகிதப் பைகளில் உஷ்ணப் புகையை

நிரப்பி அவை உயரக் கூரை வரையில் எழும்பியதைக் கண்டு களித்தனர். பெரிய பையொன்று செய்து அதே மாதிரியாக உயரப் பறக்கவிடலா மென்னும் யோசனை தோன்றியது. அவர் பல பரிட்சைகள் செய்து பார்த்து விட்டுக் கடைசியாக 1783 ல் ஜூன் மாதம் 5 ம் தேதியன்று 105 அடி சுற்றளவு கொண்ட சணல்நார் பையொன்றில் உஷ்ணக் காற்றை நிரப்பி மேலே கிளம்ப விட்டார். அது மிகவும் உயரப் பறந்து சென்று, சுமார் பத்து நிமிடம் ஆகாயத்தில் மிதந்து விட்டு மெல்ல இறங்கி ஒன்றரை மைலுக் கப்பால் தரையில் விழுந்தது. 'பலூன்' என்னும் இப் பறக்கும் கருவி இவ்வண்ணமாகவே முதன் முதலாக உலகிற் களிக்கப்பட்டது. இப் பிரெஞ்சு சகோதரர்கள் இரண்டாந்தடவை பலூன் ஒன்றைச் செய்து வெர்சேல்ஸில் பிரெஞ்சு மன்னன் முன்னிலையில் பறக்கவிட்டனர். ஆனால் இந்தத் தடவை பலூனின் அடியிலே சிறு வண்டியொன்றைத் தொங்கிவிட்டு, அதில் ஒரு ஆடு, ஒரு கோழி, ஒரு வாத்து ஆகிய மூன்று உயிர்களையும் வைத்தனுப்பினர். பலூன் இவற்றுடன் பறந்து சேமமாக இறங்கி வந்தது.

மூன்றும் தடவை பலூனில் தொங்கவிடப்பட்ட வண்டியில் இரண்டு பேர்கள் ஏறி உட்கார்ந்து ஐந்து மைல் பறந்துவிட்டுச் சேமமாக இறங்கினர். சின்னாட்களுக்குப் பின் சார்லஸ் என்பவன் உஷ்ணக் காற்றுக்குப் பதிலாகக் காற்றைவிட மிக இலேசான ஐட்ரோஜன் வாயுவை உபயோகித்தான். அவன் விட்ட பலூன் சுமார் 3000 அடி உயரப் பறந்து 15 மைல் பிரயாணஞ் செய்தது. ஆகவே, ஆகாயத்திற் பறக்க மனிதன் பரிபக்குவப் படுத்திக் கொண்ட முதல் கருவி இப் பலூனே யாதும்.

இங்ஙனமாகப் பறந்த பலூனில் ஒரு முக்கியமான குறை இருந்தது. அது காற்று வாக்கில் தன்னிச்சைப்படி சென்றதே யொழிய அதைக் கட்டுப்படுத்தி இஷ்டதிச்சைப் படி திருப்புவது இயலாதிருந்தது. துடுப்பையும் பாயையும் பயன்படுத்திப் பார்த்தனர் பலிக்கவில்லை. இந்த நிலையில், 1852 ல் பாரிஸில் என்றி கிப்போர்டு என்பவன் 80000 கியூபிக் அடி கொள்ளும் வட்ட உருட்டு வடிவான பலூனைச் செய்து, அதில் மூன்று குதிரை விசையுடையதும், முன்னுக்குத் தள்ளும் இயந்திரக் கருவிகளுடன் கூடியதுமான நீராவி இஞ்சின் ஒன்றைத் தொங்கவிட்டான். அது மணிக்கு ஐந்து மைல் பறந்தது. இயந்திர விசையினால் எழுப்பப்பட்ட முதல் விமானம் இது வேயாதும். இதை டிரிஜிபில் பலூன், அதாவது இஷ்டமானபடி திருப்பிச் செலுத்தக் கூடிய பலூன் என்பர்.

என்றி கிப்போர்டின் பலூன் நீராவி இஞ்சினால் செலுத்தப்பட்டது. ஆதலால், பலூனில் தண்ணீரையும் நிலக்கரியையும் கொண்டுசெல்ல வேண்டியது அவசியமாயிருந்தது. இக்குறையைப் போக்க 1898-ல் ஆல்பேர்டோ சந்தோஸ் தியூமோன் என்பவன் 'காசொலைன்' என்னும் ஒருவித பெட்ரோல் எண்ணெயால் ஓடும் இஞ்சின் அமைந்த டிரிஜிபில் பலூனைச் செய்து வெற்றிகரமாகப் பறந்தான். பின்னர் அதில் பல அபிவிருத்திகள் செய்து பாரிஸில் பறந்து காட்டினான்.

அதே காலத்தில் ஜர்மனியில் கவுண்ட் பேர்டினெண்டு ஜப்ளின்

என்பவர் 1900-ல் இக்கால ஆகாய விமான ரீதியில் ஜப்ளின் எனப் பெயர் பெற்றதொரு விமானத்தைச் செய்து புகழ் பெற்றார். பின்னர் இப்புது மாதிரியில் 14 வட்ட உருட்டு வடிவான டிரிஜிபில் ப்லூன்களைச் செய்தார். 1913-ல் அவர் கட்டிய பிரயாணக் கப்பல் பேடன், பேடனிலிருந்து வியன்னுவுக்கு எட்டு மணி நேரத்தில் சென்றது. ஆனல் ரயிலில் செல்ல 16 மணி நேரம் பிடித்தது. சென்ற மகாயுத்தத்தின் போது ஜர்மானியர் இத்தகைய கப்பல்களைப் பயன் படுத்தினர். ஆனல் இவை வெடி குண்டுகள் எறியும் வேலைக்கும் வேவு பார்க்கும் வேலைக்கும் அவ்வளவாகப் பயன் படவில்லை. இலேசாக அமைந்ததும், விரைவாகப் பறக்கக் கூடியதுமான விமானங்கள் தேவையாயிருந்தன.

இதுகாறும் காற்றைவிட இலேசான பலூன் விமானத்தைப் பரிபக்குவப் படுத்தச் செய்யப்பட்டு வந்த முயற்சிகளைச் சுருக்கமாகக் கவனித்தோம். இனி, காற்றைவிடப் பளுவாயிருப்பினும், தன் இயந்திர சக்தியைக் கொண்டே மேலே பறக்கும் இக்கால விமானங்கள் வளர்ச்சியடைந்த வரலாற்றைக் கவனிப்போம்.

மேலே சொன்னபடி பலூனில் பறக்க முயற்சி செய்து கொண்டிருந்த காலத்திலேயே, விஞ்ஞானிகள் பலர் இயந்திர விசையினலேயே மேலே எழும்பிப் பறக்க வல்ல விமானங்களைக் கண்டு பிடிப்பதில் முனைந்திருந்தனர். 1842-ல் இங்கிலாந்தில் என்சன், ஸ்டிரிங்கு பேலோ என்னுமிருவர் நீராவி சக்தியினல் ஓடும் விமான மாடல்களில் பல பரிட்சைகள் செய்து பார்த்தனர். 1848-ல் ஸ்டிரிங்கு பெலோ சிறு நீராவி இஞ்சினல் ஓடிய விமானமொன்றைச் செய்து அதை 40 கஜதூரம் பறக்கவிட்டான். ஆயினும் இஞ்சினிலிருந்து உண்டான குதிரை விசைக்கு இஞ்சின் பளுவாகவே இருந்தது. அடுத்த 50 வருடங்கள் இயந்திர நுட்பமறிந்த பலர், இஞ்சின் இல்லாமலேயே குன்றின் உயரத்திலிருந்து விட்டால் காற்றில் மிதந்து செல்லும்படியான "கிளைடர்" விமானங்கள் செய்து பறந்து பார்த்தனர். அந்த நிலையில், அமெரிக்காவில் ஓஹியோவில் சைக்கிள் ரிப்பேர் செய்து வந்த வில்பர் ரைட், ஆர்வீல் ரைட், என்னும் சகோதரர்கள் இருவர், 1900-ல் தாங்களாகச் செய்த "கிளைடர்" களில் சுக்கான் அமைத்தும், ஆகாயத்தில் தேவையான திசையில் திருப்புவதற்கான ஏற்பாடுகள் செய்தும் இரண்டு ஆண்டுகள் பரிட்சை செய்து பார்த்தனர். இறுதியில், இரண்டு பிளேன்கள் (இறக்கைகள்) கொண்டதாயும் இலேசாக அமைந்ததாயுமுள்ள பெரிய கிளைடரில் காசொலின் எண்ணெயால் ஓடிய இஞ்சினை இணைத்தனர். பின்னர் 1903 டிசம்பர் 17ம்தேதியன்று வட காரொலினவில் கிட்டிஹாக் என்னும் குன்றின் சாய்வில் இருவருமாக அதில் ஏறியுட்கார்ந்து 852 அடி உயரம் பறந்தனர். ஆகாய விமானத்தின் வரலாற்றில் அந்த நாள் நினைவிற்குரியதோரு நாளாகும். அந்நாள் மனிதனின் நெடுநாளைய விருப்பம் நிறைவேறியது; இக்கால ஏரோபிளேன் பிறந்தது.

அடுத்த ஐந்து வருடங்கள் இரு சகோதரர்களும் தாங்கள் செய்த விமானத்தில் பல சீர்திருத்தங்கள் செய்தனர். 1908-ல் வில்பர் ரைட் அச்சீர்திருத்தங்கள் அமைந்த



விமானத்தை பிரான்சுக்குக் கொண்டுசென்று அங்கே பகிரங்கமாகப் பறந்து காட்டினான். வில்பரின் புகழ் ஐரோப்பா வெங்கும் பரவியது. அதுமுதல் உலகம் பறக்க வெறி கொண்டது. அமெரிக்க அரசாங்கத்தார் வில்பரின் விமானம் பட்டாளத்தில் உபயோகிக்கப் படுவதை அங்கீகரித்தனர். 1909-ல் பிளேரியோ என்னும் பிரெஞ்சுக்காரன் தன் விமானத்தில் 33 மைல் பறந்தான். பின்னர் கலேயிலிருந்து புறப்பட்டு இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டி 37 நிமிடங்களில் டோவரை அடைந்தான். அதே ஆண்டில்

என்றி பர்மான் என்பவன் மூன்று மணி நேரத்தில் 118 மைல் பறந்தான். சென்ற மகாயுத்தத்தின் போது ஆகாயவிமானங்கள் பல வழிகளில் பயன்படுத்தப்பட்டன. யுத்தகால அனுபவங்களின் பயனாக, வேகம், உயரப் பறக்கும் சக்தி ஆகிய விஷயங்களில் பல அபிவிருத்திகள் ஏற்பட்டன.

இப்போது இன்னும் நெருங்கிய காலத்திற்கு வருவோம். 1919-ம் ஆண்டு, விமான வாலாற்றில் நினைவிற்குரியதோர் ஆண்டாகும். அவ்வாண்டு ஆஸ்திரேலியா அரசாங்கத்தார், இடையீடின்றி 720 மணி நேரத்திற்குள் இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு வந்து சேரும் முதல் விமானிக்குப் பத்தாயிரம் பவுன் பரிசளிப்பதாக அறிவித்தனர். டெய்லி மெய்ல் பத்திரிகை, அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் பறந்து செல்லும் முதல் விமானிக்கு அதே தொகை பரிசளிப்பதாக அறிவித்தது. ராஸ், கேய்த் ஸ்மீத் என்னும் ஸ்காட்டிஷ் சகோதரர்கள் அதே ஆண்டு நவம்பர் மாதம் 12ந் தேதி புறப்பட்டு, ரோமாபுரி, கெய்ரோ, டமாஸ்கஸ் டில்லி, பாங்கோக், சிங்கப்பூர் இவை மார்க்கமாக மணிக்கு நூறு மைல் தூரம் பறந்து, டிசம்பர் 10-ந் தேதியன்று ஆஸ்திரேலியாவிலுள்ள டார்வின் துறைமுகத்தை யடைந்து பரிசு பெற்றனர். சர் ஜான் அல்காக், சர் வில்பிரிட் விட்டன் புரௌன் என்னும் ஆங்கிலேயர் இருவர் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து டெய்லி மெய்ல் பரிசு பெற்றனர்.

1927-ல் பிரபல அமெரிக்க விமானியாகிய லிண்டு பேர்க் நியூயார்க்கிலிருந்து புறப்பட்டு அட்லாண்டிக் கடல் வழியாக 3600 மைல் பறந்து 33½ மணியில் பாரிஸ் வந்து சேர்ந்தார். இதனால் அவர் உலகப் பிரசித்தியடைந்தார். பின்னர் அமெரிக்காவுக் குள்ளேயே 23,350 மைல் பறந்தார். 1931-ல் அவரும், விமானம் ஓட்டுவதில் தேர்ச்சிபெற்ற அவருடைய மனைவியாரும் அமெரிக்காவிலிருந்து பறந்து கனடா, அலாஸ்கா, வழியாகச் சென்று, பேரிங்கு ஜலசந்தியைக் கடந்து 28 நாட்களில் ஜப்பானின் தலைநகராகிய டோகியோவை அடைந்தனர். 1933-ல் அவர் 21 நாடுகள், நான்கு கண்டங்களின் மீது 5 மாதகாலம் யாதொரு விபத்துமின்றிப் பறந்தார். அதே ஆண்டில், வில்லி போஸ்ட் என்னும் அமெரிக்கர் உலக முழுவதையும் 8 நாட்களில் சுற்றி 15,596 மைல் பறந்தார். இப்படியாக இன்று உலகின் கண்டங்கள் யாவும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து சாதனங்களுள் ஆகாய விமானமே மிக விரைவாகச் செல்வதாலும், உலக நாடுகளை ஒன்று சேர்ப்பதற்குரிய சிறந்த சாதனம் அதுவேயாதலாலும், எல்லா நாடுகளும் அதன் வளர்ச்சியில் விசேஷ சிரத்தை காட்ட ஆரம்பித்தன. விமானங் கட்டுவோர் பலரக விமானங்களைச் செய்வதிலும், அவற்றில் பிரயாணிகளுக்குப் பல சௌகரியங்கள் அமைப்பதிலும் ஊக்கங் காட்டினர். இரண்டு இஞ்சின்களுடன் ஓடிய "மானோ பிளேன்" (ஒரே இறகு கொண்ட விமானம்) வழக்கொழிந்து ஒரே இஞ்சினால் ஓடும் "பைபிளேன்" (இரண்டு இறகுகள் கொண்ட விமானம்) பெருவாரியாக வழங்கலாயிற்று. ஆகாய விமான மூலமாகப் பிரயாணம் செய்ய மக்களுக்குத் தைரிய

மூட்டுவதற்காக, விமானங்கள் இன்னின்ன விதமாக அமைக்கப் படவேண்டுமென்றும் ஓட்டுவதில் இன்னின்ன கட்டுப்பாடுகளுக்கு இணங்க வேண்டுமென்றும் அரசாங்கத்தார் விதிகள் செய்தனர். நாளடைவில் ஆகாய விமானங்கள் உள் நாட்டிலுள்ள பிரதான நகரங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் தபால்கள் ஏற்றிச் செல்ல ஆரம்பித்தன. அரசாங்க உத்தியோகஸ்தர்களும் செல்வர்களும் ஆகாய விமானத்தில் பிரயாணஞ் செய்யலாயினர்.

விமானம் இங்ஙனமாக முன்னேறிக் கொண்டிருக்கையில் 1939-ல் யுத்தம் ஆரம்பித்தது. எல்லா நாட்டினருமே பலமான ஆகாயப்படை இருக்கவேண்டியதின் அவசியத்தை உணர்ந்து, தங்கள் சக்தியை யெல்லாம் திரட்டி விமானங்களின் உற்பத்தியைப் பெருக்கவும், விமானமோட்டிகளுக்குப் பயிற்சியளிக்கவும் தலைப்பட்டனர். விமானங்களில் இன்று பல அபிவிருத்திகள் செய்யப்பட்டுள்ளன. யுத்தத்திற்குத் தேவையான பலப்பல ரகமான விமானங்கள் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகிக் கொண்டே இருக்கின்றன. இந்தியாவிலும் விமானத் தொழிற்சாலை யொன்று அமைக்கப்பட்டது. ஆனல் அதில் புதிதாக உற்பத்தி செய்வதை நிறுத்திவிட்டு இன்று பழுது பார்ப்பதிலும் விமானத்திற்குரிய சில உறுப்புக்களைச் செய்வதிலுமே கவனஞ் செலுத்தப்பட்டு வருகின்றது.

யுத்தம் முடிந்ததும் ஒவ்வொரு நாட்டிலும் மக்களின் சிவில் வாழ்க்கைக்குரிய விமானங்களின் உற்பத்தி பன்மடங்கு பெருகும். உலகெங்கும் விரைந்து பறந்து செல்லக் கூடிய பிரமாண்டமான விமானங்கள் பல புதிய ஆகாயப் பாதைகள் அமைத்துச் செல்லும். இன்னும் இருபது ஆண்டுகளில் விமான சகாப்தம் ஏற்படும். அப்போது தரையில் ஓடும் ரயிலைப் போல் விமானம் சாமான்ய ஜனங்களுக்கும் சகஜமாகிவிடும். சர். சண்முகம் செட்டியாரவர்கள் கராச்சியில் மணிக்கு 225 மைல் வேகஞ் சென்ற விமானத்திலேறி மூன்றே நாட்களில் அமெரிக்காவை அடைந்ததை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். விமான சகாப்தம் ஏற்படும் போது மணிக்கு 400 மைல் செல்லும் விமானம் அப்பிரயாணத்தை இரண்டே நாட்களில் முடித்து விடும்.

உலகம் மேன்மேலும் சுருங்கி வருகின்றது. இப்பரத கண்டமும் மிகச் சுருங்கிவிடும். உலகம் உண்மையாக ஒன்றுபடுவதற்கு விமானம் பெரிதும் துணை புரியும். ஆனல், சமாதானத்திற்கும் நாகரிகத்திற்கும் உரிய இந்த மகத்தான சாதனம், யுத்த வெறியர்களிடம் சிக்கிக்கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

"வசந்தம்" நேயர்களே! பறக்கும் மனிதனின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறிவிட்டேன். இனி நீங்கள் ஒவ்வொருவரும் பறக்கக் கற்றுக் கொள்வதே பாக்கி!

★

லட்சிய பூர்த்தி

[வெ. ராமராவ்]

அடர்ந்து இருண்டிருந்த அக் கானகத்தின் நடுவில் வானளாவி நின்றிருந்த அந்தப் பிரமாண்டமான முதிய அரச மரத்தை ஒரு மெல்லிய பூங்கொடி ஆர்வத்துடன் தழுவிக்கொண்டிருந்தது. அம் மரத்தின் காலடியில் இருந்த ஒரு அழகிய கண்ணன் சிலை — அது ஒரு கைதேர்ந்த சிற்பியின் சிருஷ்டியாகத்தான் இருக்க வேண்டும்— அப்பூங்கொடி காற்றுடன் குலவியபடி தன் தளிர்க் கரங்களை ஆட்டியசைத்து இன்ப நடனம் புரிந்து கொண்டிருந்ததை இமை கொட்டாமல் தனக்குள் நகைத்தபடி பார்த்துக்கொண்டிருந்தது.

சிலை தன்னை நோக்கிப் புன்முறுவல் பூத்ததனால்தானோ என்னவோ, அப்பூங்கொடியாள் நாணமுற்று அந்த அரச மரத்தை இன்னுங் கொஞ்சம் இறுகத் தழுவிக்கொண்டாள்.

கண்ணன் சிலையின் அசாதாரணமான ரூபலாவண்யம், அப்பூங்கொடியின் வெள்ளை உள்ளத்தில் ஒரு புதுக் கிளர்ச்சியை உண்டாக்கிற்று. ஆரம்பத்தில் லேசாகப் பிறந்த அந்த உணர்ச்சி வெகு சீக்கிரத்திலேயே அடக்க வொண்ணாத ஆர்வத் தியாக மாறி விட்டது. இயற்கையின் நியதி இறுதியில் வெற்றி கண்டது. ஆம், அம் மலர்க் கொடியாள் கண்ணனிடத்து காதல் கொண்டுவிட்டாள்.

'காட்டில் வளர்ந்திருக்கும் நாகரிகமே அறியாத, வலிமையற்ற தான் எங்கே? அழகும், வன்மையும், தெய்வீகமும் பொருந்திய அந்தக் கண்ணனின் எழிற்சிலை எங்கே! "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டகதை தான்" என்று எண்ணி அவள் ஏங்கலானாள்.

ஆனால் அதே ஏக்கம் எவ்விதத்திலாகிலும் கண்ணனை மகிழ்வித்து அவனுடைய அன்பிற்குப் பாத்திரமாக வேண்டும் என்னும் பேரவாவாக உருப்பெற்று நின்றது. எந்த விதத்திலாவது தன் சக்திக் கேற்ப தன் கையால் அந்த மூர்த்திக்கு ஏதாவது சேவை புரியும் பாக்யம் தனக்குக் கிட்டவேண்டும்; தன் வாழ்க்கையில் ஒரே ஒரு க்ஷண நேரத்தையாவது அந்தப் புனித காரியத்தில் செலவிட்டு தான் பேறு பெற வேண்டும் என்று துணிந்தாள் அப்பூங்கொடியாள்.

அவள் யார்? அவளிடத்தில் என்ன இருந்தது? அவள் எந்த வகையில் அம்மூர்த்திக்குச் சேவை புரிய முடியும்? இவை யொன்றும் அவளுக்குப் புரியவில்லை. சே! இந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டால் தான் என்ன? அவளுடைய விழிக் கோணத்தின் மின்னல் பார்வை ஒரு முறை பளிச் சென்று அந்த விக்கிரகத்தின் மேல் பாய்ந்து திரும்பிற்று. அடடா! போதும்! அந்த ஒரு கண் வீச்சிலேயே அவள் எவ்வளவோ காலம் நெருங்கிப் பழகியது போன்ற அனுபவத்தை அடைந்து விட்டாள். அந்தச் சிலையின் சாந்தம் தவழ்ந்த தாமரை முகமும், அகன்ற கண்களும், பரந்த நெற்றியும் அவள் உள்ளத்தில் பதிந்தன. அந்த அழகு முழுவதையும் தன்

மனதில் ப்தியவைத்துக் கொள்ள முடியவில்லை. தன்னைத் தானே ஒரு முறை பார்த்துக்கொண்டாள். தளிர்ப் பச்சையும் கரும் பச்சையுமாக மாறி மாறி விளங்கும் பெரிய இலைகள்; பழுப்பு மஞ்சள் காம்பினுலாகிய சிறுகரங்கள்; இடையிடையே வெடித்து நின்ற லேசான நீல நிற மொக்குகள் சாதாரணமான ரூபவதிதான்! அந்த சௌந்தர்ய தேவதைக்குத் தன் பூஜை—சேவை—பிடிக்குமா? வெறும் மலர்களினுல் செய்யும் பூஜையை அந்த மூர்த்தி ஏற்றுக் கொள்வாரா? அவளுடைய கண்களில் கண்ணீர் மின்னிற்று, புல் நுனி நீர் கதிரவன் கிரணம்பட்டு மின்னுவது போல்.

இறுதியில் அப்பூங்கொடியாள் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு ஒரு முடிவுக்கு வந்தாள். தன் சக்தி முழுவதையும் திரட்டி தன்னிடம் பிறக்கும் மலர்களின் எழிலை அதிகப்படுத்தவேண்டும் என்று உறுதி கொண்டாள். அதன் பலன் ஒவ்வொரு மலரும் உருவத்திலும், அமைப்பிலும், நிறத்திலும் மணத்திலும், சிறந்து வளர ஆரம்பித்தது!

மலர்களின் இங்கித எழிலும், அப்பூங்கொடியாளின் காதல் தவமும் அந்த மூர்த்திக்குத் தெரியாமல்ப் போகவில்லை. ஒன்றிரண்டு முறைகள் அம் மூர்த்தியின் பார்வை அப்பூங்கொடியாளின் மோனத் தவ நிலையை ஏறிட்டுப் பார்க்கத் தவறவில்லை.

"தவப் பலன்" கைக்குக் கிட்டும் நன்னுள் இறுதியில் வந்தே விட்டது, அம்மென்கொடியாள் எதிர் பார்த்திருந்ததை விட சீக்கிரமாகவே! அன்று அப்பூங்கொடியாளின் அழகு எல்லை கடந்து நின்றது. அவள் மேனியில் சுடர் வீசிய மலர்கள் மௌன மிசைத்து நின்றன! அவளுடைய அந்த அமுத அழகின் ஒளிக் கிரணங்களும், மலர்களின் நறுமணமும் அச்சிலையின் நிஷ்டையைக் கலைத்தன, அம்மூர்த்தி தன் விசாலமான மலர்க் கண்களைத் திறந்து மேல் நோக்கினுர். அதே சமயத்தில் அப்பூங்கொடியாளின் கண்கள் அக்கண்களைச் சந்தித்தன.

ஏனே தன்னை அறியாமலேயே அவள் ஒரு முறை பக்கென்று நகைத்தாள். அதே கணத்தில் அவள் உடலிலிருந்த ஆயிரம் அழகு மலர்கள் அந்த அழகிய கண்ணன் சிலையை அர்ச்சித்தன. புல்லரித்து நின்ற அப் பூங்கொடியாள், ஒரு புன் முறுவல் புரிந்த வண்ணம் நாணத்துடன் தன் காதலனைப் பார்த்தாள். அவள் மெல்லிய கரம் தன்உணர்ச்சி இல்லாமல் காதலனின் தோள்களை வருடி நின்றது. அப் பூங்கொடியாளின் தவம் பலித்தது. அவள் லட்சியம் பூர்த்தியடைந்தது!

"உங்களைப் போல முதலாளிங்க, மோட்டாக்காரு இல்லாம இருக்க முடியாதுங்க" என்று என் வேலைக்காரப் பையன் அடிக்கடி தொந்தரவு செய்ததை உத்தேசித்து நான் ஒரு பழைய பிளஷர் காரை மிகக் குறைந்த விலைக்கு வாங்கி விட்டேன். அதன் விலை அணுப் பைசாக் கலங்களிலும் கூட இருப்பதனால், அதைச் சொல்லாமலே விட்டு விடுகிறேன்.

நான் காரை விலைக்கு வாங்கிய போது, அதிலுள்ள பெட்ரோலைத் தவிர, மற்ற எல்லாம் புதிதாகவே தோன்றியது. ஆனால் நாலைந்து நாள் அனுபவத்தில், அதன் மேல் பூசப்பட்டிருந்த வர்ணம் மட்டும் புதியது என்று தெரிய வந்தது.

காரை ஓட்டுவதற்கு ஒரு டிரைவர் அவசிய மென்று எனக்குப் பட்டது. ஒரு டிரைவரைத் தேடிப் பிடித்தேன். நான் அவனை நிரந்தரமாக வைத்துக் கொண்டு சம்பளம் கொடுக்க விரும்பவில்லை. அவன் மூலமாகக் கார் ஓட்டும் வித்தையைக் கற்றுக் கொண்டு அவனை நீக்கி விடுவதென்ற தீர்மானத்துடன், அந்த டிரைவரை நியமித்தேன். ஆனால் இரண்டு வாரத்திற்குள், அவனே தன் வேலையை ராஜிநாமாச் செய்து விட்டுப் போய் விட்டான்.

சொந்தக் கார் வைத்திருப்பவர்கள், டிரைவரை அமர்த்தியிருப்பதன் ரகசியம் எனக்கு அப்போதுதான் விளங்கிற்று. கார்கள், தங்கள் சுபாவப்படி, நடுவழியில் திடீர் திடீரென்று நின்று விடுமல்லவா! அந்தச் சந்தர்ப்பங்களில் டிரைவர் என்ற ஒரு அப்பிராணி இருந்தால் தானே, சொந்தக்காரர் காரை விட்டுக் கீழே இறங்கி, "அப்பா டிரைவர், நான் வாடகை பஸ்ஸில் போய் விடுகிறேன்; நீ காரை வீட்டுக்குக் கொண்டு வா." என்று சொல்லிவிட்டுப் போய் விடலாம்? டிரைவர் இல்லா விட்டால், கார் நின்று போனவுடன் சொந்தக்காரரல்லவா காரைத் தள்ளிக் கொண்டு வரவேண்டியிருக்கும்?

என் கார் விஷயத்தில் இம்மாதிரியான சந்தர்ப்பம் ஏற்படவேயில்லை. ஏனென்றால், நான் அதை வாங்கின ஏழாவது நாளே, அது ஷெட்டை விட்டுக் கிளம்ப மறுத்து விட்டது. அதற்குச் செலவாகும் பெட்ரோல் கூட மிச்சமாயிற்று,

என்று நான் சந்தோஷமடைந்தேன். இது மட்டுமல்ல. கார் வாங்கினதிலிருந்து நான் இன்னெரு தத்துவத்தையும் கூட எளிதில் தெரிந்து கொண்டேன். காரை நான் என்று வாங்கினேனே, அன்றே சனி பகவானின் கிருபை என் மீது விழுந்து விட்டது என்பதை, நான் ஜோஸியரைக் கேளாமலே, அறிய முடிந்தது. இந்தக் கிரகம் என்னை விட்டு விலகும் காலத்தையும் ஒருவாறு யூகிக்க முடிந்தது. என்றைக்கு இந்தக் கார் என்னை விட்டுப் போகிறதோ, அன்றைக்கே சனீச்வரனும் என்னை விட்டு விடுவாரென்று தானே அர்த்தம்? காரைத் தள்ளி விடுவதற்காகத் தீவிர முயற்சிகள் பண்ணினேன்.

சக்கரங்களே இல்லாத மோட்டார்க்கார்களைக் கூட விலை பேசி முடித்து விடக் கூடிய கைதேர்ந்த மோட்டார்த் தரகர்களைப் பிடித்தேன். என்ன பயன்? என் கார் ஒன்றினலேயே தங்களுடைய சாமர்த்தியத்திற்கு ஒரு அபகீர்த்தி ஏற்பட்டு விட்டதென்று அவர்கள் என்னிடம் ஒப்புக் கொண்டார்கள்.

இது இவ்வாறிருக்க, நான் ஒரு வாரம் என் காரில் சவாரி போன காரணத்தினல் ஊரில் எல்லோரும் என்னைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார்கள். என் பெயர் ஊரிலுள்ள அத்தனை பேருக்கும் தெரிந்து விட்டது. பெயர் தெரியாவிட்டாலும், "ஓட்டை மோட்டார் ஆசாமி" என்று என்னை அடையாளம் கண்டு பிடித்து விடுவார்கள்.

இந்தக் கேவலத்தை எவ்வளவு நாள் தான் சகித்துக் கொண்டிருப்பது? சுய முயற்சியில் இறங்கினேன். காரை விற்பதற்காகப் பல பிரயத்தனங்கள் செய்தேன். முதலில் மேட்டுத் தெருவில் மேல் கோடி வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டேன். எங்கள் ஊருக்குப் புதிதாக ஒரு உத்தியோகஸ்தர் வந்து சேர்ந்தார். அவரைப் போய்ப் பார்த்து அவரோடு நானே வலுவாக சிநேகம் செய்து கொண்டேன். அவருடைய மகள் சுந்தரியும் அடிக்கடி எங்கள் பேச்சில் கலந்து கொள்வாள். தமிழ்ச் சினிமாக் கலையைப் பற்றி அவரிடம் மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருப்பேன். அந்த சினேகிதருடைய மைத்துனர் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரர் ஒரு தமிழ்ப் படத்தில் தற்செயலாக விழுந்து விட்டதாக ஒரு சமயம் அவர் என்னிடம் சொல்லியிருந்தார். சுருங்கச் சொன்னல், உளுந்து முதல் உலக மகா யுத்தம் வரை ஒவ்வொன்றையும் பற்றி அவரிடம் நான் அடித்து விளாசியிருக்கிறேன். பழைய கார்களின் மகிமைகளைப் பற்றி சந்தர்ப்பங்கள் வரும் போதெல்லாம் சொல்லி வைத்தேன். அந்தச் சமயங்களி லெல்லாம் சுந்தரி தங்களுக்கும் ஒரு கார் வாங்க வேண்டுமென்று தன் அப்பாவிடம் சொல்லி வந்தாள். என் முயற்சி பலித்துக்கொண்டு வந்தது.

ஒரு நாள் என்னுடைய காரைப் பற்றி நானே பிரஸ்தாபித்து விட்டேன். அவரும் சுந்தரியும் காரை வந்து பார்த்தார்கள். காரைப் பார்த்தவுடனேயே அவர் சிரித்தார். சுந்தரி, "அப்பா நீங்கள் சொன்னீர்களே, அந்தக் கார் மாதிரியே........." என்று ஏதோ ஆரம்பித்தாள். அதற்குள்ளாக அவர், "அப்புறம் சொல்றேன் அம்மா" என்று அவளுடைய பேச்சைத் தடுத்து

விட்டார். நான் காருக்கு ஒரே விலை முப்பத்தி ரெண்டரை ரூபாய் என்று தீர்த்து விட்டேன். வாசகர்களே, அவசரப் படாதீர்கள்! ரூபாய் கைக்கு வரவில்லை. அந்த ஆசாமி காரை ஓட்டிப் பார்க்க வேண்டுமென்றார். நான் அதற்கு ஒரு நாள் குறிப்பிட்டேன்.

குறிப்பிட்ட நாள் வந்தது. அந்தக் காரை என்னிடம் விற்றவன், அதிலுள்ள யந்திரங்களை எப்படியெப்படியெல்லாம் கட்டி வைத்திருந்தானோ அப்படியே அவைகளைக் கட்டி வைத்தேன். இரண்டு மூன்று ஆட்களை விட்டுக் காரை ஷெட்டிலிருந்து தெருவுக்ுத் தள்ளிக் கொண்டு வரச் சொன்னேன். ஒரு டிரைவரைக் கொண்டு விடாமுயற்சி செய்து காரை ஸ்டார்ட் பண்ணச் சொன்னேன். இயந்திரம் 'கர் கர்' என ஆரம்பித்தவுடன் அந்த சிநேகிதருக்கு அவசரமாக ஆள் அனுப்பினேன். அவர் வந்து சேர்வதற்குள் இயந்திரம் ஓய்ந்து நின்று விட்டது. அந்த எக்கச் சக்கமான நிலைமையைச் சமாளிப்பதற்காக அவரை என் வீட்டுத் தோட்டத்தைப் பார்ப்பதற்கென்று தோட்டத்துப் பக்கமாகக் கூட்டிக் கொண்டு போய் விட்டேன். ஒரு மணி நேரம் வரை அங்கேயே குறும்பூர்க் கத்திரிக்காயின் குணாதிசயங்களைப் பற்றி அவரோடு பேசிக் கொண்டிருந்தேன். வெளியே 'டபார், டபார்' என்று சப்தம் கேட்டது. அன்றைக்கு மாத்திரம் வேலைக்கு அமர்த்தப்பட்ட டிரைவர் என் காரை 'ஸ்டார்ட்' செய்து விட்டான் என்று தெரிந்து கொண்டேன். "காரில் ஏறிப் பார்ப்போமா?" என்று, அவரை வெளியே காரின் பக்கம் அழைத்துக்கொண்டு வந்தேன். கார் போடும் சப்தத்தை மறைப்பதற்காக, அவரோடு கூப்பாடு போட்டுப் பேசினேன். அவர் பேசுவதற்கு இடம் கொடுக்காதபடி நானே பேசிப் பேசி அவரைக் காரில் உட்காரும்படி செய்தேன். உடனே சக்கரங்களுக்கடியில் வைக்கப்பட்டிருந்த செங்கல்களைச் சுப்பன் ஒருவருக்கும் தெரியாமல் எடுத்து வீசி விட்டான். கார் ஒட்டக நடையில் பள்ளத் தெருவை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தது.

சிறிது தூரத்திலிருந்த அவர் வீடு வந்ததும் "டிரைவர், காரை நிறுத்து" என்று இறைந்து கத்தினேன். அவனும் பிரேக் போட்டு நிறுத்துவது போலப் பாசாங்கு செய்தான். அதற்குள்ளாகப் பின்னாலேயே வந்து கொண்டிருந்த என் வேலைக்காரப் பையன் முதலியோர் காரை இழுத்துப் பிடித்து நிறுத்திப் பின் சக்கரங்களுக்கடியில் அடையும் கொடுத்து விட்டார்கள். இதெல்லாம் நான் முன் கூட்டியே சொல்லி வைத்திருந்த ஏற்பாடுகள். அந்த ஆசாமி காரின் ஓட்டத்தைப் பற்றிச் சந்தேகப் பட்டவராகவே தோன்றவில்லை. கார் நின்றதும் இருவரும் இறங்கி அவருடைய வீட்டுக்குள் சென்றோம். நான் அவரோடு பேசிக் கொண்டிருக்கும் போதே, டிரைவரும் வேலைக்காரனும் காரை அவர் வீட்டுத் தோட்டத்தினுள் தள்ளிக் கொண்டு போய் நிறுத்தி விட்டுப் போய் விட்டார்கள். நாங்களிருவரும் வெகு நேரம் வரை, காரைப் பற்றியாவது, பணத்தைப் பற்றியாவது பேசவே இல்லை. அவராகக் கொடுப்பாரென்று அவரை எவ்வளவோ முகஸ்துதி செய்து பார்த்தேன். ரூபாய் கிளம்பும் வழியைக் காணோம். "இந்தக்

காரை வாங்கின அதிர்ஷ்டம் உங்க வீட்டில் சீக்கிரம் கலியாணம் காட்சியெல்லாம் நடக்கும், சார்'' என்றேன். ''நானும் அதைப் பற்றித்தான் யோசனை பண்ணிக்கொண் டிருக்கிறேன்.'' என்று சொல்லிக் கொண்டிருந் தவர், சிரிப்பை அடக்க முடியாமல் என் கையைப் பிடித்து இழுத்து முப்பத்திரண்டரை ரூபாயையும் என் கையில் கொடுத்து, ''காரின் கிரயம் கொடுத்து விட்டேன். ஆனால் கார் உங்களிடமே தான் இருக்க வேண்டும்.'' என்றார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏமாந்தவர் போல நடித்த அவருடைய உண்மையான சுபாவம் அப்பொழுது தான் எனக்குத் தெரியவந்தது. அவரிடம் நான் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்க மனமில்லா விட்டாலும் சம்பிரதாயத்தை உத்தேசித்து, ''அப்படி வேண்டாம் சார்! பணம் இந்தாருங்கள்'' என்று நீட்டினேன். அவரோ விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டு ''இல்லை சார், காருக்குப் பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள். அப்படியானல் தான் நீங்கள் சொல்லியது போல், என் வீட்டில் கூடிய சீக்கிரம் ஒரு கலியாணம் நடக்கும்'' என்றார். அதே சமயம் கதவோரத்தில் நின்று கொண்டிருந்த சுந்தரி 'களுக்' கென்று சிரித்து விட்டு ஓடினள்.

''நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே'' என்றேன். ''உங்கள் ஜாதகம் இருந்தால் கொண்டு வாருங்கள் சார். ஜாதகம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. சுந்தரியை உங்களுக்கே கல்யாணம் செய்து கொடுக்க நிச்சயித்து விட்டேன். நீங்கள் அன்று உங்கள் மோட்டாரைக் காட்டிய தினத்திலிருந்தே உங்களைப் பற்றிய முழு விவரங்களையும் தெரிந்து கொண்டேன் சார். நீங்கள் திறமைசாலி தான்'' என்றார்.

அவர் இப்படிச் சொன்னது எனக்கு இன்னும் திகைப்பாக இருந்தது. ''திகைக்காதேயுங்கள், மிஸ்டர், நான் சுந்தரியின் தாயாரை — அதாவது என் வீட்டம்மாளை எப்படிக் கலியாணம் செய்து கொண்டேன் தெரியுமா?'' என்று ஒரு கேள்வியைப் போட்டார் அவர்.

''எனக்குத் தெரியாதே!'' என்றேன்.

''இதே காரை, ஒரு காலத்தில் என் மாமனர் வைத்திருந்தார் சார்!''

''அப்படியா?''

''ஆச்சரியப் படாதீர்கள்! அதற்கு அத்தாட்சி அந்தக் காரிலேயே இருக்கிறது.''

''ரெம்ப அதிசயமாக இருக்கிறதே! அதிருக்கட்டும். அதற்கும் உங்கள் கலியாணத்திற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?''

''அதைத்தான் சார் சொல்ல வருகிறேன். என் மாமனர் ஒரு வேடிக்கைப் பேர்வழி. அவர் மகளைக் கலியாணம் செய்து கொள்ள நான்கு பேர் போட்டியிட்டோம். தன்னிடமிருந்த இந்தக் காரை யார் விற்றுத் தருகிறார்களோ அவருக்கே தன் பெண்ணைக் கொடுப்பதாகச் சொல்லி விட்டார் அவர்.''

''இது எத்தனை வருஷத்திற்கு முன் நடந்தது?''

''இருபது வருஷத்திற்கு முன் நடந்தது. அப்போது இந்தக் கார் இப்போதிருப்பதைவிடக் கொஞ்சம் நன்றாக இருந்தது. ஆட்கள்

தள்ளாமலே சில மைல்கள் போகும். பின்னுலிருந்து இழுக்காமலே நின்று விடும். அந்த நிலைமையில் நான் சென்னை மாகாணம் முழுதும் அலைந்து இதை ஒரு சோணகிரியிடம் நூற்றைம்பது ரூபாயுக்குத் தள்ளி விட்டேன் சார்.''

"நூற்றைம்பதுக்கா?''

"ஆமாம் சார்! ஆமாம்! மாமனுருக்கு ஒரே ஆனந்தம். இப்படிப்பட்ட சாமர்த்தியசாலி தனக்கு மருமகனுகக் கிடைத்ததைப் பற்றி எல்லோரிடத்திலும் இப்போதும் பெருமை யடித்துக் கொள்வார். காரை விற்பதற்கு நீங்கள் என்னைவிட சாமர்த்தியமான தந்திரங்களை யெல்லாம் கையாண்டிருக்கிறீர்கள். மேலும் இதை என்னிடமே விற்று விட்டீர்கள் சார். அதனுல் சுந்தரியை உங்களுக்கே மணம் செய்துகொடுக்க நிச்சயித்திருக்கிறேன்.'' என்று முடித்தார்.

"கார் யாரிட மிருப்பது?'' என்று ஒரு கேள்வியை மெதுவாக எடுத்து விட்டேன்.

"இங்கு ஆறு மாதம் அங்கு ஆறு மாதமாக இருக்கட்டும்.'' என்ருர்.

"கார் உங்களுடையதாகத் தானே கருதப்பட வேண்டும்?''

"ஆமாம். நான் அதை உங்களிடமிருந்து வாங்கிய பிறகு, அது எனக்குத் தானே சொந்தம்? ஆனுல், அதை உங்களுக்குக் கொடுக்கப் போகும் ஸ்ரீதனச் சொத்துக்களில் ஒன்ருகச் சேர்த்து விட்டேன்.''

"சரி அப்படியே இருக்கட்டும். உங்கள் கல்யாணத்திற்கும் என் கல்யாணத்திற்கும் தூதாக இருந்த அந்தக் கார் என்னிடமே இருக்கட்டும், மாமா'' என்று நாசூக்காகச் சொல்லி வைத்தேன்.

"ரொம்ப சந்தோஷம். கலியாண ஏற்பாடுகள் சீக்கிரம் நடக்க வேண்டும்.'' என்ருர் அவர். நான் எதிர்பாராத இந்த அதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன்.

சுபயோக சுப முகூர்த்தத்தில் நான் சுந்தரியை மணந்து கொண்டேன். ஸ்ரீதனப் பொருள்களோடு காரும் பழையபடி என் வீட்டு ஷெட்டிற்கே வந்து விட்டது. சில காலத்திற்குப் பின் இரும்புக்கு அதிகக் கிராக்கி ஏற்பட்டது. துருப்பிடித்துப் போகும் அந்தக் காரை எப்படியாவது விற்று விடத் தீர்மானித்தேன். ஒரு இரும்பு வியாபாரியைக் கூட்டிக் கொண்டு வந்து, காரிலுள்ள இரும்பை விலைக்கு எடுத்துக் கொள்ளும்படி சொன்னேன். அந்த வியாபாரி காரின் ஒவ்வொரு பாகத்தையும் தட்டிப் பார்த்து விட்டு, "இது உருக்கு, இது ரப்பர், இது மரம், இதனுள் முழுதும் மண், மேலே பூசியிருப்பது வார்னீஷ்'' என்று கழித்து விட்டு, "இதில் மொத்தம் நாலு வீசை கழிவு இரும்பு இருக்கும். வீசை ரெண்டரை அணு வீதம் பத்தணுத் தருகிறேன்.'' என்ருன்.

போய்த் தொலைகிறது. பத்தணுவுக்காவது காரைத் தள்ளி விட்டு விடலாம் என்று திருப்தியடைந்தேன். ஆனுல் அவன், கார் முழுவதையும் கொண்டு போக மறுத்து விட்டான். இரும்பை மட்டும் எடுத்துக் கொண்டு, மற்றப் பாகங்களை அங்கேயே போட்டு விட்டுப் போய் விடுவதாகப் பயமுறுத்தினுன். நான் அவைகளை

எங்கே கொண்டு போய்ப் போடுவது? ஆகையால் அவனைப் போகச் சொல்லி விட்டு காரை ஷெட்டுக்குள்ளேயே தள்ளிப் பூட்டி வைத்தேன்.

ஒரு நாள் நள்ளிரவு. மோட்டார்த் திருடர்கள் இருவர் – அயலூர் வாசிகளாகத் தானிருக்க வேண்டும் – என் கார் ஷெட்டைத் திறந்து கொண்டிருந்தார்கள். நான் இதை மாடியில் இருந்தபடியே ஜன்னல் வழியாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் காரை வெளியே தள்ளிக் கொண்டு வந்து, தாங்கள் கொண்டு வந்திருந்த பெட்ரோலை அதற்குள் ஊற்றினார்கள். பிறகு அவர்கள் காரை 'ஸ்டார்ட்' பண்ணப் பகீரதப் பிரயத்தனம் செய்தார்கள். பலிக்கவில்லை. கொஞ்ச தூரம் தள்ளிக் கொண்டு போய்ப் பார்த்தார்கள். அதுவும் பயனில்லை. அப்படியே பெட்ரோலோடு காரை நடுவழியில் விட்டு விட்டுப் போய் விட்டார்கள்.

அன்று முதல் நான் கார் ஷெட்டைப் பூட்டுவதே கிடையாது. ஆனாலும் என்ன? கார் நின்ற இடத்தைவிட்டு அசையவேயில்லை. எனக்கு இதைப் பற்றி ஒரே கவலையாகப் போய் விட்டது. ஒரு நாள் சுந்தரியிடம் இதைச் சொல்லி வருத்தப்பட்டேன்.

அதற்கு அவள், "காரை நாம் விற்பானேன்? நமக்கு ஒரு பெண் பிறந்தால், அதற்கு வரக்கூடிய மாப்பிள்ளையின் சாமர்த்தியத்தைத் தெரிந்து கொள்ள இந்தக் கார் இருக்கட்டுமே" என்றாள். அது சரியென்றே எனக்குப் பட்டது! ஆகையால் அந்தக் காரை ஷெட்டிலேயே இன்னும் பத்திரமாக நிறுத்தி வைத்திருக்கிறேன்.



7. கானல் வரி

(தொடர்ச்சி)

காவேரி ஆற்றின் சிறப்பு

(25—26—27)

கோவலன் பாடத் தொடங்கியபோது முதலில் காவேரி ஆற்றின் சிறப்பைப் பற்றிப் பாடினான். அது போலவே மாதவியும் காவேரியின் மகிமையை முதலில் பாடுகின்றாள். காவேரியை ஒரு பெண்ணாகக் கூறினாள். ஆற்றங்கரையில் வண்டுகள் ஒலிப்பது, கை வளையல்களின் ஒலி போல் இருந்தது. நீரில் மிதந்து வந்த பூக்கள் பெண்களின் ஆடை போல் விளங்கிற்று. ஆற்றில் உள்ள கயல் மீன்கள், பெண்களின் விழிகள் போலப் பிரகாசித்தன். இந்தக் கோலத்துடன் ஆறு ஓடுவது ஒரு பெண் எக்களிப்புடன் அசைந்து நடப்பதுபோல இருந்தது. இப்படி இவள் களித்து நடப்பதற்கு அவள் கணவனான சோழ மன்னனின் செங்கோல்தான் காரணம். ஆற்றின் இரு பக்கங்களிலு முள்ள பூஞ்சோலைகளில் மயில்கள் ஆடவும், குயில்கள் இசை பாடவும், ஆற்றில் மிதந்து போகும் அழகான மாலைகள் அசையவும் நீ களிப்புற்று நடப்பது உன் கணவனுடைய வேலின் திறமையால்த்தான். சூரியன் கடல் ஆவியை இழுத்து மேகமாக்கி மழை பெய்வதால் நீ வெள்ளமாகப் பெருகுகின்றாய். அந்தச் சூரிய குலத்தில் தோன்றிய சோழ மன்னனின் செங்கோல் வலிமையால் நீ எந்நாளும் வற்றாமல் ஊழிக்காலம் அளவும் மக்களைப் பாதுகாக்கின்ற பேருதவியைச் செய்வாயாக. உன் கணவனான சோழ மன்னனின் அருளால் அவன் குடிகளுக்கு நீ தாயாகி பேருதவி செய்து வாழ்வாயாக. என்று இவ்வாறெல்லாம் காவேரி யாற்றின் சிறப்பை எடுத்துப் பாடினாள். கோவலன் இதே விஷயத்தைப் பாடியபோது காவேரியின் கணவனாகிய சோழன் கங்கை குமரி என்னும் மற்றப் பெண்கள் வசிக்கும் நாடுகளை நாடிப்போன போதிலும் அவள் பிணங்காமலிருந்தாள்; அது கற்புடைய மாதின் மேன்மையான குணம் என்று காவேரியைப் புகழ்ந்தான். மாதவியோ காவேரியின் சிறப்பெல்லாம் அவள் கண

வனுடைய புகழாலும் வலிமையாலுந்தான் என்று கணவனுடைய மேம்பாட்டைக் குறித்துக் காட்டினள்.

25\. மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப,
மணிப்பூ ஆடை அது போர்த்துக்,
கரும் கயல் கண் விழித்து ஒல்கி,
நடந்தாய் வாழி காவேரி!
கரும் கயல் கண் விழித்து ஒல்கி,
நடந்த வெல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி!

26\. பூவர் சோலை மயில் ஆலப்,
புரிந்து குயில்கள் இசை பாடக்,
காமர் மாலை அருகு அசைய,
நடந்தாய் வாழி காவேரி!
காமர் மாலை அருகு அசைய,
நடந்த வெல்லாம் நின் கணவன்
நாம வேலின் திறம் கண்டே
அறிந்தேன் வாழி காவேரி.

27\. வாழி அவன் தன் வளநாடு,
மகவாய் வளர்க்கும் தாயாகி,
ஊழி உய்க்கும் பேர் உதவி
ஒழியாய் வாழி! காவேரி!
ஊழி உய்க்கும் பேர் உதவி
ஒழியாது ஒழுகல் உயிர் ஓம்பும்
ஆழி ஆள்வான் பகல் வெய்யோன்
அருளே வாழி காவேரி!

பதவுரை

25\. மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப — பக்கங்களில் வண்டுகள் சிறப்பாக ஆரவாரிக்க; மணிப்பூ ஆடை அது போர்த்து — அழகிய பூக்களால் ஆகிய ஆடையை அது போர்த்தி; கரும் கயல் கண் விழித்து — கரிய கயல் மீன்களாகிய கண்களால்ப் பார்த்து; ஒல்கி — நுடங்கி நுடங்கி; நடந்தாய் வாழி காவேரி —; கரும் கயல் கண் விழித்து ஒல்கி — கரிய கயல் மீன்களாகிய கண்களால்ப் பார்த்து நுடங்கி; நடந்த எல்லாம் நின் கணவன் —; திருந்து செங்கோல் வளையாமை — சிறந்த செங்கோல் முறை மாறுபடாமைதான் காரணமென்று; அறிந்தேன் வாழி காவேரி —;

26\. பூ ஆர் சோலை — பூக்கள் நிறைந்த சோலையில்; மயில் ஆல — மயில் கூவ; புரிந்து குயில்கள் இசைபாட — விரும்பு குயில்கள் இன்னிசையுடன் பாட; காமர் மாலை அருகு அசைய — அழகிய பூமாலை பக்கத்திலே புரள; நடந்தாய் வாழி காவேரி —; காமர் மாலை அருகு அசைய —; நடந்ததெல்லாம் —; நின் கணவன் —; நாம வேலின் திறம் கண்டே — அச்சம் தருகின்ற வேற்படையின் திறமையைக் கண்டுதான் என்று; அறிந்தேன் — நான் அறிந்து கொண்டேன்; வாழி காவேரி —;

27\. வாழி —; அவன் தன் வளநாடு — தன் கணவனான சோழனுடைய வளம் மிகுந்த நாட்டை; மகவாய் வளர்க்கும் தாயாகி —

தன்னுடைய பிள்ளைகள் போலக் கருதி வளர்க்கின்ற தாயுமாகி; ஊழி உய்க்கும் — ஊழிக் காலம் வரை காப்பாற்றுகின்ற; பேர் உதவி ஒழியாய் — பெரிய உதவியை நீ நீக்கமாட்டாய்; வாழி காவேரி —; ஊழி உய்க்கும் பேர் உதவி — ஊழிக்காலம் அளவும் பாதுகாக்கின்ற பேர் உதவியை; ஒழியாது ஒழுகல் — நீக்காமல் நடப்பதற்கு; உயிர் ஓம்பும் — உயிர்களைக் காக்கின்ற; ஆழி ஆள்வான் — ஆணைச் சக்கரத்தை ஆள்கின்றவனாகிய; பகல் வெய்யோன்— சூரியனுடைய குலத்தில் தோன்றியவனின்; அருளே — அருள்தான் காரணம். வாழிகாவேரி—;

ஆலுதல் — மயில் குயில்கள் கூவுதலுக்கு ஒரு பெயர்; ஆழி — தேரின் உருளை அல்லது அரசன் ஆணைச் சக்கரம்; வெய்யோன் — சூரியன்.

★

புகார் நகரின் சிறப்பு
(28—29—30)

மாதவி காவிரிப்பூம் பட்டினத்தின் சிறப்பைப் பாடுகின்றாள். நகரின் சிறப்பை எடுத்துச் சொல்லும்போது இந்நகரிலுள்ள பெண்கள் கபடமற்றவர் என்றும் அவர்களைத் தேடிவரும் தலைவர்கள் எளிதில் அவர்களை ஏமாற்றி விடுகிறார்கள் என்றும் கருத்துக் காணும்படி பாடுகின்றாள். புகார் நகரத்தின் செல்வ வளப்பை முதலில் எடுத்துச் சொல்லுகிறாள். கடலின் அலைகள் வெண் முத்துக்களைக் கரையில் கொண்டு வந்து சேர்த்து விட்டு கடற்கரைச் சோலையிலுள்ள பூக்களை எடுத்துக் கொண்டு போய் விடுகின்றது. அதாவது புகார் நகரத்தின் கடற்கரையோரத்தில் எங்கு பார்த்தாலும் விலையுயர்ந்த வெண் முத்துக்கள் சிந்திக்கிடக்கும்.

சோலைகளிலுள்ள புன்னை மரங்களில் பூக்கள் பூத்து மலர்ந்து நிறைந்திருக்கின்றன. அன்னப் பறவை ஒரு புன்னை மரத்தில் ஏறி உட்கார்ந்திருக்கிறது. அந்தத் தோற்றத்தைப் பார்த்தால் அன்னப் பறவை முழு நிலாவைப் போலவும் பூக்கள் வானத்திலுள்ள மீன்களைப் போலவும் இருக்கின்றன. இந்தத் தோற்றத்தைக் கண்டு உண்மையிலேயே ஆகாயத்தில் நிலாத் தோன்றிற்று என்று நினைத்து ஆம்பல் பூத்து விட்டது. முழு நிலாக் காலத்தில் ஆம்பல் பூப்பது வழக்கம். புன்னை மரத்தின்மேல் இருக்கும் அன்னப் பறவையை முழு நிலா என்று நினைத்து ஆம்பல் பூத்து விட்டது. இத்தகைய அறியாமை உள்ள ஊர்தான் புகாராகிய எங்கள் ஊர்.

கடற்கரை யோரத்தில் சிறு குழந்தைகள் வண்டலில் பாவை செய்து வைத்து விளையாடிக் கொண்டிருக்கின்றன. அலைகள் வந்து மோதி பாவைகளை அழித்து விட்டன. இதைக் கண்டு குழந்தைகளுக்கு அலையின்மேல் வெகு கோபம். அலைகள் மோதுவதைத் தடுக்க மண்ணை வாரி அலையின்மேல் வீசுகின்றார்கள் குழந்தைகள். கடலைக் கைமணலால் தடுக்க முடியும் என்று எண்ணும் பேதைக் குழந்தைகளை உடைய புகார்தான் எங்கள் ஊர்.

தலைவியைத் தேடி வரும் தலைவனைப் பரிகாசம் செய்யும் விதத்தில் பாடுகின்றாள். தலைவனைப் பார்த்துச் சொல்லுகின்றாள்: "நீ எங்கள் தலைவியை உண்மையான காதலோடு தேடி வரவில்லை. எங்கள் தலைவியின் பற்கள் முத்துக்களைப் போல இருக்கும். அப்பற்களை உண்மையான முத்துக்கள் என்று கருதி அவைகளை விலைக்கு வாங்கும் வர்த்தகன்போல் நீர் அவளிடம் வந்தீர். இப்படி வந்து அவளைக் களவு மணமும் செய்து கொண்டீர். ஏனென்றால் எங்கள் தலைவியின் உடல் மெலிந்து அவள் கை வளையல்கள் கழன்று விழுகின்றன. முறைப்படி மணம் செய்த ஒரு பெண்ணுக்கு கை வளையல்கள் இவ்விதம் கழன்று விழும் என்று நாங்கள் எப்படி அறிவோம்? கள் குடித்தவர் குடியாததுபோல் எவ்வளவு மறைத்தாலும் அவர் அறிவையும் கடந்து அவர்கள் கள் குடித்தது வெளியாகும். களவில் கூடிய எங்கள் தலைவி கூடாததுபோல் எவ்வளவு நடித்தாலும் அவள் உடலின் வேறுபாடு அவளை அறியாமல் களவு மணத்தை வெளிப்படுத்துகின்றது. இவ்விதமான நிலையில் எங்கள் கபடமற்ற தலைவியை ஏமாற்றி விட்டுப் போய் விட்டீரே"

28. தீம் கதிர் வாள் முகத்தாள் செவ்வாய்
மணி முறுவல் ஒவ்வா வேனும்,
வாங்கு நீர் முத்து என்று, வைகலும்
மால் மகன் போல் வருதிர் ஐய!
வீங்கு ஓதம் தந்து விளங்கு ஒளிய
வெண் முத்தம் விரை சூழ் கானல்
பூங்கோதை கொண்டு, விலைஞர் போல்
மீளும் புகாரே எம்மூர்.

29. மறையின் மணந்தாரை வன் பரதர்
பாக்கத்து மடவார் செங்கை
இறை வளைகள் தூற்றுவதை, ஏழையம்
எங்ஙனம் யாங்கு அறிகோம் ஐய!
நிறை மதியும் மீனும் என அன்னம்,
நீள் புன்னை அரும்பிப் பூத்த
பொறை மலி பூம் கொம்பு ஏற, வண்டு
ஆம்பல் ஊதும் புகாரே எம்மூர்.

30. உண்டாரை வெல் நறா ஊண் ஒளியாப்
பாக்கத்துள் உறை ஒன்று இன்றித்
தண்டா நோய் மாதர் தலைத் தருதி என்பது
யாங்கு அறிகோம் ஐய!
வண்டால் திரை அழிப்பக் கையால்
மணல் முகந்து மதிமேல் நீண்ட
புண்தோய் வேல் நீர்மல்க மாதர்
கடல் தூர்க்கும் புகாரே எம்மூர்.

பதவுரை

28. [தீம் கதிர் — இனிய கதிர்களை உடைய; வாள் முகத்தாள் — ஒளி பொருந்திய முகத்தினை உடைய என் தலைவியின்; செவ்வாய் மணி முறுவல் — சிவந்த வாயிலுள்ள அழகிய வெண் பற்களை; ஒவ்வா வேனும் — முத்துக்கள் ஒத்திருக்க மாட்டாவாயினும்; வாங்கு நீர் முத்து என்று — கடலில் விளைந்த முத்துக்கள் என்று அவற்றைப் புகழ்ந்து;

வைகலும் — நாள் தோறும்; மால் மகன் போல் — மயக்கம் கொண்ட ஒருவனைப் போல; வருதிர் ஐய — ஐயனே நீர் வருகின்றீர்; வீங்கு ஓதம் — பெரிய அலைகள்; விளங்கு ஒளிய வெண் முத்தம் தந்து — விளங்குகின்ற ஒளியை உடைய வெள்ளிய முத்துக்களைக் கொண்டு வந்து கரையில் சேர்த்து; விரை சூழ் கானல் — மணம் நிறைந்த சோலையிலுள்ள; பூம் கோதை கொண்டு — பூ மாலைகளைப் பெற்றுக்கொண்டு; விலைஞர் போல் மீளும் — பொருள் விலை செய்வோர் போல மீண்டு போகின்ற; புகாரே எம்மூர் —;

29. மறையின் மணந்தாரை — வேத முறைப்படி மணந்த தலைவனை; வன் பரதர் பாக்கத்து — வலிமையுள்ள வலைஞர்கள் வாழும் சேரியிலிருக்கும்; மடவார் செம் கை — பெண்களின் சிவந்த கையாகிய; இறைவளைகள் — முன் கையிலுள்ள வளையல்கள்; தூற்றுவதை — பழி தூற்றுவதை; ஏழையம் — இப்படித் தூற்றுமென்று ஏழையாகிய நாங்கள்; எங்ஙனம் யாங்கு அறிகோம் ஐய — எப்படி நாங்கள் தெரிந்து கொள்வோம்; நிறைமதியும் மீனும் என — முழு நிலாவும் விண் மீன்களும் என்று; அன்னம் — அன்னப் பறவையானது; நீள் புன்னை — நீண்ட புன்னை மரத்தில்; அரும்பிப் பூத்த — தோன்றி மலர்ந்த; பொறை மலி பூம் கொம்பு ஏற — சுமை நிறைந்த பூக்களையுடைய கொம்புகளில் ஏற; வண்டு ஆம்பல் ஊதும் — வண்டு ஊத ஆம்பல் மலர்கின்ற; புகாரே எம்மூர் —;

வண்டு ஆம்பலில் ஊதிற்று என்றால் ஆம்பல் மலர்ந்தது என்பதாகும்.

ஒரு பெண்ணைக் களவு மணம் செய்து கொண்டு, அவள் கணவன் பிரிந்து போய் விட்டால், பிரிவாற்றாமையால் அவள் உடல் மெலிந்து அவளுடைய கைவளையல்கள் கழன்று வீழ்ந்து ஒலி செய்யுமென்றும், அப்படி உண்டாகும் ஒலி, களவு மணம் நிகழ்ந்ததை எல்லோரும் அறியும்படி தூற்றுமென்றும் தமிழ் இலக்கியங்களில் சொல்வது வழக்கம்.

30. உண்டாரை வெல் நறா — குடித்தவர்களின் அறிவை வெல்லுகின்ற கள்; ஊண் ஒழியா பாக்கத்து — அவ்விதம் கள் உண்டதை மறைக்காத அச்சேரியில்; உரை ஒன்று இன்றி — தீர்க்கும் மருந்து ஒன்று இல்லாமல்; தண்டா நோய் — தணியாத காம நோயை; மாதர் தலைத் தருதி என்பது — என் தலைவிக்குத் தருகின்றீர் என்பதை; யாங்கு அறிகோம் ஐய — எப்படி நாங்கள் அறிவோம்; வண்டால்— குழந்தைகள் செய்யும் வண்டற் பாவைகளை; திரை அழிப்ப — கடல் அலை வந்து மோதி அழிக்க; கையால் மணல் முகந்து — கைகளால் மணலை அள்ளி; மதிமேல் — தங்கள் முகத்தின் மேல்; நீண்ட புண் தோய் வேல் — நீண்டு ஓடியிருக்கின்ற புண்ணின் கறைபடிந்த வேல் போன்ற கண்கள்; நீர் மல்க — கண்ணீரைச் சொரிய; மாதர் கடல் தூர்க்கும் — குழந்தைகள் கடலைத் தூர்க்கின்ற; புகாரே எம்மூர் —;]

மண் பொம்மைகளைக் கடல் அலை அழிக்கும்போது, குழந்தைகளுக்குக் கோபமும், துக்கமும் உண்டாகின்றன. துக்கத்தால் அவர்களுடைய கண்கள் சிவந்து, கண்ணீர் பெருகுகின்றது. கோபத்தால் மண்ணை வாரி அலைகளின் மேல் வீசுகின்றார்கள்.

(தொடரும்)

திரிமூர்த்திமலை

நா. நாகலிங்கம்

திரிமூர்த்திமலைக்கு ஒருதரம் போய் வரவேண்டும் என்று எனக்கு வெகுநாட்களாக இருந்து வந்த ஆர்வமும், அம்மலையிலேயே நடைபெறவிருந்த நண்பருடைய திருமணமும் சேர்ந்து கம்புக்குக் களைவெட்டப்போய், தம்பிக்கும் பெண் பார்த்த கதையாய் என் திரிமூர்த்திமலைப் பிரயாணத்தை ஊர்ஜிதம் செய்தது. ரயில் பிரயாணத்தைக் குறையுங்கள் என்பதைப்பற்றி சித்திரம் நிறைந்த 'தொடர்கதைகள்' பத்திரிகைகளிலெல்லாம் பிரமாதமாய் வெளிவந்து கொண்டிருப்பதை முன்னிட்டு 'என் பிரயாணம் அவசியமானதுதானா?' என்று என்னை நானே பத்துத்தடவை கேட்டுக் கொண்டபிறகே, கோவையிலிருந்து உடுமலைப்பேட்டை வரை போக வேண்டியிருந்த எனது மிகச்சிறிய ரயில் பிரயாணம் ஊர்ஜிதமாயிற்று.

கோவை ஜங்ஷனில் அதிக சிரமப்படாமல் கிடைத்த டிக்கட்டுகளையும், கையிலிருந்த அன்றைய தினசரி, வாரப்பத்திரிகைகளையும், காட்டி அதுவரை நின்றும், உட்கார்ந்தும் சிரமப்பட்டுவந்த சிலரது ஜீவகாருண்யத்தின் காரணமாக நானும் என் நண்பர்களும் உட்கார்ந்திருப்பதுபோல் பாவனையில் நின்று கொள்ள இடம் தேடிக்கொண்டோம்.

எங்கள் சிரமத்தைக் குறைக்க வேண்டும் என்ற காரணத்தினால் தானோ என்னவோ, உடுமலைப் பேட்டைக்குப் போகவேண்டாம்; பொள்ளாச்சியில் இறங்கி மாப்பிள்ளையின் ஊராகிய சித்தூருக்குச்சென்று பிறகு அங்கிருந்து மலைக்குச் செல்லவேண்டுமென்று இடையில் தகவல் கிடைத்தது. இதுவும் ஒரு நன்மைக்கே என்று நினைத்தபடி பொள்ளாச்சி சென்று, அன்று பிற்பகல் நான்கு மணி சுமாருக்கு சித்தூர் போய்ச் சேர்ந்தோம்.

* * *

இரவு ஒன்பது மணியிருக்கும். திரிமூர்த்திமலைக்குப் புறப்படுவதற்காக எழெட்டு இரட்டைமாட்டு வண்டிகள் வரிசையாய் நின்று கொண்டிருந்தன. நல்ல நிலாக் காலமாய் இருந்தும் வானம் மப்புமந்தாரமாய் இருந்தபடியால் எங்கும் இருளின் சாயை படிந்திருந்தது. இடையிடையே தெரித்த மின்னல், மழை வரப்போவதை எச்சரிப்பது போலிருந்தது. முதல் நாள் பெய்த மழை, 'எங்கு இன்றும் மழை வந்துவிடபோகிறதோ' என்ற பயத்தை மாப்பிள்ளை வீட்டாரிடம் ஒரு டிகிரி அதிகமாகவே ஏற்படுத்தியிருந்ததால் பிரயாண ஏற்பாடுகள் வெகு ஜரூராக நடந்தன. அப்படியும் வண்டிகள் புறப்படுவதற்குள்ளாக லேசாகத் தூற்றல் விழ ஆரம்பித்துவிட்டது.

மாப்பிள்ளையின் விசேஷ கவனத்தினால் எங்களுக்குக் கிடைத்த அருமையான இரட்டைமாட்டு வண்டியில், காரில் செல்வது போன்ற சௌகரியத்துடன் மலைக்குப் புறப்பட்டோம். ஆனால்

வெகு சீக்கிரம் அந்த சௌகரியத்தையும் நிம்மதியையும் இழக்க வேண்டிவரும் என்று அப்போது நாங்கள் நினைக்கவில்லை.

தூற்றல் வலுத்து மழையாகி, கொட்டு கொட்டென்று கொட்ட ஆரம்பித்தது. 'அடாத மழை பெய்தாலும் விடாது வண்டியோட்டுவோம்' என்பதுபோல் அந்த மழையையும் குளிரையும் சட்டை செய்யாது வண்டிக்காரர்கள் தொடர்ந்து வண்டிகளை ஓட்ட ஆரம்பித்தார்கள். அதை உணர்ந்ததுபோல் மாடுகள் நடைதளர்ந்தும் முன் வைத்த காலைப் பின் வைக்காமல் நிலைமையைச் சமாளித்து நடக்க ஆரம்பித்தன. இடையிடையே கேட்ட பேச்சுக்களிலிருந்து சித்தூருக்கும் திரிமூர்த்திமலைக்கும் இருபது மைல் என்றும், பெரியமழை வந்தாலும் தங்குவதற்கு மலையில் மண்டபமும், சத்திரமும் இருக்கிறது என்று தெரிந்தது.

"தங்குவது பற்றிப்பிறகு பார்த்துக் கொள்ளலாம், இந்த மழையிலும் இருளிலும் இருபது மைல் சென்று மலையேறுவது எப்படி என்றல்லவா இப்போது திகைப்பாய் இருக்கிறது" என்றார் ஒரு நண்பர்.

"ஆமாம் அதுதான் நமது இப்போதைய பிரச்சனை" என்றார் மற்றொரு நண்பர்.

"இப்பிரச்சனையை இப்போது மனப்பூர்வமாய் இந்த வண்டிக்காரரிடம் விட்டுவிடுவோம். பிறகு அவர் விட்டவழி என்றேன் நான்.

வேறு வழியில்லாததால் யோசனை அங்கீகரிக்கப்பட்டு உரிய இடத்தில் விடப்பட்டது. அந்த நிம்மதியில் எங்கள் வண்டியிலிருந்து மெல்லமெல்ல சங்கீதமும் கிளம்ப ஆரம்பித்தது. சங்கீதத்தின் காரணமாக ககன மண்டலத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்த எங்களை, "ஸார் கொஞ்சம் இறங்கிக்கிறீங்களா?" என்ற வண்டிக்காரரின் குரல் பூவுலகத்திற்குக் கொண்டுவந்து, "என்னப்பா?" என்று கேட்க வைத்தது.

"பள்ளம், சேறு ஜாஸ்தி. மாடு இழுக்காதுங்கோ" என்றார் வண்டிக்காரர்.

நல்ல வேளையாக, 'கொஞ்சம் மாட்டை இழுக்கிறீங்களா? என்று கேட்காமல் வண்டியிலிருந்து இறங்கச் சொன்னதோடு விட்டாரே என்பதில் எங்களுக்கு வெகு திருப்தி.

வண்டியை விட்டு கீழே இறங்கினால் ஒரே சேறும் சகதியும். அந்த ஆபத்திலிருந்து தப்புவதற்காக வேஷ்டிகளை சுருட்டிக் கட்டிக்கொண்டு பள்ளத்திலிறங்கி மேடேறி வண்டியைப் பார்த்தோம். ஆனால் என்ன ஆச்சரியம் வண்டியைக் காணவில்லை. சரிசரி, வண்டிக்காரர் இன்னும் சற்று முன்னால் சென்று சேறு இல்லாத இடத்தில் வண்டியை நிறுத்தியிருப்பார் என்று நினைத்துக் கொண்டு வண்டிகள் போன வழியே நடக்க ஆரம்பித்தோம்.

வழி என்று சொன்னேன். தவறு. முற்றிலும் தவறு. ஏமாந்தால் இருவரிசைப் பல்லையும் கழற்றக் கூடியதும், தவறினால் உடும்பு போல் முழங்கால் வரை பிடித்துக் கொள்ளக் கூடியதுமான அந்த சகதிக் கடலை, "வழி" என்று நான் ஒப்புக் கொண்டாலும் நிச்சயமாய் என் கால்கள் ஒப்புக் கொள்ளாது. 'தட்டுக் கெட்டுத் தடுமாறி' என்று சொல்கிறார்களே, அதை அனுபவத்தில் அப்போது தான் உணர்ந்தேன்.

இந்த உண்மையை அனுபவ வாயிலாக வண்டிக்காரரை "வாழ்த்திய" படி ஒன்றறை மைல் தூரம் நீடித்திருந்த அந்த சகதிக் கடலைத் தாண்டி, ஒரு வழியாய் எங்கள் வண்டியைத் தேடிக் கண்டு பிடித்து தளி என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம்.

இந்தத் தளி, பாளையக்காரர்கள் என்று சரித்திரப் பிரசித்தி பெற்ற வர்களுக்கு ஒரு காலத்தில் முக்கிய இடமாயிருந்த தாகவும், இன்றும் அந்த வம்சத்தைச் சேர்ந்த இரண்டொரு 'குலக் கொழுந்து'கள் அங்கு இருப்பதாகவும் கேள்வி. இன்னும், தாராபுரம் வேலாயுத பண்டிதரென்பவர் திரிமூர்த்திமலையைப்பற்றி தாம் இயற்றியிருக்கும் திரிமூர்த்திமலைப் புராணத்திலே இந்த தளியைப் பற்றி, 'தளி நகரச் சிறப்பு' என்பதாக ஒரு படலம் பாடியிருக்கிறுர். இத்தனை சிறப்பு வாய்ந்ததும், அரிச்சந்திரனும், நளனும் (காலஞ் சென்று விட்ட அந்த ஊர் அதிகாரிகளின் பெயர்கள்) அதிகாரம் செலுத்தியதுமான அந்த தளி நகரை (?) ப் பார்க்காமல் போகிறுேமே என்று எனக்கு உள்ளூர வருத்தம் தான். என்ன செய்கிறது? 'போகிற போக்கில்' இதையெல்லாம் பார்க்க முடியுமா? என்று எனக்கு நானே சமாதானம் சொல்லிக் கொண்டு வழியின் மேல் விழியைத் திருப்பினேன்.

எங்கும் பரந்திருந்த பனி மண்டலத்துக்கிடையே கிழக்கு வெளுக்க ஆரம்பித்தது. சிலு சிலு வென்று அடித்த காற்றும், பறவைகளின் உதயகானமும் பரவச மூட்டின. வழி நெடுக 'மரம் போல்' நின்றிருந்த மரங்கள் கூட மெல்லிய காற்றைக் காரணமாக்கி, தம் உடலைக் குலுக்கி கண்ணீரைச் சொட்டுச் சொட்டாய் வடித்து தங்கள் ஆனந்தத்தை வெளிப் படுத்தின. இவற்றை யெல்லாம் துளிகூட சட்டை செய்யாமல் வழி நெடுகத் தவளைகள் தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருந்தன!

வண்டிக் குள்ளிருந்தவர்களின் முனகல்களைக் கேட்டுத்தானே என்னவோ திடீரென்று வண்டிக்காரர் "இன்னும் ஒரே ஒரு மைல் தானுங்க" என்ருர். வண்டிக்காரரின் வாக்கியத்தால் முனகல் நின்றது. ஆனல் பிசுபிசு வென்று தூறிக்கொண்டிருந்த மழை மட்டும் நிற்கவில்லை.

வெள்ளத்தின் போது வண்டி மாடுகளைக்கூட அடித்துப் போகக் கூடிய சக்தி வாய்ந்த இரண்டு மூன்று காட்டுப் பள்ளங்களை யெல்லாம் மெல்ல மெல்லக் கடந்து கடைசியாக திரிமூர்த்தி மலையின் அடிவாரத்துக்கு வந்து சேர்ந்தோம். அடிவாரம் வந்ததும் மலையேறுவதுதானே வழக்கம்? ஆனல் இங்கு அப்படியில்லை. அடிவாரமே மலையாகி விடுகிறது.

அடிவாரத்துக்கு அரை மைல் முன்னலிருந்தே ஒரு காலத்தில் பாதையின் இருபுறமும் மரஞ்செடி கொடிகள் அடர்ந்த கானகம் இருந்ததாகவும், அதை இப்போது அழித்து விட்டார்களென்றும், இல்லாவிட்டால் இருண்ட அந்தக் கானகத்தினூடே ஒன்றின்பின் ஒன்ருக வண்டிகள் வரிசையாகப் போவதே ஒரு அருமையான காட்சியாயிருக்கும் என்றும் சில அனுபவஸ்தர்கள் வர்ணித்தார்கள்.

காணக் கிடைக்காத அந்தக் காட்சிகளையெல்லாம் விட்டு விட்டு காணக் கிடைத்த காட்சிகளை மட்டும் பார்த்துக் கொண்டு வந்தோம். அடடா! விண்ணை இடி

க்கும் வெண்பனி தோய்ந்த மலைச் சிகரங்களும், வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்த மரங்களும், பார்க்கு மிடமெங்கும் நீக்கமற நிறைந்திருந்த பசுஞ்செடி, கொடி களும் பரவச மூட்டின! அவற் றைப் பார்த்தபடி நூற்றுக்கா லல் லாத ஒரு பெரிய கல் மண்டபத் திற்கு வந்தோம்.

மலைக்குப் போகும் யாத்ரீகர் களுக்கு மழை காலத்திலும் சரி, வெயில் காலத்திலும் சரி, இருக்க வும் சமையல் செய்து சாப்பிடவும் அபயப் பிரதானம் கொடுத்து வரும் அந்த மண்டபத்தில் நின்ற படி மழையின் காரணமாகக் கரை புரண்டு ஓடிய பாலாற்றின் வெள் ளத்தையும், வேகத்தையும் கண்டு வியந்து நின்றோம். மேநிலத் திருந்து வேகமாய் வீழ்ந்து, சம நிலந்தன்னில் சாந்தமாய் தவழ்ந்து தெளிந்து சான்றவர்தம் சிந்தை போல் சென்ற அந்த ஆற்றின் அழகை நான் எப்படித்தான் வர் ணிக்கட்டும் போங்கள்!

மலரும், தழையும், மட்டையும், கட்டையும் வாரிவரும் இப்பா லாறு, தோணிநதி என்ற பெயரால் புராணத்தில் குறிப்பிடப்படுகிறது.

கல் மண்டபத்திற்கு நேர் எதிரே கீழாக இருபது முப்பது படிகள் இறங்கினல் பலமான அஸ்திவாரத் தோடு கூடிய ஒரு கருட கம்பம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தி லேயே சற்று தூரத்தில் ஒரு சிறிய அழகான வ்சந்த மண்டபம். சுவாமியை அங்கு எழுந்தருளச் செய்து அபிஷேக அலங்கார ஆராதனைகள் செய்வதற்கும், பக்தகோடிகள் சுவாமியைக் கண் குளிரக் கண்டு தரிசிப்பதற்கும் மிக மிக வசதியான இடம். ஆனல் அங்கு எழுந்தருளுவதற் கான உற்சவமூர்த்தியைக் காண முடியவில்லை. ஒரு வேளை உற்சவ மூர்த்தியே இல்லைபோலும்!

வசந்த மண்டபத்திற்குப் பக் கத்திலேயே பாலாற்றைப் பார்த்த படி பலமான கற்கோவிலுக்குள் வீற்றிருக்கிறுர் வினைதீர்க்கும் விநாயகப் பெருமான். விநாயகர் கோவிலுக்கு அடுத்தாற்போல, வரும் வழியைப் பார்த்தபடி ஒரு நீண்டு உருண்ட, இன்னும் சற்று விளக்கமாகச் சொன்னல், கொழுக்கட்டை போன்ற — பாறையொன்று கொஞ்சம் சரிந் தாற்போல் நிற்கிறது. அதைச் சுற்றி வளைத்துச்செல்லும் பாலாறு அதை ஒரு தீவு ஆக்கி விடுகிறது. சரிந்த அப்பாறையில், அந்த மலை யின் பெயருக்கும் மகத்துவத்திற் கும் மூல காரணஸ்தர்களான பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய திரிமூர்த்திகளும் ஒன்றுசேர, வெவ்வேறு கோணங்களில் வீற் றிருக்கிறுர்கள். இந்தத் திரிமூர்த் திகளுக்குத்தான் பூஜை, உற்சவம் ஆகியவைகள் எல்லாம்.

"அந்தத் திரிமூர்த்திகளே ஒன்று சேர்ந்து வந்தாலும் சரி, நடக் காது." (எது என்பதைப் பற்றி இப்போது ஆராய வேண்டாம்.) என்று பலர் சொல்லக் கேட்டிருக் கிறோம். அப்பேர்ப்பட்ட திரி மூர்த்திகளும் இங்கு ஒன்றுசேர இருப்பது இந்த மலைக்கே ஒரு தனிச்சிறப்பு. இதன் காரணமா கத்தானே என்னவோ இங்கு நடக்கும் கல்யாணங்களுக்குக் கணக்கு வழக்கில்லை. நாங்கள் போயிருந்தபோது—எங்கள் மாப் பிள்ளை நண்பரையும் சேர்த்து— அந்தக் கொட்டும் மழையில் கிர கஸ்தர்களான பிரம்மச்சாரிகள் மொத்தம் ஐந்துபேர். பிரமாத மான கொட்டு முழக்கோ, ஊர்

வலமோ, தேங்காய் பழ விநியோகமோ இல்லாமல் தெய்வ சாட்சியாக, இந்த யுத்தகால சிக்கனத்திற் கேற்றபடி செலவைக் குறைத்து, 'வெற்றிக்கடன் பத்திரங்கள்' வாங்கக்கூடியபடி, ரத்தினச் சுருக்கமாகக் கல்யாணத்தை முடிக்கக்கூடிய இடங்களில் இந்தத் திரிமூர்த்திமலை பிரதானமானது.

பிரதானம் என்றதும் இந்த மலையின் பிரதாபம் நினைவுக்கு வருகிறது. விசுவாமித்திரரின் தபோபலத்தால் பிரத்தியேக சுவர்க்க பதவியடைந்த திரிசங்கு; பதியையும், பாலனையும், படைத்த நிதியையும், பத்தினியையும் போதாததற்குத் தன்னையும் இழந்து சத்தியத்தைக் காப்பாற்றிய அரிச்சந்திரன்; சூதாட்டத்தின் நன்மை, தீமையை உலகிற்கு விளக்கிய நளன்; பொறுமையின் பெருமையைப் புவியில் போதித்த தருமன் சகோதரர்கள்; கலைமகள், திருமகள், மலைமகள் ஆகிய மூவரையும் மாங்கல்ய பிக்ஷை கேட்க வைத்த பதிவிரதா ரத்தினம் அநசூயா, இத்யாதிகளெல்லாம் இம்மலைக்கு வந்து நீராடி, நேம நிஷ்டைகளுடன் பூஜித்து இத் திரி மூர்த்திகளையும் வழிபட்டு பேறு பெற்ற வரலாற்றை இம்மலையின் தல புராணத்தில் பரக்கக் காணலாம்.

பாலாற்றைத் தாண்டி, மலைமேல் செல்லும் பாதை வழியே ஒரு மைல் தூரத்தில் பிரம்மாவுக்குரிய ஒரு தீர்த்தமும், அங்கிருந்து கால் மைல் தூரத்தில் விஷ்ணுவுக்குரிய ஒரு தீர்த்தமும், அங்கிருந்து மேற்கொண்டு நானூற்று நாற்பது கஜ தூரத்தில் சிவனுக்குரிய ஒரு தீர்த்தமும் இருக்கிறது. இங்கே தான் பஞ்சலிங்கம் என்று சொல்லப்படும் இடமாகப்பட்டது இருக்கிறது. இங்கே பாலாறு மேலிருந்து கீழே நீர் வீழ்ச்சி போல் விழுகிறது. குளிப்பதற்கு வெகு சுகம். 'முதுகு வலி, இடுப்பு வலி, தலை வலி முதலிய வலிகள் இருந்த இடம் தெரியாமல் போய் விடும், இந்த நீர்வீழ்ச்சியில் குளித்தால்' என்கிறார்கள், தங்கள் வலிகளையெல்லாம் இந்த இடத்தில் பறிகொடுத்துவிட்ட சிலர். சமீப காலமாய் அடிக்கடி என்னை ஆட்கொண்டுவரும் முதுகுவலி, வயிற்றுவலி இவற்றையெல்லாம் இந்த நீர்வீழ்ச்சியில் பறிகொடுத்து விடுவது என்ற முடிவோடு தான் புறப்பட்டு வந்தேன். ஆனால், திரிமூர்த்தி மலைக்கே வந்தாலும் சரி, உன் எண்ணம் நிறைவேற விடமாட்டேன் என்பது போல் "பாவி" மழை தடுத்து விட்டது. பெருக்கெடுத் தோடிய பாலாற்றைத் தாண்டவே முடியாமலிருந்த நிலையில் பஞ்சலிங்கமாவது, நீர்வீழ்ச்சியாவது?

"அப்படியானால் சற்று முன்னே சொன்னதெல்லாம்?..." என்று அதோ, ஒரு சந்தேகப் பிரியர் கேட்பது காதில் விழுகிறது! அந்த சந்தேகப் பிரியருக்கு, 'அது கேள்விப்பட்ட விஷயம்' என்பதை விநயத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஞாயிற்றுக் கிழமைகளில் இங்கு சாதாரணமாகக் கூட்டம் அதிகம். ஆவணி மாதத்திய ஞாயிற்றுக் கிழமைகள் விசேஷமாகக் கொண்டாடப்படுகின்றன. எந்த நாளில் யார் வந்தாலும் மலைமேல் தங்குவதில்லை. (அங்கேயே வசிக்கும் மலைவாசிகளைத் தவிர) தங்குவோரை ஒரு வகைமலை ஜுரம் பற்றிக் கொள்ளும் என்பது தான் இதற்குக் கூறும் காரணம். இது எவ்வளவு தூரம்

உண்மை என்பது அவரவர்களின் நம்பிக்கையைப் பொறுத்தது.

இம்மலையில் வசிக்கும் மலசர்கள் மலசர்களிலேயே உயர்ந்தவர்கள் (உயரத்தில் அல்ல) என்றும், அவர்கள் சாதாரணமாய்த் தங்கள் இருப்பிடத்தை விட்டு பிறர் பார்க்க வருவது அபூர்வமென்றும், அவர்களுக்குள் பல கடுமையான சட்ட திட்டங்கள் உண்டு என்றும் பேசிக்கொண்டார்கள். ஆனால் அவர்களில் 'கழிசடையாகக் கருதப் பட்டவர்களோ என்று சந்தேகிக்கக் கூடிய வகையில் சில மலசப் பிரதிநிதிகள் தங்களுக்கே உரிய ஆடை, அணி, அலங்காரத்துடன் காட்சியளித்த தென்னவோ உண்மை.

இந்த மலைக்கு வந்து, ஒரு கண்டத்திலிருந்து (?) தப்பிப் பிழைத்த அன்பரொருவர், பிரதி வருஷமும் சித்திரை மாதம் முதல் ஞாயிற்றுக் கிழமையன்று இங்குள்ள மலசர்களுக்கெல்லாம் அன்னமும், ஆடையும் அளித்துவர நிரந்தரமான சாஸனம் எழுதி வைத்திருக்கிருர். இந்த தர்மம் இன்றும் நாளையும் ஒழுங்காக நடைபெற்று வருகிறது.

இப்போது கட்டுரையின் கடைசிக் கட்டத்திற்கு வந்து விட்டோம். அதோ! வண்டிகளெல்லாம் புறப்படத் தயாராகிவிட்டன! அடடா! நண்பர்கள் கூட வண்டியில் ஏறிக் கொண்டார்களே! இதோ நானும் புறப்பட்டு விட்டேன்.

போகிற போக்கில் ஒரே ஒரு வாக்கியம்: உங்களுக்கு தெய்வத்தின் மீது நம்பிக்கை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, பொழுது போவதே தெரியாமல் ஒரு நாளை இன்பமாகக் கழிப்பதற்காகவாவது அவசியம் ஒரு தடவை திரிமூர்த்திமலைக்குச் சென்று வாருங்கள்!



புத்தக ஆராய்ச்சி

★

பரிசு பெற்ற தமிழிசைப்பாடல்கள் முதல்த் தொகுதி.

ஸ்ரீ கா. சுப்பிரமணிய பிள்ளையின் 75 பக்கமுள்ள விரிவான முகவுரையுடன் கூடிய இப்புத்தகத்தில் 1941-ம் ஹூ செப்டம்பர் மீ த்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற தமிழ்ச் சங்கீதப் போட்டியில் வெற்றி பெற்ற ஸ்ரீ டி. லக்ஷ்மண பிள்ளை, ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, ஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரிகள், ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார், ஸ்ரீ பாபநாசம் சிவன் ஆகிய இந்த ஐந்து சாஹித்திய கர்த்தாக்களின் 46 கீர்த்தனங்கள் சுரதாளக் குறிப்புக்களோடு வெளியிடப் பட்டிருக்கின்றன. ஸ்ரீ மு. அருணாசலம் பிள்ளை அவர்களால் திருத்தம் செய்யப் பெற்றிருக்கும் இக்கீர்த்தனங்களுக்கு ஸ்ரீ வி. எஸ். கோமதி சங்கர ஐயர் அவர்கள் சுரதாளக் குறிப்புகள் எழுதியிருக்கிறார். தமிழில் நல்ல பாடல்கள் இல்லை என்று சொல்வோர்களுக்கும், தமிழ் அபிமானிகளுக்கும் இத்தொகுதி மிகவும் உபயோகமுள்ளது.

தமிழிசைப் பாடல்கள்: மூன்றாந் தொகுதி.

ஸ்ரீ நீலகண்ட சிவன், ஸ்ரீ டி. லக்ஷ்மண பிள்ளை, ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதி, ஸ்ரீ அச்சுத தாஸர், ஸ்ரீ வேதநாயகம் பிள்ளை, ஸ்ரீ அருணாசலக் கவி ஆகிய இந்த அறுவரது கீர்த்தனங்களில் எழுபத்தைந்தைத் தேர்ந் தெடுத்து சுரதாளக் குறிப்புகளுடன் இதில் வெளியிடப்பட்டிருக்கிறது.

தமிழிசைப் பாடல்கள்; ஏழாம் தொகுதி.

ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயத் தலைமை ஆசிரியரும், பிரபல எழுத்தாளருமாகிய ஸ்ரீ ம. ப. பெரியசாமி (பெ. தூரன்) அவர்களது சாஹித்யங்களில் எழுபத்தைந்தை ஸ்ரீ என். சிவராமகிருஷ்ண பாகவதரின் உதவியால் இசைப் படுத்தி சுரதாளக் குறிப்புகளோடு வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த மூன்று புத்தகங்களும் தமிழிசை இயக்க வெற்றியின் காரணமாய் உருப்பெற்ற அரிய முயற்சி. இப் புத்தகங்கள் அத்தியாவசியமாய் இருக்கவேண்டியவை. சிறந்த முறையில் வெளியிட்டிருக்கும் இப்புத்தகங்களின் வாயிலாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் தமிழுக்கும் சங்கீதத்திற்கும் மகத்தான தொண்டு செய்திருக்கிறார்கள்.

விலை குறிப்பிடாத இப்புத்தகங்கள் மூன்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கிடைக்கும்.

★

பேசும் படம் ஆண்டு மலர்: (*1944*) பாண்டிபஸார், தியாகராய நகர், சென்னை. விலை: ரூ. *2—0—0*

தன் பெயருக்கேற்ப, பல அழகிய பேசும் படங்களையும், சினிமா சம்பந்தப்பட்ட சில ருசிகரமான கட்டுரை கதைகளையும் தாங்கிய இம்மலர் அழகாக மலர்ந்திருக்கிறது.

"உமாபதி"



திரைகடல் ஓடியும்......

கே. விஜயராகவன்

'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்' என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஆனந்த முதலியார் அனுபவ வாயிலாக அதை மறுத்து வந்தார். சிறு வயதில் துர்ச்சனர்களாக இருந்தவர்கள் வயது வந்த பிறகு அதி மேதாவிகளாக மாறி விடுகிறார்கள் என்பது அவர் அபிப்பிராயம்.

அவருடைய திருக் குமாரன் கைலாசத்தைப் பற்றி அப்படித் தான் நினைத்திருந்தார். கைலாசம் ஒவ்வொரு வகுப்பிலும் சராசரி மூன்று வருஷங்களுக்குக் குறையாமல் இருந்து விட்டுத்தான் அடுத்த வகுப்புக்கு வருவது வழக்கம். இதைப் பற்றி பிறர் குறை சொல்வது அவருக்குக் கட்டோடு பிடிக்காது. 'பள்ளிப் படிப்பு புள்ளிக் குதவாது, ஏதோ உலகா சாரத்துக்காகப் படிக்கட்டுமே என்று விட்டிருக்கிறேன்' என்று சொல்லுவார்.

கைலாசம் பல வருஷங்கள் படித்து, பத்தாவது வகுப்பில் கரையேற முடியாது என்று தெரிந்த பிறகு தன்னுடைய படிப்பை நிறுத்திக் கொண்டான். அப்போதுதான் ஆனந்த முதலியார் உண்மையாகவே ஆனந்தப் பட்ட முதலியாராகக் காணப் பட்டார். உடனே அவர் தன் மகனைக் கூப்பிட்டுச் சொன்னார்: "அடே கைலாசம் எனக்குக் கையெழுத்து மட்டும் தான் போடத் தெரியும்; என் தகப்பனருக்கு அதுவும் கூடத் தெரியாது. ஆனால் நானும் என் தகப்பனரும் இந்தியா மட்டுமல்ல கடல் கடந்து சிங்கப்பூர், பர்மா முதலிய இடங்களுக்கும் போய் ஆயிரக்கணக்காகவும், லக்ஷக் கணக்காகவும் வியாபாரம் செய்து சம்பாதித்தோம். அதே போலத் தான் நீயும் 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற வாக்குப் படி மேலும் பொருளைத்தேட வேண்டும். நாங்கள் தேடி வைத்ததைச் செலவு செய்து சோம்பேரியாகப் போகக் கூடாது. லாபமோ நஷ்டமோ உன்னல் முடிந்ததைச் செய். கஷ்டம் வந்தபோதும் பிழைக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்." அவ்வளவு தான் நான் சொல்ல வேண்டியது. என்று தன் மகனுக்கு உபதேசம் செய்தார்.

கைலாசத்துக்கும் தகப்பனர் சொல்வது சரி என்று பட்டது. தன் வியாபாரத்துக்கும் உள்ளூருக்கும் ஒத்து வராது என்று சிங்கப்பூர், பர்மா முதலிய இடங்களுக்குச் சென்று வியாபாரம் நடத்த ஒப்புக் கொண்டான். ஆரம்பத்தில் வெளியூரில் சென்று வியாபாரம் நடத்துவதென்ருல் அனுபவம் வேண்டும். அங்கு உள்ளவர்களை நன்கு தெரிந்திருக்க வேண்டும். ஆனந்த முதலியாருக்கோ வீடு, வாசல், நிலம் புலம், இவற்றைப் பிரிந்து போக மனம் இல்லை. ஆகையால் தன்னுடைய நண்பருக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்து, நல்ல நாள் பார்த்து தன்னுடைய திருக் குமாரன் கைலாசத்தை அனுப்பி வைத்தார்.

கைலாசத்துக்கு தன் தகப்பனருடைய ஆப்த நண்பரின் வீட்டை, சிங்கப்பூரில் தேடிக் கண்டு பிடிப்பது மிகவும் சிரமமாகி விட்டது. வியாபாரமும் வேண்டாம் மண்ணங் கட்டியும் வேண்டாம் ஊருக்கே திரும்பிப் போய் விடலாம் என்று கூட நினைத்தான். இருந்தாலும் தைரியத்தை அவன் கை விடவில்லை. ஊரையாவது சுற்றிப் பார்க்கலாம் என்று அங்கேயே ஒரு ஓட்டலில் தங்கி விட்டான். ஒரு வாரத்துக்குப் பிறகு அவன் எதிர் பாராத விதமாக, 'சிங்கப்பூர் டைம்ஸ்' என்ற பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்த போது அதில் ஒரு விளம்பரத்தைக் கண்டான்.

'நன்ருகத் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த ஒரு குமாஸ்தா தேவை. சென்னை மாகாணத்தைச் சேர்ந்த

வராக இருந்தால் நல்லது' என்ற அந்த விளம்பரத்தின் கீழே பெயரும் விலாசமும் கொடுக்கப் பட்டிருந்தது. தவிர தன் தகப்பனாரின் நண்பருடைய பெயரும், அந்த விலாச தாரின் பெயரும் பொருந்தியிருந்தது. எதற்கும் போய்ப் பார்க்கலாம் என்ற துணிவுடன், அந்தப் பத்திரிகையையும் கையில்எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

துறை முகத்துக்குச் சற்று தூரத்தில் ஜன நெருக்கடி அதிகமில்லாத இடத்தில் ஒரு அழகான பங்களா. பங்களாவைச் சுற்றி அழகான தோட்டம். விதவிதமான பூச்செடிகளோடு பார்க்கப் பார்க்கக் குளிர்ச்சியாக இருந்தது. கைலாசம் அந்த அழகிலே மயங்கித் தயங்கி உள்ளே சென்ருன்.

'யாரது' என்ற அதிகாரக் குரலைக்கேட்டு திகைத்து நின்ருன். ஒரு இளம் பெண். பதினறு வயது இருக்கலாம். சாதாரண அழகு உடையவள் அல்ல. கவிகள் வர்ணிக்க வேண்டிய அழகைப் பெற்றவள். கைலாசம் இங்கு தன் தகப்பனாரின் நண்பரைத்தான் எதிர்பார்த்தான். ஆனல் நண்பருடைய வீட்டில் இவளைப் போன்ற 'ஒரு பேசும் பொற் சித்திரம்' இருப்பாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அவனுடைய தகப்பனாரும் அதைப்பற்றிச் சொல்லவில்லை. ஆனல் அவனுடைய தகப்பனர் ஒன்றுமட்டும் சொல்லியிருந்தார், 'பெண், சுற்றம், உறவு, குடி சூதாட்டம் இதெல்லாம் வியாபாரத்தின் விரோதிகள், ஆகையால் அவைகளைக் கண்ணெடுத்தும் பாராதே' என்பது. அவனுக்குத் திடீரென்று பேச முடியவில்லை.

'நீ என்ன ஊமையா?' என்று அவள் கேட்க, கைலாசம் தன் கையிலிருந்த பத்திரிகையை விரித்து விளம்பரம் இருந்த இடத்தைக் காட்டினன். சரிதான், 'ஊமைக்கு இங்கே வேலையில்லை, போ' என்றது அந்த அதிகாரக் குரல்.

என்னம்மா திரவியம், என்று கேட்டுக் கொண்டே வந்தார் ஒரு பெரியவர். அவருக்கு சுமார் நாற்பது வயதுக்குப் பக்கத்தில் இருக்கலாம். 'யாரோ, ஒரு ஊமை, உங்கள் விளம்பரத்தைப் பார்த்து விட்டு வந்திருக்கிருன், இதோ பாருங்கள் அவனை' என்று கைலாசம் இருந்த திக்கில் காட்டினுள்.

'யாரப்பா நீ' என்று கேட்டுக் கொண்டே அவர் பக்கத்தில் வந்தார். கைலாசம் படிப்பிலே கெட்டிக்காரன் இல்லைத்தான். ஆனலும் சொந்த ஊரில் அவனைப் போல போக்கிரி இல்லை என்று பேரெடுத்தவன். வாய்ப் பேச்சில் மட்டுமில்லை. கைவரிசையிலும் கூடத்தான். அவனைப்பற்றி குறை சொல்லவே யாரும் பயப்படுவார்கள். பயமறியாது வளர்ந்த இளங்கன்று அவன். தன்னுடைய ஊராக இருந்தால் அந்தப் பெண்ணின் அழகிய கண்களிலிருந்து கண்ணீர் மழை வரச் செய்திருப்பான். இங்கு மரியாதை குறுக்கிட்டது. அவர் பக்கத்தில் வந்ததும் கைலாசம் பழயபடி பத்திரிகையில் வந்த விளம்பரத்தைக் காட்டினன்.

"உன்னுடைய பெயரென்ன?"

"கைலாசம்"

"எந்த ஊரோ?"

"சென்னைப்பட்டணம்"

"உன்னுடைய தகப்பனர் பெயர்"

"ஆனந்த முதலியார்"

"அடே! ஆனந்த முதலியாரா?"

"ஆமாம்"

"முன்னே சிங்கப்பூரிலே"

"ஆமாம் ஆமாம்"

"அடே, அவர் என் உயிரான நண்பராச்சே!"

"அவர் தங்களுக்குக் கடிதம் கொடுத்திருக்கிறார்."

"தம்பி, முதல்லே அதைச் சொல்லாமே உட்டிட்டையே. வாப்பா வா, உள்ளே போகலாம்" என்று சொல்லி அவனை வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்றார்.

அந்தப் பெண் கொஞ்ச நேரம் இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதன் பிறகு அவளும் அவர்களைப் பின் தொடர்ந்து வீட்டிற்குள் சென்றாள்.

"அம்மா, திரவியம் இந்தப்பிள்ளை யாண்டன் வந்து என்னுடைய சிநேகிதர், ரொம்ப ரொம்ப நெருங்கிய சிநேகிதர்........."

"அதுதான் தெரியுதேப்பா, உங்கள் உபசரணையிலிருந்தே..."

"கைலாசம்! திரவியம் வந்து எனக்கு ஒரே பெண். அவளுடைய அம்மா இறக்கும் போது அவளுக்குப் பத்து வயது. இப்போது நானும், அவளும், சமையற்காரர்களும்தான் இந்த வீட்டில். அவள் தான் இந்த வீட்டுக்கு ராணி. அவளுக்கு ஒரு கார்......"

"அப்பா, வந்தவங்க, போனவங்க கிட்டே யெல்லாம் என்னைப்பத்தி ஏஞ் சொல்லறீங்க. வந்தவருக்கு வேலை உண்டா? இல்லையா? சொல்லி அனுப்புங்க."

"எம்மா, அவரு வந்து என் சிநேகிதருடைய பிள்ளை. வேலை இருக்கட்டும். வந்தவரை முதலில் உபசரிக்க வேண்டாமா?"

"உபசரியுங்க, உபசரியுங்க, நல்லா உபசரியுங்க" என்று சொல்லி விட்டு அவள் விர்ரென்று போய் விட்டாள்.

கைலாசம் தன் தந்தையின் கடிதத்தை எடுத்துக் கொடுத்தான். அதைப் படித்ததும் நண்பருக்கு மிகவும் திருப்தியாகி விட்டது. 'தம்பி, எனக்கும் ஒரு ஆள் தேவையாகத்தான் இருந்தது. இங்கு யாரையும் நம்புவதற்கு இல்லை. நல்ல சமயத்தில் நீ வந்தாய். அதுவும் எனக்கு நெருங்கிய நண்பருடைய பிள்ளை யாகி விட்டாய். வியாபாரத்தில் எனக்கு உன் உதவி மட்டும் இருந்தால் அதுவே போதும். ஒரு கை பார்த்துக் கொள்வேன்' என்று அடுக்கிக் கொண்டே போனார்.

கைலாசம் வந்து நாள், வாரம், மாதம், வருஷம் இப்படியே ஆகிக் கொண்டு வந்தது. வியாபார விஷயமாய் அடிக்கடி தந்தையின் நண்பரோடு வெளியே போய் விடுவான். வீட்டிற்கு வந்தால் தனியே தன் அறையில் உட்கார்ந்து, வரவு செலவுக் கணக்கை எழுதிக் கொண்டிருப்பான். அவனுக்கு அந்தப் பங்களாவில் எவ்விதமான தடங்கலும் இருக்கவில்லை. பங்களாவில் எந்த பாகத்துக்கு வேண்டுமானாலும் அவன் போகலாம் வரலாம். இருந்தாலும் அந்தப் பெண் மட்டும் இவனிடம் நடந்து கொள்ளும் விதம் சற்றும் பிடிக்கவில்லை. 'என்னதான் செல்வமிருந்தாலும் இத்தனை கர்வம் வேண்டாம்; அழகிய ரோஜாவோடு முள்ளும் இருப்பதைப் போல' என்று எண்ணினான்.

ஆனல் அவனுக்குமட்டும் ஒரு நம்பிக்கை இருந்தது. எப்படியும் அவள் அன்பைப்பெற்றுவிடலாம் என்பது. சமயம் கிடைத்தபோது அவளிடம் அவனகவே பேசினன். 'ஊமை உளறு வாயனகி விட்டானே' என்று அவளும் ஆச்சரியப்பட்டாள். பொழுதை எப்படிப் போக்குவதென்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த அவளுக்கு, இப்போது பொழுது போவதே தெரிவதில்லை. ஊர்ச் செய்திகள், உலகச் செய்திகள், புத்தகங்கள் இவற்றைப்பற்றியெல்லாம் கைலாசத்தின் ஓயாத பிரசங்கத்தை கேட்டுக் கொண்டிருப்பாள். கைலாசம் அவளிடம் பேசும்போது மரியாதையாகவே பேசுவான். அவனிடம் அவளுக்கு உள்ளூர அனுதாபமும், அன்பும் ஏற்பட்டிருந்தது. ஆனல் அவள் தன் சம்பிரதாயத்தை விட்டுக் கொடுக்காமலேயே வெளிக்கு நடந்து கொண்டாள். கைலாசத்திற்கு அவளுடைய நடத்தை வேடிக்கையாகவே இருந்தது. அவளுடைய கர்வத்தைப் போக்க அவன் நல்ல சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று அடுத்த வருஷம் யுத்தம் ஆரம்பமாயிற்று. மலேயா, சிங்கப்பூர் முதலிய இடங்கள் ஜப்பானியர்களின் குண்டு வீச்சுக்கு இலக்காக மாறியது. ஊரில் ஒரே ஆரவாரம். ஜனங்களின் கூக்குரல். வீடு, வாசல், சொத்து எல்லாவற்றையும் மறந்து ஜனங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முனைந்தார்கள். கைலாசத்துக்கு பெரிய திகைப்பு ஏற்பட்டு விட்டது. என்ன செய்வதென்று தெரியவில்லை. தன் தந்தையின் நண்பரோ தன் வீடு, வாசல், சொத்து இவற்றை விட்டு வர முடியாதென்று பிடிவாதம் செய்கிருர். நாளுக்கு நாள் குண்டு வீச்சு பலமாகிறது. தன் தந்தையின் பிடிவாதத்தைக் கண்டு திரவியங்கூட என்னவானலும் அங்கேயே தங்கிவிடுவது என்று தீர்மானித்தாள். கைலாசம் அவர்களுக்கு நயமாகவும், கெஞ்சுதலாகவும் சொல்லிப் பார்த்தான். அவர்கள் இணங்குவதாகத் தெரியவில்லை. கடைசியில் ஆபத்தில் அவர்களை விட்டுச் செல்வது தன் ஆண்மைக்குக் குறைவு என்று நினைத்து அங்கேயே தங்கி விட்டான்.

குண்டு வீச்சுக்கு அவர்கள் வீடு தப்பவில்லை. திரவியத்தின் தந்தை ஒரு நாள் எங்கோ சென்றவர் திரும்பவேயில்லை. தேடியும் கிடைக்கவில்லை. கைலாசமும், திரவியமும் வழி தெரியாமல் திகைத்தனர். திரவியம் அங்கேயே இப்பதாகப் பிடிவாதம் செய்தாள். ஆனல் தங்க வசதியும், உணவும் இல்லாமையால் வேறு வழியின்றி கைலாசத்தைப் பின் தொடர்ந்தாள். பலநாள் அங்கும் இங்கும் குண்டு வீச்சுக்களுக்குத் தப்பி கடலைக் கடந்து பர்மாவின் துறைமுகம் ஒன்றிற்கு வந்து சேர்ந்தார்கள். நல்லவேளையாக அப்போது ஒரு கப்பல் துறைமுகத்திலிருந்து கிளம்பத் தயாராக இருந்தது. அதுவும் சென்னைத் துறைமுகத்துக்குப் புறப்படுவதாக இருந்தது. உயிருக்கு அஞ்சி ஓடும் ஏழை மக்களுக்கு அக்கப்பல் தாராளமாக இடம் கொடுத்தது. கைலாசத்துக்கு ஏற்கனவே வியாபாரத்தின் மூலம் அக்கப்பலின் மாலுமிகள் பழக்கப் பட்டவர்களாக இருந்தபடியால், அவர்களுக்கு சௌகரியமாக இடம் கிடைத்தது. கப்பல் யுத்த மேகங்களுக்கிடையே வேகமாக நகர்ந்தது. கப்பலுக்கு உள்ளே ஜனக்கூட்

டத்தில் அடைபட்டிருக்க விரும்பாமல், கைலாசம் தனியாக மேல் தட்டுக்குக் கிளம்பினுன். அவனுடைய உள்ளத்தில் நூராயிரம் எண்ணங்கள் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. அவனுடைய சிந்தனைகள் எல்லாம் ஒரே தத்துவ மயமாக இருந்தன. வாழ்க்கையும், அதன் போக்கும் அவனுக்கு விநோதமாக இருந்தது. கடந்த மூன்று வருஷங்களில் அவனுக்குக் கிடைத்த அனுபவம் ஒரு சிறந்த பொக்கிஷமாக இருந்தது. தன் நண்பரின் முடிவைக் கேட்டால், தந்தை எவ்வளவு துக்கப்படுவார்? தான் வந்த சமயத்திலா அவருக்கு இந்தக் கதி நேர வேண்டும். அவரது திரண்ட செல்வமும் அவரும் நேற்று இருந்த இடத்தில் இன்று இல்லையே. என்ன உலகம்! என்று அதிசயப் பட்டான்.

வெகு நேரத்திற்குப் பிறகு திரவியம் கைலாசத்தைத் தேடிக் கொண்டு மேல் தட்டிற்கு வந்தாள். அங்கு அவன் ஆழ்ந்த யோசனையி லிருப்பதைக் கண்டாள். அவளுடைய மனம் எவ்வளவோ இப்போது மாறியிருந்தது. அவளிடம் குடி கொண்டிருந்த அகங்காரம் இப்போது இல்லை. கைலாசத்தினிடம் அன்பும், மரியாதையும் ஏற்பட்டது. அன்பு ஒன்று இல்லாவிட்டால் இந்த உலகத்தில் வாழ முடியாது என்பதை உணர்ந்தாள். கைலாசத்தின் பொறுமையும், ஆத்ம சக்தியும் அவள் உள்ளத்தை உருக்கி விட்டது. தூரத்தில் இருந்தே அவனை அதிக நேரம் கவனித்துக் கொண்டே இருந்தாள். அவ்னிடம் நெருங்கிப் பேசக்கூடத் தைரியமில்லை. தன் தந்தைக்குப்பின் ஆதரவு காட்டிய அந்த ஒப்பற்ற மனிதருக்கு என்ன கைம்மாறு செய்வதென்று யோசித்தாள். அவருக்கு வாழ்நாள் முழுதும் அடிமையாக இருந்தால்க்கூட ஈடு செய்ய முடியாதே என்று எண்ணினுள்.

அவர்களின் தத்துவ விசாரணை ஒருவாறு முடிந்தது. இருவரும் ஒரே சமயத்தில் திரும்பிப் பார்த்தார்கள். இருவருடைய கண்களும் சந்தித்தன. இருவருடைய உள்ளமும் ஒன்று பட்டிருந்தது.

அலைகடலைப் பிளந்து கொண்டு கப்பல் சென்னைத் துறைமுகத்துக்குச் சமீபத்தில் வந்து கொண்டிருந்தது.

* * *

ஆனந்த முதலியார் பத்திரிகைகளில் யுத்தச் செய்திகளைப் படித்து விட்டு அவதிப் பட்டுக் கொண்டிருந்தார். அவருடைய மனைவியின் புலம்பலைச் சகிக்க மாட்டாமல் அவர் சென்னைத் துறைமுகத்தையே கட்டிக் காத்து வந்தார். எப்படியாவது தன்மகன் திரும்பி வரவேண்டும், என்பது அவடைய ஆசை. கடைசியில் தன் மகனைக் கண்ட போது அவர் அடைந்த ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை. அவர் தன் நண்பருக்கு ஏற்பட்ட விபத்தைப்பற்றிக் கேட்ட போது அழுது விட்டார்.

அப்பா 'தாங்கள் திரை கடலோடியும் திரவியம் தேடு' என்று சொல்லி அனுப்பினீர்கள் அல்லவா? நான் வெறுங்கையோடு வரவில்லை, திரவியத்தோடு தான் வந்திருக்கிறேன். 'இதோ தங்கள் நண்பருடைய பெண் திரவியம்' என அருகிலிருந்த பெண்ணை அறிமுகப்படுத்திவைத்தான் கைலாசம்.

★

மலர் மணம்

முகப்புப் படம் :

திருச்சி தெப்பக் குளமும், மாதா கோவிலும் இரண்டறக் கலந்து நிற்கும் அருமைக் காட்சி இந்த இதழ் முகப்பை அலங்கரிக்கிறது. கிருஸ்தவ சகோதரர்கள் கோலாகலமாகக் கொண்டாடும் கிரிஸ்மஸ் பண்டிகையின் சந்தர்ப்பத்திலே 'வசந்த' த்திலும் இயற்கையாகவே இரண்டறக் கலக்கும் ஒரு அற்புதமான காட்சி அமைந்து விட்டது மிகப் பொருத்தமாக இருக்கிறதல்லவா ?

'நிலா' வைப் பற்றி நிலவின் குளிர்ச்சி பொங்க கவி இசைத்திருக்கும் அய்யாசாமி இயற்கைக் கவிஞர். அழகின் கதிர்கள் அவருடைய உள்ளத்தைத் தீண்டும் போதெல்லாம் அபூர்வ பாடல்கள் இசைத்து விடுகிறார் ! மனங்கனிந்து எழிலே ஒரு உருக்கொண்டு உன்னத வடிவுடன் பூத்ததே இந்த "நிலா".

கலைஞர்களுக்கு ஏற்படும் இதய தாகத்தைக் குறித்துக் கேள்விப் பட்டீர்கள். அந்த மாதிரி தாகத்துக்கு ஒரு மருந்து—அதாவது இதயப் பசிக்கு உகந்த மருந்தாக, நமது சிந்தனைச் சிற்பி ரா. நா. நல்விருந்து ஒன்று அளித்திருக்கிறார்.

" அண்ணன் செய்த உதவி" எனும் கதையை சி. ஆர். ராமசாமி மகோன்னதமான முறையில் சித்தரித்திருக்கிறார். வாழ்வின் பல கோணங்களையும் கலை அழகுடன் நோக்கினால் அல்லாமல் இம்மாதிரி உயர்ந்த சிருஷ்டி புனைவது சிரமம். எத்தனையோ விசேஷங்கள் இதில் அடங்கி யிருக்கின்றன. இக்கதையின் கடைசிப்பத்தியில் 'கோபாலன்' என்பதற்குப் பதில், 'தேசிகன்' என்று அச்சுப் பிழை விழுந்திருப்பது அந்த விசேஷங்களில் ஒன்றல்ல !

சீனாவின் மறு மலர்ச்சி வைபவத்தை கோ. நீ. அண்ணாமலை அழகுடன் தீட்டியிருக்கிறார். தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானால் மக்கள் மனப்பான்மை எந்தெந்த வகையில் வளம் பெற வேண்டும் என்பதற்கு அது ஒரு நல்ல உதாரணம்.

கடந்த கால சரித்திரத்தை ஆராய்ந்திருக்கும் "வில்லன்" தொடர்ந்து ரசமான ஆராய்ச்சியில் இறங்குவது அறிவுக்கு பெரிதும் விருந்தாக அமையும் என நம்பலாம்.

நமது ஹாஸ்ய ரசிக சிகாமணி "மாறன்" வழக்கம் போல் தமது அனுபவ உண்மைகளை எடுத்துச் சொல்ல ஆரம்பித்து விட்டார். "கார் விடு தூது" எங்கே அழைத்துச் செல்கிறதென்று சுவையுங்கள்.

"லட்சிய பூர்த்தி" யைப் புனைந்துள்ள வெ. ராம ராவ் தெய்வீகக் காதலின் சிறப்பை விளக்க முயற்சித்திருக்கிறார். பூ மழை பொழிந்தது போல் அழகாகப் பூத்துள்ள வர்ணனைகள் அவருடைய கவியுள்ளத்தின் மேதா விலாசத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன.

கவி, சி. எஸ். ஆர் சிந்தனைகள் எப்போதுமே கற்பனைச் சிறகு கொண்டு வான வெளியில் பறந்து பரவச அலைகளைப் பரப்பும் சக்தி பெற்றவை. இந்த இதழில் ஒரு கனிந்த பாடலை அமைத்திருக்கிறார் மற்ற விசேஷ அம்சங்களையும் பாருங்கள்.

—ஆசிரியர்

MORE INTENSIVE WAR

Equals

BIGGER BATTLES

Equals

GREATER CALLS ON

RED GROSS

Please thing of this and Subscribe Aagain

to

H. E. the Governor's War Fund.

Earmared ('RED GROSS')

மார்கழித் திருநாள்!



"கல்வியில் சிறந்தவன் கம்பன்" என்று சொல்கிறார்கள். எண்ணையிற் சிறந்தது எ. பி. ஆர். நல்லெண்ணை என்பதைச் சொல்ல வேண்டுமா?

'குற்றால அருவிக்கு இணை குவலயத்தில் ஏது?' அநுபவஸ்தர்கள் கூறுகிறார்கள். A. P. R. எண்ணையிலே நீராடிச் சுவைத்த அநுபவ சிகாமணிகளும் அவ்விதமே கூறுகிறார்கள்.

உங்கள் குடும்பத்துடன் உள்ளம் குளிர எங்கள் எ. பி. ஆர். நல்லெண்ணையை உபயோகித்து ஆனந்தக் கடலில் நீந்த வேண்டுமென்பதே எங்கள் ஆசை.

A. P. R. Oil Mills,

FORT, COIMBATORE.

R. L SUBRAMANIA CHETTY, *Mg. Secretary.*

புதிய கடை !! புதிய சரக்குகள் !!

கல்யாண காலங்களுக்கும் மற்ற விசேஷ காலங்களுக்கும்
வேண்டிய நானுவிதமான

ஜவுளி தினுசுகள்

வாங்குவதற்கு ஏற்ற இடம்

ஆர். பத்மனுப நாயுடு சன்ஸ்

ஜவுளி வியாபாரம் : : பெரிய கடைவீதி
ஜெமேஷா கோவில் சமீபம்,
கோயமுத்தூர்.

6. 7 8. 9 கெஜங்களில் எல்லாவிதமான சேலை ரகங்களும்,
ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி, வாயில் முதலிய ரகங்க
ளும் ஏராளமாக வந்திருக்கின்றன. தங்கள்
தேவைக்கு விஜயம் செய்யுங்கள்.

எல்லா நேர்த்தியான
★ வாசனைகளுக்கும்
அடிப்படையானது

மைசூர்

சந்தண எண்ணெய்

கவர்ன்மெண்ட் சேண்டல் வுட் ஆயில் பாக்டரி,
மைசூர்

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹ்மதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

உயர்ந்த பித்தளை வெங்கலப் பாத்திரங்களுக்கு
நம்பிக்கையான இடம்,

V. K. வெள்ளையப்ப செட்டியார்

பித்தளை தாமிரம் வியாபாரம் கடை வீதி, கோயமுத்தூர்.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', gents', Children's Underwear Sport Shirts etc.

S. Beemiah Chetty.

"WHITE SHOP" COIMBATORE

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்
களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம்
செய்யுங்கள்

ஆர்யவைத்தியர்

★

பி. வி. ராமவாரியர்

**ஆர்யவைத்ய
பார்மசி**

திருச்சி ரோடு கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக
அனுப்பி வைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

118. Oppanakara Street

Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR
To

**THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.**

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

K. B. R. JEWELLARY

BIG BAZAAR COIMBATORE.

A. N. Marudacha ettiar

AND

A. Krishnaswamy Chettiar

AGENTS

Messrs. Burmah Shell Oil Storage & Distribu g Co., of India Ltd.

COIMBATORE

B O C

BOC

Grades

DEPENDABLE

FIRM

FOR

Shell

Grades

THE PRODUCTS OF BURMAH SHELL

MOTOR SPIRITS : MOTOR OILS

GREASES : INDUSTRIAL

LUBRICANTS OF EVERY

DESCRIPTION

★

Fuel Oils : Candles : Helltox

Etc., Etc., Etc.

at the Vasanta Mills Press, and Published by
A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugn

ண்டைய நாட்களில் மோகலாய சக்கரவர்த்திகளின் கொலு மண்டப ஆரணங்குகள் காலைக் கதிரவனின் இளங்கதிரொளியில் ஆளிமார்கள் சூழ தங்களுக்கென்றே யுள்ள சிங்காரக் குளிர்பொய்கைகளில் நறுமணங்கமழும் தைலங்கள் தேய்த்து வந்தனர். தங்களது அழகிய மேனியை சுத்தம் செய்வதற்கு அன்று கள் க்ஷாரமண்ணை உபயோகித்து வந்தார்கள்! ஏனெனில். ளில் ஸோப்புகளே கிடையாது.

இன்றேவெனில், சகல சுக சௌகரியங்களும் பொருந்தியமைந்து ா ஹமாம் தானிருக்கிறதே — ஹமாமின் நுண்ணிய ஏராள நுரை த்தை நன்கு சுத்தம் செய்வதோடு பண்டைய ஜனங்கள் கனவிலும் வித்தறியாத ஓர் அலாதி இன்பத்தையு மளிக்கிறது.

ஹமாம்

டங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை
இலாகா.

பிக் பஜார், பாலக்காடு.

T. S. 4692